www.tamilarangam.net

සරිනිහර්
SARINIHAR
# சரிநிகர்
சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

இதழ்-132 ஒக். 09 - ஒக். 22, 1997 விலை ரூபா. 10.00

## ஜிகாத் வரலாறு

முன்னாள் ஜிகாத் அமைப்பாளர்

அலியார் மௌசூக் எழுதுகிறார்




## சிங்கள ஆணைக்குழு: இன்னொரு இனவாத யாத்திரை !



## பொலிஸ் காட்டுமிராண்டித்தனத்தை விசாரி !



## அம்பாறை: பொலிஸ் காடைத்தனம் !




## எங்கள் புதல்வர்கள் எங்கே ?

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




சரிநிகர்

இரு வாரங்களுக்கு ஒரு முறை

"'சரிநிகர் சமானமாக
வாழ்வமிந்த நாட்டிலே''
-பாரதி

**ஆசிரியர் குழு**
பாலகிருஷ்ணன்
சிவகுமார்
சரவணன்
எம்.கே.எம்.ஷகீப்
அரவிந்தன்
சி. செ.ராஜா
சிவகுருநாதன்
சேரன்

**வடிவமைப்பு**
ஏ.எம்.றஷ்மி

**வெளியிடுபவர்**
ச. பாலகிருஷ்ணன்
18/2, அலோ சாலை,
கொழும்பு - 03.

**அச்சுப்பதிவு**
நவமக அச்சகம்
334, காலி வீதி,
இரத்மலானை.

**ஆண்டு சந்தா விபரம்**
இலங்கை ரூபா 300/=

வெளிநாடு US $ 50
(தபாற்செலவு உட்பட)
காசுக்கட்டளை/ காசோலை
யாவும்
MIRJE என்ற பெயருக்கு
எழுதப்படல் வேண்டும்.

எல்லாத்தொடர்புகளுக்கும்
**ஆசிரியர்**
**சரிநிகர்**
**4, ஜயரத்ன வழி,**
**திம்பிரிகஸ்யாய,**
**கொழும்பு - 05.**

தொலைபேசி: 593615, 584380
தொலை மடல் : 594229

முன்னைய பிரதிகள்
வேண்டுவோர் எழுதுக.
கைவசம் உள்ள பிரதிகள்
அனுப்பி வைக்கப்படும்.

பிரசுரத்துக்கென
அனுப்பப்படும் படைப்புகள்
திருப்பி அனுப்பப்பட
மாட்டாது.

படைப்புக்களை தாளின் ஒரு
பக்கத்தில் தட்டச்சுச் செய்தோ
அல்லது தெளிவான
கையெழுத்தில் பிரதி செய்தோ
அனுப்பி வைக்கவும்.


# வஞ்சகம் தேரேறி வருங்காலம்

அதிகாரிகள் என்பவர்கள் எவ்வாறெல்லாம் இருக்கக்கூடாது என்று விதிக்கப்பட்டிருக்கிறதோ அவ்வாறெல்லாம் இருப்பதில் வல்லவர்கள் வடக்கு - கிழக்கு மாகாண சபை அதிகாரிகள்.

ஊசி நுழையும் துவாரத்தைக் கண்டுபிடித்து, சாந்து பூசி அடைக்கும் இவர்கள் வேறொரு புறத்தில் ஒட்டகம் செல்வதற்காகப் பாதையும் வைத்து, அதில் எவருமறியாமல், தாங்கள் மாத்திரம் சொகுசாகப் பயணம் செய்வதில் வல்லவர்களாக இருக்கிறார்கள்.

மாகாண சபை அமைப்பதற்காக இரத்தம் சிந்திய இளைஞர்களிற் பலர் இன்று உயிருடனில்லை. இருப்பவர்களிற் பலர் அரசியல் பக்கமே இல்லை. ஆனால் செருப்புவார் தானும் அறுபடாத வகையில் எந்தப்போராட்டக் கட்டங்களிலும் தம்மையும், தமது சொகுசையும் பாதுகாத்துக்கொண்ட புத்திசாலிகளான இவர்கள் தமது போக்குக்கு மாகாண சபையையும் பயன்படுத்தி வருவதுதான் விசனத்துக்குரியது.

ஆசிரியர்களின் பதினான்கு மாத இடர்க்கொடுப்பனவைப் பெற்றுக் கொடுக்க இவர்களிடம் திராணி இல்லை. போராடிக்களைத்துப் போன ஆசிரியர்கள் இவ்வாண்டு ஆசிரிய தினத்தைப் பகிஷ்கரிக்க வேண்டும் என்ற முனைப்பில் இருக்கிறார்கள்.

மணிவண்ணன் என்ற தொழிலாளியின் இரண்டு வருடகால மேலதிகநேரக்கொடுப்பனவைச் செய்வதற்குப் பல வருடங்களாக இவர்களுக்கு நேரமில்லாமல் இருக்கிறது. கொடுக்கப்பட வேண்டும் என்று ஒப்புக்கொள்ளப்பட்டே ஒரு வருடத்துக்கும் மேலாகி விட்டது.

அலுவலகப் பணியாளர் என்ற தரத்திலுள்ளவர்களை எவ்வித விசேட கொடுப்பனவுகளுமின்றிக் காவலாளிக் கடமையைச் செய்ய வைக்கிறார்கள். புத்திசாலித்தனமாக நியமனக் கடிதத்தில் இதற்கான நிபந்தனையையும் விதித்து விடுகிறார்கள்.

அலுவலகப் பணியாளரின் கடமை நேரம் தினமொன்றுக்கு எட்டு மணியாக வாரத்தில் ஐந்து நாட்களுக்கானது. இதன் பிரகாரம் வாரமொன்றுக்கு இப்பணியாளர்கள் 40 மணிநேரம் உழைக்கிறார்கள். ஆனால் காவலாளிக் கடமையோ தினமொன்றுக்கு பன்னிரண்டு மணிவீதம் ஆறு நாட்களுக்குச் செய்விக்கப்படுகிறது. அதாவது வாரமொன்றுக்கு 72 மணிநேரம் உழைக்க நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள்.

எனவே அதிகாரிகளைத் தாஜா பண்ண மறுக்கும் எந்த அலுவலகப் பணியாளரும் எவ்வித சிரமமுமின்றி காவலாளி கடமைக்கு எந்த நேரத்திலும் மாற்றம்பெற வேண்டியேற்படலாம். மேலதிகாரிகளின் அன்பைத் தவிர இவர்களுக்கு எவ்வித உத்தியோகப் பாதுகாப்பும் கிடையாது.

இவையெல்லாம், நிதி விடயத்தில் மாகாண சபை, நீதியாகவும் மிகவும் இரக்கமாகவும் நடந்து கொள்கிறதன் வெளிப்பாடு என்று யாராவது நம்பினால் அது அப்பாவித்தனமாகவே இருக்கும்.

ஏனெனில் நிதி சரியாகச் செலவளிக்கப்படுகிறதா என்பதைக் கண்காணிக்க வேண்டிய பிரதம கணக்குக் கட்டுப்பாட்டாளரே மற்றவர்களுக்கு மூளை குறைவு என நம்பிக்கொண்டு பல விதத்திலும் கணக்கு விட்டுப் பெரும் தொகைப் பணத்தை ஏப்பம் விட்ட சங்கதி தெரியாததல்ல.

மக்களை வேண்டுமானால் மடையர்களாக நினைத்துக்கொள். எங்கள் பங்கை எங்களிடம் கொடுத்துவிடு என்ற தோரணையில் வேறு ஆறு அதிகாரிகள் தொடர்ந்து பல வருடங்களாகச் சம்பளத்தில் மோசடி செய்துள்ளார்கள். தட்டிக் கேட்டால் வீண்வம்பு என்று தலைமைச் செயலாளரும் பேசாமல் இருந்து விடுவதால் இவர்கள் கொடிகட்டிப் பறப்பதில் தடையிருப்பதில்லை.

இந்த ஆறு பேரில் நால்வர் தங்களைப் பிரதிப் பிரதம செயலாளர்கள் என அழைத்துக்கொள்கிறார்கள். இவர்கள் இலங்கை நிருவாகச்சேவையில் முதலாந்தர உத்தியோகத்தர்கள். அதற்குரிய சம்பளம் 1997 ஜனவரி 15ல் வெளியான 2/97இலக்கச் சுற்றறிக்கையின்படி T/7/1ல் 163,200 வருடாந்த ஆரம்பச் சம்பளம் எனத் தீர்மானிக்கப்பட்டிருக்கிற போதிலும் T/8/1 பிரிவிலுள்ள 214,200/= ஆரம்பச் சம்பளப் பதவிக்கான வேதனங்களைப் பெற்று வருகிறார்கள்.

இதன்படி இவர்கள் ஒவ்வொருவரும் ஆண்டொன்றுக்கு சுமார் 75,000/= வரையில் மோசடி செய்து வருகிறார்கள். இவர்களுடன் இணைந்து மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு அதிகாரியொருவரும் பயன் பெற்று வருகிறார்.

ஆனால் அலுவலகத்திலுள்ள அதிகாரியொருவரோ T/9/1 பிரிவுக்கான சம்பளத்தைப் பெற்றுத் தலைமை வகிக்கிறார். ஆனால் இவற்றைக் கண்டு கொள்வார் எவருமில்லை, கண்டு கொண்டாலும் துணிந்து சொல்வதற்கு எவருமில்லை.

அனுபவம், அறிவு, திறமை என்று இவர்கள் சொல்லிக்கொள்வதெல்லாம் கொள்ளை அடிப்பதற்கேயன்றி சேவை புரிவதற்கல்ல.

காற்சட்டை போட்டுகொள்ளைத் தொழிலில் ஈடுபடும் இவர்களையும் 'ஐயா!' என்று விளித்து மரியாதை கொடுக்க வேண்டிய தலைவிதி வடக்கு கிழக்கு மாகாண மக்களுக்கு என்பதில் தான் ஒரு சின்ன வருத்தம்.

என்னசெய்வது; வஞ்சகம் தேரில் வந்தால் அதை வணங்கித்தானே யாக வேண்டும்?

**திரிபுரன்**

# புலிக் கத்திகள் !

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு வழங்கவெனக் கொண்டு செல்லப்பட்டதாக 23.09.1997 அன்று வென்னப்புவ பொலிசாரினால் கைப்பற்றப்பட்ட 400 வெட்டுக் கத்திகளும், அவை கொண்டு செல்லப்பட்ட முச்சக்கரவண்டியும் நபர்கள் மூவரும் கடந்த சில தினங்களுக்கு முன்பு எதுவித குற்றச்சாட்டுமின்றி விடுவிக்கப்பட்டுள்ளனர்.

முதலில் அரச சார்பில்லாத பிரசுர மற்றும் இலத்திரனியல் பொதுசன ஊடகங்களினூடாகவும், பின்னர் அரசின் அனைத்துப் பொதுசன ஊடகங்களினூடாகவும் இச்சம்பவம் தொடர்பாகப் பெரும் பிரசாரம் செய்யப்பட்டது. அரசின் தொலைக்காட்சி வெட்டுக்கத்திகளைக் காட்டி, தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் சிங்கள கிராமவாசிகளைப் படுகொலை செய்வதற்கு இவ்வாறான வெட்டுக் கத்திகளைப் பாவிப்பதாகத் தெரிவித்தது.

ஆனாலும் இப்போது வெளிவந்த உண்மைக் கதையின்படி இவ்வெட்டுக் கத்திகள் பதவியா, கெப்பித்திகொல்லாவை, ஹொரப்பொத்தான ஆகிய பிரதேசங்களில் யுத்தத்தினால் நலிவடைந்துள்ள சிங்கள, முஸ்லிம் விவசாய மக்கள் மத்தியில் விநியோகிக்கப்படவே தயாரிக்கப்பட்டுள்ளன. பட்டினிச்சாவை ஒழிக்கும் பிரான்சிய இயக்கத்தின் உதவியுடன் இவ்வெட்டுக்கத்திகள் 5,500ஐயும் மண்வெட்டிகள் 5,500ஐயும் அக்குடும்பங்களுக்கு வழங்க மேற்கூறிய பிரதேசத்திலுள்ள அரச சார்பற்ற நிறுவனமொன்றினாலேயே நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது தொடர்பான விளம்பரங்கள் கூட அப் பிரதேசங்களில் வெளியிடப்பட்டிருந்தன.

வென்னப்புவ பொலிசாரினால் கைப்பற்றப்பட்டுத் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் ஆயுதங்களாகப் பத்திரிகைகளில் அறிவிக்கப்பட்டவை அவ்வாறு உற்பத்தி செய்யப்பட்ட 400 வெட்டுக்கத்திகளேயாகும்.

கைது செய்யப்பட்ட நபர்களினால் உண்மை நிலைமை பொலிசாருக்கு தெரிவிக்கப்பட்டிருக்கையிலும், மேலதிக விசாரணைகள் ஏதும் செய்யப்படாது பொதுசன தொடர்பு சாதனங்களுக்குத் தவறான தகவல்கள் வழங்கப்பட்டமை பதவி உயர்வை எதிர்பார்த்தே எனவும் பொலிஸ் உள்ளகத் தகவல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இவ்வாறான சம்பவங்கள் தொடர்பாகத் தேவையான விசாரணைகள் செய்யப்படாது அரசின் பொதுசனத் தொடர்பு சாதனங்களினூடாகப் பிரசாரம் செய்தமை பலத்த அதிருப்தியைத்தோற்றுவித்துள்ளது.

அதேபோல் இச்சம்பவம் காரணமாக அப்பாவி விவசாய மக்களுக்கு வழங்கப்படவிருந்த நிவாரணம் கிடைக்காது போகும் நிலைமையும் தோன்றியுள்ளது.

# கண்டு பிடிப்புக்கள்!

''விடுதலைப் புலிகளால் ஸ்ரிஞ்சர் ஏவுகணைகள் பாவிக்கப்பட்டிருப்பதற்கான தடயங்கள் கிடைத்துள்ளன. இவை குர்திஷ் கெரில்லாக்கள் மூலமாகக் கிடைத்திருக்கலாம் என்று நம்பப்படுகிறது. அவர்களுக்கு உதவும் நவம்பர் 17 புரட்சிகர அமைப்பு என்ற ஸ்தாபனத்துடன் புலிகளுக்கு தொடர்பிருக்கின்றது. உண்மையில் இவ் ஏவுகணைகள் அங்கிருந்து புலிகளுக்கு வந்திருந்தாலல் எம்மைப் பொறுத்தவரையில் அது ஒரு பாரதூரமான விடயமாகும். புலிகளுக்கு இவ்ஏவுகணைகள் எவ்வாறு வந்துள்ளன எனக் கண்டறிய நான் உடனடி நடவடிக்கையில் இறங்கவுள்ளேன்'' இவ்வாறு லண்டன் ஒப்சேவர் பத்திரிகைக்கு அளித்த பேட்டியொன்றில் லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்துள்ளார்..

# உளவுச் சதி !

ஐக்கிய தேசியக் கட்சி தனது பாராளுமன்ற உறுப்பினர்களுக்காத் தென்பகுதியிலுள்ள பிரபலமான ஹோட்டல் ஒன்றில் நடத்திய செயலமர்வொன்றின் தகவல்களை இரகசியமாக ஒலிப்பதிவு செய்ய எப்.எம்.(F.M) மைக்றோபோன் ஒன்றைப் பொருத்த எடுக்கப்பட்ட முயற்சியொன்றைப் பற்றிய தகவல் கிடைத்ததனால் பின்பு அச்செயலமர்வை அதனருகே அமைந்துள்ள வேறொரு ஹோட்டலில் நடத்த வேண்டியேற்பட்டது.

ஐ.தே.கவினால் ஒழுங்கு செய்யப்பட்ட இச்செயலமர்வு கடந்து புதன் வியாழன் ஆகிய தினங்களில் நடைபெற்றன. செவ்வாயன்று இரவே அம்மண்டபத்தில் எப்.எம். மைக்றோபோன் பொருத்தப்பட்டுள்ளது.

செயலமர்வில் நடைபெற்ற உரைகள் மத்தியில் ''எதிராளிகளைத் தோல்வியுறச் செய்வது'' எவ்வாறு என்ற தலைப்பில் உரையொன்று ஆற்றப்பட்டமை இவ்வாறு இரகசியமாக மைக்றோபோனைப் பொருத்தக் காரணமாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எப்.எம். மைக்றோபோனினூடாகத் தூரத்திலுள்ள இடமொன்றிலிருந்து ஒலிப்பவு செய்ய முடியுமென்பதால், உரிய உரையையும் பா.உறுப்பினர்கள் மத்தியில் கலந்துரையாடப்படும் விடயங்களையும் ஒலிப்பதிவு செய்வதே இம்முயற்சிகளை மேற்கொண்டவர்களின் நோக்கமாகும்.

எவ்வாறெறினும் இது தொடர்பாகத் தகவல்கள் வெளிவந்ததன் பின்பு கூட்டம் நடைபெறும் மண்டபம் மாற்றப்பட்டிருக்கிறது.

# பள்ளிப் படைகள்!

யுத்தம் செய்யப் படையினர் போதாததால் பாடசாலை செல்லும் வயதில் உள்ள இளைஞர்களையும், யுவதிகளையும் யுத்தத்தில் ஈடுபடுத்திக் கொள்ளத் தேவையான சட்ட திட்டங்கள் இப்போது தயாரிக்கப்பட்டு வருவதாக வடகிழக்கு மாகாண ஆளுநர் காமினி பொன்சேகா தெரிவித்தார்.

இறுதி இரத்தத் துளி வரை போராட வேண்டும் எனக் கொழும்பில் இருந்து கூச்சல் போட்டு அப்பாவிப் பிள்ளைகளை யுத்தத்துக்கு அனுப்புபவர்கள் கூச்சல் போடுவதை நிறுத்திவிட்டுத் துப்பாக்கிகளைக் கையில் எடுத்துக் கொண்டு வட-கிழக்குக்குச் சென்று செயலில் திறமையைக் காட்டட்டும் — என அவர் கூறினார்.

போர் புரிய மக்கள் இல்லை. பாரிய எண்ணிக்கையான உயிர்கள் அழிகின்றன. யுத்தம் இன்று வியாபாரமாக ஆக்கப்பட்டுள்ளது. இராணுவத்தினரின் உணவைத் தனியார் வியாபாரிகள் அனுராதபுரத்தில் கொள்ளையடிக்கிறார்கள். இராணுவத்தின் இன்னொரு குழுவினர் ஆயுதக் கொள்வனவினூடாக கொமிஷன் அடிக்கிறார்கள், கிராமங்களிலுள்ள இளைஞர்கள் வடபகுதியில் யுத்தம் புரிகின்றனர். வெற்றுக் கூச்சல் போடாது இராணுவத்தில் சேர்ந்து உயிர்த் தியாகத்துடன் பணி புரியுமாறு அவர்களுக்கு நான் கூற விரும்புகிறேன் எனவும் காமினி பொன்சேகா தெரிவித்தார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net







# அரசியல் மாற்றம் சதியினால் செய்யப்படுவதில்லை !

''சிங்களக் கமிஷனுடைய' அறிக்கை எவ்வளவு தூரம் பௌத்த பேரினவாதிகளது உணர்வலைகளை வெளிப்படுத்துகிறது என்பதை விளக்க, அதன் முடிவுகளை அப்படியே கடந்த இதழில் தந்திருந்தேன். இலங்கை அரசாங்கம் இதைச் சாக்காக வைத்து 'தீர்வுப் பொதியை' இந்து சமுத்திரத்தில் வீசிவிட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்று தோன்றியது. 'முடக் கழுதைக்கு சறுக்கியது சாட்டு' என்று அரசாங்கம் நடந்து கொள்ளலாம் என்றும் அப்பத்தியில் குறிப்பிட்டிருந்தேன்.

இப்போது அதற்கான ஆரம்பங்கள் தெரியத் தொடங்கியுள்ளன. 'சிங்கள ஆணைக்குழு' வின் அறிக்கை 'வரலாற்றின் குப்பைக் கூடைக்குள் தான் போய்ச்சேரும்' என்று அறிவித்தார் தகவல் தொடர்புத்துறை அமைச்சர் மங்கள சமரவீர. உடனே வெகுண்டெழுந்து அதற்கெதிராகப் போர்க் கொடி உயர்த்தியுள்ளார்கள் அனைத்து இனவாதிகளும். அமைச்சர் மன்னிப்புக் கோர வேண்டும் என்று கோரி சத்தியாக் கிரகப் போராட்டம் வேறு நடத்தியுள்ளார்கள் - கிட்டத்தட்ட 500 புத்த பிக்குகள் - கொழும்பில். (2000 பிக்குகள் கலந்து கொண்டதாகக் கொழும்புப் பத்திரிகைகள் செய்தி எழுதின!)

இந்த அறிக்கை தொடர்பான தனது அபிப் பிராயத்தைத் தான் தெரிவித்தேனேயொழிய பௌத்த மதபீடங்களை அவமதிக்கும் நோக்கம் தனக்கு இல்லையென்றும், தனது பேச்சு அப்படி மதபீடத் தலைவர்களை புண்படுத்தி இருந்தால் அதற்காகத் தாம் வருந்துவதாகவும் அமைச்சர் அறிக்கை விடுத்தார். ஆனால் இது தம்மைத் திருப்திப் படுத்தவில்லை என்று கூறி மாத்தறையில் இன்னாரு சத்தியாக்கிரகத்தை அவரது இக்கூற்றுக்கு எதிராக நடாத்தியது ஐக்கிய சிங்கள அமைப்பு. அமைச்சர் சிங்கள மக்களிடமும் பௌத்த பீடங்களிடமும் பகிரங்க மன்னிப்புக் கோர வேண்டும் என்பது இவர்களது கோரிக்கை.

இத்தனைக்கும் அமைச்சர் சமரவீர தெரிவித்தது ஒன்றும் பெரிய விடயம் அல்ல. அரசாங்கத்தின் தீர்வுத் திட்டத்தை எதிர்ப்பதற்காகவே அவசர அவசரமாக இந்த இடைக்கால அறிக்கையை ஆணைக்குழு வெளியிட்டிருப்பதால், அது அரசியல் தன்மை வாய்ந்தது என்றும், அந்த அறிக்கையின் அரசியல் சிங்கள மக்களின் நலன்களைப் பிரதிநிதித்துவப் படுத்தவில்லையென்றும் இதன் காரணமாகவே இது வரலாற்றின் குப்பைக் கூடைக்குள் தூக்கி வீசப்படும் என்றுமே அவர் சொல்லியிருந்தார்.

இதிலே ஆச்சரியப்படுவதற்கு ஒன்றும் இல்லை. தவிரவும், அமைச்சர் இந்த விடயத்தைச் சொன்னதற்கு அடிப்படையான காரணம் இந்தத் தீர்வு ஒன்றும் தமிழ் மக்களுக்கு எதையும் வாரி வழங்கி விடவில்லை, இன்றுள்ள நிலைமையை சுமுகமாக்குவதற்கு மட்டுமே இது உதவும் என்று நம்புவதேயாகும். இந்தத் தீர்வுத்திட்டம் தமிழ் மக்களது அபிலாஷைகளை ஒன்றும் தீர்த்து வைக்கப் போவதில்லை, அதுவும் நிச்சயமாக சிங்கள பௌத்த மக்களது அதிகாரங்கள், சலுகைகள் எவற்றையும் அது மாற்றி விடப் போவதில்லை, தமிழ் மக்களை இரண்டாந்தர நிலையிலிருந்து உயர்த்திவிடப் போவதில்லை என்று தெரிந்து கொண்டுதான், இதையாவது செய்யாவிடில், நிலைமை - தமது அரசாங்கத்தின் நிலைமை - இன்னும் மோசமாகி விடும் என்று புரிந்து கொண்டுதான் அவர் இப்படிக் கூறினார். ஆனால், இதைக் கூட சகிக்க முடியாத நிலையையே இங்குள்ள இனவாதிகள் கொண்டுள்ளார்கள் என்பதை சிங்கள ஆணைக்குழு அறிக்கையும், இந்த எதிர்ப்புகளும் காட்டுகின்றன.

இது ஒன்றும் எதிர்பார்த்திருக்க முடியாத விடயமல்ல.

ஆனால், இதிலுள்ள கவனிக்கப்பட வேண்டிய விடயம் என்னவென்றால், அமைச்சர் சமரவீர மீதான இந்தத் தாக்குதலை அவர் தனியாக நின்று எதிர்கொள்ள வேண்டியுள்ளது என்பது தான். எந்த அரசாங்கம் தனது தீர்வாக தீர்வுப் பொதியை முன்வைத்ததோ, அந்தத் தீர்வுப் பொதியைப் பாதுகாக்க அவர் தனித்துக் குரலெழுப்ப வேண்டியிருப்பது தான் இதிலுள்ள மிகப் பெரிய துயரம். இது தொடர்பாக இன்று வரை எந்தவொரு அமைச்சரோ, ஜனாதிபதியோ மூச்சுக்கூட விடவில்லை. பதிலாகப் பாராளுமன்ற தெரிவுக்குழு இதை அக்றையுடன் கவனத்தில் எடுக்க வேண்டும் என்று பொ.ஐ.முன்னணி அரசாங்கத்தின் செயலாளரும், அமைச்சருமான ஜெயரத்ன அவர்கள் கோரிக்கை விடுத்திருந்தார். தமது அரசாங்கம் வெளியிட்டுள்ள தீர்வுத்திட்டம் பற்றி இதுவரை வெளிப்படையாக ஆதரித்து எதுவும் பேசாத அவர் இப்போது சிங்கள ஆணைக்குழு அறிக்கைக்கு பரிந்து பேசுவது இந்த அரசாங்கத்தின் அமைச்சரவை எந்த நிலையில் இருக்கிறது என்பதற்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டு.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக இந்தத் தீர்வுத்திட்டம் நடைமுறைக்கு வருவது சாத்தியமா என்பதே கேள்விக் குறியாக உள்ளது. ஐ.தே.கவிற்கும், அரசாங்கத்திற்கும் இடையிலான சச்சரவுகள், ஆளும் அணிக்குள்ளேயே உள்ள விரிசல்கள், சட்ட ரீதியான சிக்கல்கள் என்பவை காரணமாக இது நடைமுறைக்கு வருவதற்கான வாய்ப்புகள் குறைவாகவே உள்ளது. புதிய அரசியலமைப்பைக் கொண்டு வருவதற்காக, அபிப்பிராய வாக்கெடுப்பு, பாராளுமன்ற 2/3 பெரும்பான்மை என்பவை பற்றிப் பேசப்பட்டாலும், இவை நடைமுறையில் பல சிக்கல்களை எதிர்நோக்குகின்றன. முதலாவதாக இது பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் சிபாரிசுடன் பாராளுமன்றத்திற்கு வருவதிலேயே சிக்கல் ஏற்பட வாய்ப்பிருக்கிறது. போதாததற்கு அரசாங்கத்தின் தீர்வுத்திட்டம் இன்னமும், காணி, சட்டமும் ஒழுங்கும் போன்ற விடயங்களில் மாநிலங்களுக்கான அதிகாரங்கள் பற்றி எந்தத் தீர்வையும் தெளிவாக வைக்காமல் இருக்கும் போது அது பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் அங்கீகாரத்தையும் பெறுவதற்கான சாத்தியங்களைக் கொண்டிருப்பதாகக் கூறுவது கடினம். இத்தகைய ஒரு நிலையில் இந்த அரசாங்கத்திற்கு இதையும் மீறி இந்த ஆண்டுக்குள் இதனைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பது சாத்தியமே இல்லை. இந்த ஆண்டு முடிந்தாலோ அடுத்த வருடம் சுதந்திரத்தின் ஐம்பதாண்டு நிறைவு விழா வருவதால், எதிர்வரும் மார்ச் மாதம் வரை பாராளுமன்றத்தில் இப்பிரச்சினை எடுபடுவது சந்தேகமே.

இதற்குப் பின்னும் பல சிக்கல்கள் இருக்கவே செய்கின்றன. ஆக, இந்த நிலையில் அரசாங்கம் உண்மையில் என்ன செய்யப்போகிறது. என்ற சந்தேகமே பரவலாக எழுகிறது. தீர்வுப் பொதியை வெறும் ஏட்டுச்சுரைக்காயாய் இருக்க விட்டு இந்த அரசாங்கப் பதவிக் காலமும் முடிந்து விடும் என்பதே நம்பகமான ஒன்றாகப் போகிறது என்று கூற வேண்டியிருக்கிறது.

அப்படியானால் இத்தனை நாள் கூச்சலுக்கும், கூப்பாட்டுக்கும் என்ன தான் அர்த்தம்?

அர்த்தம் ஒன்றுமில்லை. ஆட்சிக்காலம் முழுவதையும் ஓட்டியாயிற்று என்ற திருப்தியுடன் அரசாங்கக் கட்சி அடுத்த தேர்தலுக்குத் தயாராகும்.

நமது மக்களும், சற்றும் மனம் தளராத விக்கிரமாதித்தர்களாய், மீண்டும் முருங்கை மரத்தில் ஏறி தமக்கு ஒரு அரசாங்கத்தைத் தேர்தல் மூலம் தேர்ந்தெடுப்பர்...

'மரணத்துள் வாழ்வோம்' நிலை அப்படியே நீளும்...

இல்லை, இல்லை, இந்தப் பிரச்சினையை எப்படியும் இந்த அரசு தீர்த்து வைக்கத் தான் போகிறது என்று இன்றும் அடித்துக் கூறுபவர்கள் இருக்கவே செய்கிறார்கள். அவர்கள் சொன்னபடி நடந்தால் சந்தோசம் தான்.

ஆனால், அப்படிச் சொல்பவர்களில் ஒருவர் கூட இன்று வரை மங்கள சமரவீரவுக்காகப் பரிந்து பேசவில்லை. மாறாக, அவர் தேவையில்லாத கதையை தேவையில்லாத நேரத்தில் கதைத்து விட்டார் என்றே முணுமுணுக்கின்றனர். இனவாதத்தையும், பிற இனங்களைச் சகிக்க முடியாத துவேச மனப்பான்மையையும் இனவாதிகள் ஏறிநிற்தம் அதே அத்திவாரக்கற்களின் மீது ஏறி நின்று கொண்டு தகர்க்க முடியாது என்பதை இவர்கள் மறந்து விடுகிறார்கள்.

அரசியல் மாற்றம் ஒன்றும் அரசியல் சதியின் மூலமாகச் செய்யப்படுவதில்லை. அது நேர்ப்படியான, வெளிப்படையான போராட்டத்தின் மூலமாகச் செய்யப்பட வேண்டியது. இதை ஜனாதிபதியோ, அமைச்சர் பீரிசோ அவரின் ஆலோசகரான நீலன் திருச்செல்வமோ பிற 'சமாதான ராகம் பாடிய' சகபாடிகளோ அறிந்ததாகத் தெரியவில்லை.

சதிப்பாணி வழிமுறைகள் போன்ற குறுக்கு வழிகளில் வெற்றி பெறலாம் என்று நம்புகிறார்கள் இவர்கள். தாம் நம்புவது மட்டுமல்ல எம்மையும் நம்பச் சொல்கிறார்கள்; அபிவிருத்தி லொத்தரை நம்பச் சொல்வது போல!

ஒன்று மட்டும் நிச்சயம். வரலாற்று முடிவுகள் வெற்றுப் பேச்சுக்களால் வெல்லப்படுபவை அல்ல. அவை மக்களது வீரம் செறிந்த போராட்டங்களால் மட்டுமே சாதிக்கப் படுபவை.

O

## கேள்வியே பதில் !

வடக்கும் கிழக்கு இணைய வேண்டுமா வேண்டாமா என்ற கேள்விக்கு மக்களின் பதில் என்ன என்பதை அறிய கிழக்கிலே ஒரு சர்வஜன வாக்கெடுப்பு நடாத்தப்படவுள்ளதாக இப்போது அறிவிக்கப்பட்டுள்ளது.

கிழக்கிலே மட்டும் வாக்கெடுப்பு நடாத்துவது என்ற முடிவை இந்திய - இலங்கை ஒப்பந்த காலத்திலேயே ஜே.ஆர். ஜயவர்தன வலியுறுத்தியிருந்தார்.

இதற்குக் காரணம் அங்கு தமிழர்களைச் சிறுபான்மையினராக்கும் முயற்சியில் பெரும் வெற்றியைத் தாம் பெற்றிருந்தது தான். அதற்குப் பிறகு, தப்பித்தவறி முஸ்லிம்கள் இதை ஆதரித்து விட்டாலும் என்ற பயத்தில், தமிழ் - முஸ்லிம் உறவை பிளவுபடுத்தும் முயற்சியில் திட்டமிட்டு அவர் இறங்கினார்.

அவரது இந்த நோக்கத்திற்கு புலிகள் உட்பட அனைத்து தமிழ் இயக்கங்களும் தமது நடவடிக்கைகள் மூலமாகப் போதியளவு உதவி செய்தன.

இப்போது வாக்கெடுப்பு நடாத்தப்படப் போவதாக அறிவிக்கப்படுகிறது.

வடக்கு கிழக்கை பிரிப்பதற்கான ஒரு வழியாகவே இதை அரசாங்கம் செய்ய நினைக்கிறது என்பது வெளிப்படை.

13வது திருத்தச் சட்டபிரகாரம் அது ஏற்கெனவே இணைந்து தான் இருக்கிறது. உண்மையில் அதை நிரந்தரமாக்குவதா வேண்டாமா என்ற கேள்விதான் இன்று உள்ள கேள்வி.

எப்படியோ, தாம் என்ன செய்ய விரும்புகிறோம் என்பதைத் தெரிவிக்க கிழக்கு மாகாண மக்களுக்கு ஒரு வாய்ப்பளிக்க முன்வந்திருக்கிறது அரசு. அந்தளவுக்கு அந்த மக்களின் சுயநிர்ணய உரிமையில் அதற்கு 'அக்கறை' இருப்பதைப் பாராட்டாமல் இருக்க முடியவில்லை.

கிழக்கின் விருப்பை அறிய வாகெடுப்பை நடாத்த முன்வரும் அரசாங்கம், வடக்கு கிழக்கு தமிழ் மக்கள் எதை விரும்புகிறார்கள் என்பதை அறிய ஏன் ஒரு வாக்கெடுப்பை நடாத்தக் கூடாது?

இலங்கையின் ஒற்றையாட்சியுள் இருக்க விரும்புகிறார்களா? அல்லது தமது சுயநிர்ணய உரிமையைப் பயன்படுத்தி சுயாட்சி அமைப்பு ஒன்றை அமைக்க விரும்புகிறார்களா என்று ஒரு வாக்கெடுப்பை நடத்தினால் என்ன?

அந்தத் தீர்வுக்குப் பிறகு பிரபாகரனையும், புலிகள் இயக்கத்தையும் எப்படி நடத்த வேண்டும் என்று ஒரு சட்டரீதியான முடிவு எடுக்க முடியுமே?

இதைச் செய்ய அரசாங்கம் ஏன் முன்வரக்கூடாது? கேள்வியைக் கேட்டாயிற்று... விடை...?

தாம் விரும்பும் தீர்வுக்காக வாக்கெடுப்பு நடாத்த விரும்புகிறவர்களது ஜனநாயகத்தின் போலித் தனத்தை வெளிக்காட்ட இந்த ஒரு கேள்வி மட்டும் போதும்.

விடை இல்லாமலே, கேள்வியே பதிலாகிவிடுகிற நிலை இது.

'அரசியல் உரிமைக்காக ஆயுதம் தூக்குபவர்கள் பயங்கரவாதிகள் அதை, அடக்குவதற்காக ஆயுதம் தூக்குபவர்கள் ஜனநாயகத்தின் காவலர்கள் என்பது தான் இன்றைய நீதி.

இந்த நீதி நிலவும் வரை தமக்கு ஏதாவது உரிமை வந்து சேரும் என்று நம்பும் அளவுக்கு இந்த நாட்டு மக்கள் ஒன்றும் முட்டாள்கள் அல்ல.


ஜனாதிபதி சந்திரிகா அவர்களுக்கும் இதுபுரிய நீண்ட நாட்களும் இல்லை!

O

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net







# சிங்கள ஆணைக்குழு அறிக்கை :

# வரலாற்றை விடுதலை செய்யப் போவதில்லை!

### சிங்கள ஆணைக்குழுவும் மங்கள சமரவீரவும்

"நீங்கள் பிக்குமார். அன்னச் சோறு சாப்பிடுவதும் மோட்சத்தை அடைவதற்கு பண (பௌத்த உபதேசம்) சொல்வதுமே உங்கள் வேலை. அன்று மன்னர் காலத்தில் உங்களுக்கு கொடுத்த முக்கியத்துவத்தை அப்படியே இன்று நான் பிரதிபண்ண பண்ணமுடியாது. அரசியலமைப்பின் படியே நான் ஆட்சி நடத்த முடியும். உங்கள் இஷ்டப்படி ஆட்சி நடத்துவதென்பது அரசியலமைப்புக்கு விரோதமானது. அரசியலமைப்புக்கு விரோதமாவதென்பது ஜனநாயகத்துக்கு விரோதமானது. ஜனநாயகத்துக்கு விரோதமாவது தென்பது மக்களுக்கு விரோதமானது. அப்படியான ஒன்றை என்னால் செய்ய முடியாது. நீங்கள் உங்கள் வேலையைப் பாருங்கள். நாங்கள் எங்கள் வேலையைப்பார்க்கிறோம்"

இப்படி யார் கூறியிருந்தார் என யோசிக்கிறீர்களா? மறைந்த ஜனாதிபதி ஜே.ஆர். தான் இப்படி கூறியிருக்கிறார். 1977இல் பதவிக்கு வந்து சில காலத்தில் பிக்குமார், தங்களுக்கும் பௌத்தத்துக்கும் மன்னர்கள் அளித்த முக்கியத்துவத்தை தற்போதைய அரசாங்கம் அளிக்கவில்லையென கூட்டம் கூடி அறிவித்த பின் அவர்களெல்லோரையும் அழைத்து கூட்டமொன்றை வைத்து உரையாற்றுகையிலேயே இவ்வாறு ஜே.ஆர். தெரிவித்திருந்தார். ஜே.ஆரின் மக்கள் நேசிப்பு, ஜனநாயகம் என்பன ஒருபுறமிருக்க, பௌத்தத்துக்கு அரசியலமைப்பு ரீதியாகவே அந்தஸ்தெல்லாம் வழங்கிவிட்டு அதே பௌத்த சக்திகள் தனது எதிரணி அரசியல்சக்திகளுடன்சேர்ந்து தனக்கு எதிராகப் புறப்பட்டு விடாதபடியிருக்க அதற்கு ஒரு எல்லைக்கோட்டைப் போட்டுவிட்டிருந்தார்கள்.

"1978ஆம் ஆண்டு அரசியலமைப்பின் மூலம் பௌத்தமதத்தை அரசமதமாக மீண்டும் ஜே.ஆர். பிரகடனப்படுத்தியதானது வெறுமனே ஜே.ஆர் சார்ந்த விடயம் மட்டுமல்ல. 1972ஆம் ஆண்டு ஸ்ரீ.ல.சு.க. ஆட்சியிலேயே அது கொண்டுவரப்பட்டு விட்டதால் அதனை ஜே.ஆரால் நீக்கிவிடுவது என்பது சாத்தியமானதல்ல" என சில அரசியல் விமர்சகர்கள் குறிப்பிடுவர்.

பௌத்த மதத்துக்கு அரசியலமைப்பின் மூலம் கொடுத்த முக்கியத்துவம் என்பது சிங்கள பௌத்த சக்திகள் அரசையே தமது பொம்மையாக ஆட்டி வைக்குமளவிற்கு கட்டுப்பாட்டை மீறி சென்றுவிட்டது. தமது பிழைப்பரசியலுக்கு பௌத்தத்தை எப்படி பயன்படுத்தலாம் என ஆட்சியாளர்கள் செயற்பட்டு வந்தனர். ஆனால் அரசை தமக்கு ஏற்றாற் போல் எப்படி நடத்துவது என்பதில் சிங்கள பௌத்த தரப்பு வெற்றி கண்டு விட்டது. அதன் தொடர்ச்சிப் போக்குகளில் ஒன்றாகவே இன்று மங்கள சமரவீரவுக்கு நேர்ந்திருப்பதைக் காணமுடிகிறது. சிங்கள ஆணைக்குழு வெளியிட்ட அறிக்கை வரலாற்றின் குப்பைத் தொட்டியிலேயே போடப்படும் என தபால்தொலைதொடர்பு அமைச்சர் கூறியிருந்த கருத்துக்கு எதிராக இன்று சிங்கள பௌத்த பேரினவாத சக்திகள் எழுப்பியிருக்கும் பிரச்சினையும் எதிர்ப்பு நடவடிக்கைகளும் கடந்த இருவாரங்களாக சகல தொடர்பு ஊடகங்களிலும் முக்கிய இடத்தைப் பெற்றுள்ள விடயம். இது சமகாலத்தில் அரசுக்கும் சிங்கள பேரினவாத சக்திகளுக்கும் தமிழ்தேசிய சக்திகளுக்கும் பிரதான பிரச்சினையாகவும் ஆகியிருக்கிறதென்றால் மிகையில்லை.

### சிங்கள ஆணைக்குழு:

கடந்த வருடம் டிசம்பர் மாதம் 18ம் திகதியன்று அகில இலங்கை பௌத்த சம்மேளனத்தில் வைத்து 'தேசிய ஒருங்கிணைப்பு கமிட்டி" எனும் அமைப்பால் தொடக்கப்பட்டதே சிங்கள ஆணைக்குழு. இந்த கமிட்டியின் கீழ் 47 சிங்கள பௌத்த அமைப்புகள் ஒன்றிணைந்து இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

காலனித்துவத்துக்குப் பின்னர் சிங்கள மக்களுக்கு நேர்ந்த சகல அநீதிகளையும் ஆராய்வதற்காகவே இவ் ஆணைக்குழு நியமிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டிருந்தது. அதன்படி முக்கிய 14 தலைப்புகளில் அவ் அநீதிகளை ஆராய்வதாகவும் அது தெரிவித்திருந்தது.

அவ் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் எல்லோரும் மிகவும் முக்கியமானவர்கள். முன்னாள் பிரதம நீதியரசர், பேராசிரியர்கள் உயர் அரச அதிகாரிகள் என்போர் அடங்குவர்.

இவர்கள் மாவட்டம் மாவட்டமாகப் போய் சாட்சியங்களை விசாரித்தனர். பல அரசியல்வாதிகள், பொலிஸ், மற்றும் படை அதிகாரிகள் அரச உத்தியோகத்தர்கள், பௌத்த பிக்குமார், சிங்கள பௌத்த அமைப்புகள் எனப் பலர் தனிநபர்களாகவும், அமைப்புகளாகவும் சாட்சியமளித்தனர்.

தமிழ், முஸ்லீம், மலையக மக்களுக்கு எதிராக பலர் ஆணைக்குழுவின் முன் உரையாற்றினர். ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் கூட இதில் சாட்சியமளித்தனர். (மே 26ம் திகதி அன்று குருநாகல் மாவட்ட ஆளுங்கட்சி பா.உ. ஜயசேன ராஜகருனா சாட்சியம் அளித்திருந்தார்) தொடர்புசாதனங்கள் இதற்கு அதிக முக்கியத்துவம் வழங்கின ஆணைக்குழுவின் முன் நிகழ்த்தப்படும் உரைகளெல்லாம் அடுத்த நாளே சகல சிங்கள, ஆங்கில தினசரிகளிலும் முக்கியத்துவம் கொடுத்து வெளியிடப்பட்டு வந்தன.

ஆணைக்குழுவின் விசாரணைகள் எல்லாம் பௌத்த நிலையங்களிலேயே நடத்தப்பட்டன. இந்த ஆணைக்குழு சாட்சியங்கள் சகல தொடர்புசாதனங்களுக்கூடாகவும் வெளிவந்தமையானது தமிழ், முஸ்லீம், மலையக மக்களுக்கெதிராக பெரும் பிரச்சாரத்தையும் இனத்துவேஷத்தையுமே அதிகரிக்கச் செய்திருந்தது. மீண்டும் மீண்டும் ஒரே விதமான துவேஷக் கருத்துக்களும் வரலாற்றுப் பொய்களும் சொல்லப்பட்டமையால் பேரினவாதத்தை அது ஆழப்படுத்தியது.

### ஏன் சிங்கள ஆணைக்குழு?

ஆணைக்குழு அவசர அவசரமாக தோற்றுவிக்கப்பட்டதற்குக் காரணம் இருக்கவே செய்கிறது. அரசாங்கம் முன்வைத்த உத்தேச தீர்வுப்பொதியை முறியடிப்பதே இதன் பிரதான இலக்காக இருந்தது. அரசாங்கம் முன்வைத்துள்ள தீர்வுப்பொதி நாட்டை துண்டாடும் ஒன்று என்றும் சிங்கள நாட்டை பிரபாகரனுக்கும், அஷ்ரப்பிற்கும், தொண்டமானுக்கும் தாரைவார்த்துக்கொடுக்கும் முயற்சி என்றும் சிங்கள இனவாத சக்திகள் பிரச்சாரம் செய்து வந்தன.

பல எதிர்ப்புக் கூட்டங்களை நடத்தின. படிப்படியாக இந்த எதிர்ப்புகள் எல்லாமே ஓரணியில் திரண்டன. ஏலவே வளர்த்து விடப்பட்டிருந்த சிங்கள பௌத்த பேரினவாத கருதியலும் , தொடர்பூடகங்கள், பௌத்த உயர்பீடம், அரசாங்கத்தை எதிர்க்கும் தொலைக்காட்சிகள் என அனைத்தினதும் உதவிகளால் பேரினவாதம் பலமாக நிறுவனமயப்படுவது கடினமாக இருக்கவில்லை.

குறிப்பாக தேசிய பௌத்த மகாசங்கத்தினரின் ஆசி இந்தபேரினவாத சக்திகளுக்குக் கிடைத்தது. அரசாங்கத்தைக் கடுமையாக எதிர்க்கத்தொடங்கிய மகா சங்கத்தினர் ஒரு கட்டத்தில் 'தீர்வுப்பொதியை" வாபஸ் வாங்காது போனால் மகாசங்கத்தை விட்டு தாங்கள் விலகப் போவதாக எச்சரிக்கை விடுத்திருந்தனர். அதன்படி சிலர் செய்தும் காட்டினர். அதனைத் தொடர்ந்து பல பாதயாத்திரை, சத்தியாக்கிரகங்கள், ஆர்ப்பாட்டங்கள், கருத்தரங்குகள் என நடாத்தினர். இறுதியில் அரசு இறங்கிப்போய் அவர்களுடன் சமரசப் பேச்சுவார்த்தை நடத்தியது. அதில் என்ன உடன்பாடுகள் காணப்பட்டன என்பது வெளிவரவில்லை. ஒரு சில மாதங்கள் அமிழ்ந்திருந்த இந்த எதிர்ப்புகள் அரசு புதிதாகத் திருத்திய உத்தேச அரசியல் திட்டத்தை முன் வைத்ததோடு திடீரென மீண்டும் வெளிக்கிளம்பின. இதற்கு அரசு பேரினவாதிகள் கேட்டபடி அத்தனையும் அரசியல் திட்டத்தில் கொண்டிராதது காரணமாக இருக்கலாம். இறுதியில் இந்த ஆணைக்குழுவில் போய் முடிந்தது.

### ஆணைக்குழுவின் அறிக்கை

ஆணைக்குழு தனது விசாரணையை முடிக்கும் முன்னமே தனது இடைக்கால அறிக்கையை வெளியிட வேண்டியேற்பட்டதற்கு சில காரணங்கள் உண்டு. குறிப்பாக அரசாங்கம் தனது உத்தேச அரசியல் திட்டத்தை பட்ஜட்டுக்கு முன்பு பாராளுமன்றத்துக்கோ அல்லது நேரடியான சர்வஜன வாக்கெடுப்புக்கோ விடப்போவதாக அறிவித்திருந்ததே அதன் காரணம். எனவே தீர்வுத்திட்டத்தை முறியடிக்க அவசர அவசரமாக தயாரிக்கப்பட்டதே "சிங்கள ஆணைக்குழுவின் இடைக்கால அறிக்கை"

இந்த அறிக்கை செப்டம்பர் மாதம் 17ந் திகதியன்று கோலாகலமாக வெளியிடப்பட்டது. அறிக்கையை பானையின் மேல் வைத்து (பெரஹர) ஊர்வலமாக கொண்டு வரப்பட்டது. பொரளை பௌத்த இளைஞர் காங்கிரசில் இருந்து பௌத்தலோக மாவத்தையில் அமைந்துள்ள பௌத்த மகா சம்மேளனத்துக்கு கொண்டு வரப்பட்டது. பல பிக்குகள் உட்பட பெருந்திரளானோர் ஊர்வலமாக வர ஊர்வலத்தின் முன் அலங்கரிக்கப்பட்ட யானையின் மீது அமர்ந்தபடி (கண்டி நிலமே சீருடையில்) சிங்கள ஆணைக்குழுவின் செயலாளர் பத்மஷாந்த விக்கிரம சூரிய ஆணைக்குழு அறிக்கையை ஏந்தியபடி வந்தார்.

→

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கூட்டம் நிரம்பி வழிய பௌத்த சடங்கு முறைகளுடன் கூட்டம் நடந்தது. அறிக்கை சிங்களத்திலும், ஆங்கிலத்திலும் அச்சிடப்பட்டு விற்கப்பட்டது. (ஆங்கிலம்: ரூ.150 சிங்களம்: ரூ. 125) அறிக்கையை நீண்ட வரிசையில் நின்று வாங்கினார்கள். மண்டபத்தில் கூட்டம் நிரம்பி வழிய ஏனையோர் மற்ற கட்டிடங்களிலும், வெளி மைதானத்திலும், பாதையிலும் நின்று ஒலிபெருக்கியில் கேட்டுக்கொண்டிருந்தனர். தொலைக்காட்சிப் பெட்டிகள் ஆங்காங்கு வைக்கப்பட்டு மண்டபத்தில் நடப்பவை நேரடியாக காட்டப்பட்டுக்கொண்டிருந்தன.

ஆணைக்குழு அறிக்கையை வெளியிடுவதற்கு செப்டம்பர் 17ம் திகதியை தெரிந்தெடுத்ததற்கு காரணம் அது அநகாரிக்க தர்மபாலவின் சிரார்த்ததினம் என்பதே. அநகாரிக்க தர்மபால சிங்கள பௌத்த மறுமலர்ச்சிக்கு வித்திட்டவர் என சிங்கள பௌத்தர்கள் குறிப்பிடுவர். அவர் சிங்கள பௌத்த பேரினவாதத்தை பரப்புவதில் எந்தளவு பங்காற்றியிருந்தார் என்பது சொல்லித் தெரியவேண்டியதில்லை.

இந்தக் கூட்டத்திற்கு முன்னைநாள் எம்.பி. தினேஸ் குணவர்த்தன, ஸ்ரீமணி அத்துலத்முதலி மற்றும் அமைச்சர் தி.மு.ஜயரத்ன உட்பட பல அரசியல் தலைவர்கள் கலந்து கொண்டதுடன் அமைச்சர் தி.மு.ஜயரத்ன அறிக்கையை மகாசங்கத்தினரிடமிருந்து மேடையில் வைத்துப் பெற்றுக்கொண்டார்.

ஆணைக்குழுவின் உள்ளடக்கத்தைப் பொறுத்தவரையில் அதில் முழுக்க முழுக்க தீர்வுத்திட்டத்துக்கு பதிலளிக்கும் வகையிலும், சிங்கள பௌத்தர்களுக்கு பிரயோசனப்படக் கூடிய வகையில் ஒற்றையாட்சித் தன்மையைப் பேணக்கூடிய, சிங்கள பௌத்தத்திற்கு முன்னுரிமை வழங்கக் கூடிய வகையிலும் சட்டப்புத்தகம் போல் தொகுக்கப்பட்டிருந்தது.

அன்றைய பத்திரிகைகளில் வெளியீட்டுச் செய்தியை விளம்பரங்கள், வாழ்துக்கள், செய்திகள் என அமர்க்களப்படுத்தியிருந்தன.

அடுத்தடுத்த நாட்களில் அறிக்கை முழுவதும் தொடராக திவய்ன, லங்காதீப, ஐலண்ட் ஆகிய பத்திரிகைகளில் வெளிவரத் தொடங்கின. ஆணைக்குழு அறிக்கைக்கு ஆதரவாக பொதுவாக அறிக்கைகள் பல பத்திரிகைகளில் வெளியிடப்பட்டுக் கொண்டிருந்தன. அதற்கு எதிராக எந்த குரலும் இருக்கவில்லை.

### வரலாற்றுக் குப்பைக்கூடைக்குள்

சிங்கள பௌத்த சக்திகளை பகைத்துக் கொள்ள பலர் விரும்பவில்லை. ஆனால் இது பற்றி ஆளுங்கட்சியினதும் எதிர்க்கட்சியினதும் அபிப்பிராயத்தை அறிய பலர் ஆர்வமாக இருந்தனர். செப்டம்பர் 25ம் திகதியன்று அமைச்சரவை தீமானங்களை அறிவிக்கும் வாராந்த பத்திரிகையாளர் கூட்டம் நடந்தபோது ஒரு பத்திரிகையாளர் அமைச்சரவைப் பேச்சாளரான மங்கள சமரவீரவிடம் கேட்டு விட்டார். அவரும் உணர்ச்சி வசப்பட்டவராக "சிங்கள ஆணைக்குழுவின் அறிக்கை வரலாற்றின் குப்பைக் கூடைக்குள் தான் போடப்படும்" என அறிவித்து விட்டார். அன்றைய தொலைக்காட்சி, வானொலி செய்திகளில் இது கூறப்பட்டதோடு அடுத்த நாள் பத்திரிகைகள் எல்லாவற்றிலும் முன்பக்க முக்கிய செய்தியாக இது இடம்பெற்றது.

தமது தீர்வுத்திட்டத்துக்கு எதிராகவே திட்டமிட்டு முன்னெடுக்கப்பட்ட அந்த ஆணைக்குழுவின் அறிக்கைக்கு எதிராக பதிலளிக்க வேண்டும் எனும் நோக்கம் தான் இருந்ததேயொழிய சிங்கள பௌத்த பேரினவாத போக்குக்கு பதிலளிக்கும் தைரியம் மங்களவிடம் இருக்கவில்லை. எப்படி இருக்க முடியும்? பண்பில் இந்த இரு தரப்புக்குமிடையில் என்ன வித்தியாசம் இருக்கமுடியும்? எந்த அளவில் இருக்கக் கூடும்?

மங்களவின் "குப்பைக் கூடை" கதைக்கு எதிராக கடுமையான எதிர்ப்பை பேரினவாத சக்திகள் காட்டத் தொடங்கின. பௌத்த மகாசங்கத்தினர், இவை மகா சங்கத்தினரை அவமதிக்கும் ஒன்றெனக் கூறி பிரச்சாரம் செய்தனர். மகா சங்கத்தினரை அவமதிப்பதென்பது சிங்கள பௌத்தர்களைப் பொறுத்தளவில் சாதாரண விடயமல்ல. பலர் மங்களவுக்கு எதிராக அறிக்கை வெளியிட்டனர். (பார்க்க பெட்டி செய்தி) எதிர்ப்பு செய்தி சூடுபிடித்தது. செப்டம்பர் 30-ம் திகதியன்று கொழும்பு விகாரமகாதேவி பூங்காவில் 1500க்கும் மேற்பட்ட பிக்குமார்கள் உட்பட பலர்



தேசீய ஒருங்கிணைப்புக் கமிட்டியின் தலைவரும், முன்னாள் பிரதம நீதியரசரும், சிங்கள ஆணைக்குழுவின் தலைவருமான ர ாஜா வனசுந்தர ஆணைக்குழுவின் அறிக்கை யை மகா சங்கத்தினரிடம் கையளிக்கிறார்.

ஒன்று கூடி எதிர்ப்பார்ப்பாட்டத்தை நடாத்தினர். உள்ள புத்தர் சிலைக்கு பூசை செய்துவிட்டு அங்கிருந்த அநகாரிக்க தர்மபாலவின் சிலைக்கருகில் அமர்ந்து தமது எதிர்பார்ப்பாட்டத்தை நடாத்தினர்.

அவ்வார்ப்பாட்டத்தில் ஆளுங்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் கேசரலால் குணசேகர, ஐ.தே.க பா.உ. சுசில் முனசிங்க, முன்னாள் பா.உ.க்களான தினேஷ் குணவர்தன, எஸ்.எல்.குணசேகர, சிங்களயே மகா சம்மத்த பூமி புத்திர பக்ஷ்ய" கட்சியினர் உட்பட பலர் கலந்துகொண்டனர். அமைச்சர் தனது அறிக்கையை வாபஸ் பெற 42 மணிநேர கெடு கொடுத்தனர். எந்த பதிலும் கிடைக்கவில்லை. பின்னர் மேலும் 72 மணி நேரம் வழங்கினர்.

அதே வேளை சகல விகாரைகளிலும், மதச் சடங்குகளிலும் அமைச்சர் மங்கள சமரவீரவை நிராகரிக்கின்ற வகையில் "பத்த நிக்குஜ்ஜன கர்ம" தண்டனையை விதிப்பதாக தேசிய பௌத்த மகா சங்கத்தினர் தீர்மானமெடுத்திருந்தனர். அந்த தீர்மானத்தின்படி "மங்கள உட்பட நாட்டின் ஒற்றையாட்சித் தன்மையை அழிக்கும் நடவடிக்கையில் ஈடுபடும் சதிகாரர்களிடமிருந்து நாட்டை பாதுகாக்க தெய்வத்துக்கு முறையிட்டு தெய்வ சந்நிதிகளில் ஆயிரம் தேங்காய்கள் உடைக்கவும் தீர்மானித்துள்ளோம் என மகா சங்கத்தின் த்லைவர் மாதுலுவாவே சோஹித்த தேரர் அறிக்கை வெளியிட்டார்.

### 'புத்த நிக்குஜ்ஜன கர்மய'

இந்த தண்டனையை மங்களவுக்கு மகா சங்கத்தினர் அளித்துள்ளனர். இதன்படி மங்களவின் மதச்சடங்குகளில் மகாசங்கத்தினர் கலந்து கொள்ளமாட்டார்கள் என்பதுடன் மங்களவின் பௌத்த கடமைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. இந்த தண்டனை வரலாற்றிலேயே இறுதியாக வழங்கப்பட்டது காசியப்பன் அரசனுக்கே.

காசியப்பன் தனது தகப்பன் தாதுசேனனை கொன்றுவிட்டு அரசமர்ந்தவன். ஒருமுறை காசியப்பன் அன்னதானத்துக்கென பிக்குமாரை அழைத்திருந்தான். பிக்குமார் அமர்ந்தனர். அன்னதானத்தை வழங்க முற்பட்டபோது அன்னப் பாத்திரத்தை பிக்குமார் திருப்பிக் கொண்டனர். " தந்தையைக் கொன்ற தனயனின் அன்னதானம் எமக்கு தேவையில்லை என்றனர்..."

மங்கள சமரவீர அளித்திருந்த ஒரு பேட்டியில் " காசியப்பனுக்குப்பின் தண்டனை பெறுவது மங்கள சமரவீர என்று வரலாற்றில் பதிவாவதானது எனக்கு மகிழ்ச்சியே" என தெரிவித்திருந்தார்.

அரசாங்க சார்பு பிக்குவான "ஸ்ரீ ரோஹணபிக்கு பெரமுன"வின் செயலாளர் கெட்டமான்வே தம்மாலங்கார தேரர் தினமினவில் வெளியிட்ட அறிக்கையொன்றில்...

"பத்த நிக்குஜ்ஜன கர்மய'வை அமைச்சருக்கு எதிராக எப்படிவிதிக்க முடியும். இன்று அன்னப் பாத்திரத்தை ஏந்திக்கொண்டு எந்த பிக்கு போகிறார். அந்த தண்டனை விதிக்கப்பட்ட எவரேனும் அன்னமிட வந்தால் அவ் அன்னத்தை பெறாது பாத்திரத்தை திருப்பிக் கொள்ள வேண்டும். பௌத்த தர்மம் சொல்லிக் கொடுத்துள்ள 'நிக்குஜ்ஜன கர்மய' சரி என அவர்கள் எண்ணுவதாயின் பௌத்த தர்மத்தில் சொல்லப்பட்டுள்ளபடி பாத்திரமேந்தி பிச்சையெடுத்து பசி தீர்ப்பதையும் கடைப்பிடிக்க வேண்டும்.என்கிறார்.

"மங்களவுக்கு நீங்கள் என்ன தண்டனை விதிப்பது இதோ பாருங்கள்" எனும் தொணியில் 4ஆம் திகதியன்று வெளியான ஏரிக்கரை பத்திரிகையான தினமின (அரச கட்டுப்பாடு பத்திரிகை) மங்கள சமரவீர பௌத்த சடங்குகள் செய்வதை பெரிய படமாக போட்டு அமர்க்களப்படுத்தியிருந்தது.

விசாரமாகா தேவி ஆர்ப்பாட்டத்துக்கு முன்னைய நாளான 29ஆம் திகதியன்று அமைச்சரவைக் கூட்டத்தின் போது இந்த பிரச்சினையை எவ்வாறு எதிர்கொள்வது என்பது குறித்து பேசப்பட்டது. அதன் போது ஜனாதிபதி சந்திரிகா "ஒரு அறிக்கையை வெளியிட்டு அதை வாபஸ்வாங்கி அந்த பிரச்சினைக்கு முடிவு காணுங்கள்" என கூறியதாக லங்காதீப பத்திரிகை தெரிவித்திருந்தது. இதன் மூலம் அரசின் சரணடைவையே இங்கு வெளிப்படுத்துவதைக் காணலாம். ஜனாதிபதி அவ்வாறு தெரிவித்தாலும் அமைச்சரவையைச் சேர்ந்தவர்கள் தனிப்பட்ட முறையில் மங்களவிடம், "அரசாங்கத்தை பாதுகாக்கின்ற வகையில் அவ்வறிக்கையை மங்களவின் 'சொந்தக் கருத்தாக ஆக்கி' தனிப்பட்ட முறையில் தீர்க்குமாறு தொவித்ததைத் தொடர்ந்து மங்களவும் அதனை ஏற்றுக்கொண்டுள்ளார். அதன்படி மங்கள சமரவீர ஒக்டோபர் முதலாம் திகதியன்று பத்திரிகை அறிக்கையொன்றை வெளியிட்டு தனது பேச்சு மகாசங்கத்தினரை புண்படுத்தியிருந்தால் அதற்காக தான் வருந்துவதாக தெரிவ்த்தார். ஆனால் மகாசங்கத்தினர் அதனை ஏற்கவில்லை. சிங்கள மக்களிடம் பகிரங்கமாக மன்னிப்புக் கோருவதோடு தீர்வுத்திட்டத்தையும் வாபஸ் வாங்க வேண்டுமென்றும் அறிவித்தனர். தொடர்ந்தும் தமது எதிர்ப்பார்ப்பாட்டத்தை நாடுமுழுதும் நடத்தப்போவதாக அறிவித்தனர்.

அரசாங்கமோ இந்த எதிர்ப்புகள் தமது தீர்வுத்திட்டத்துக்கு உலை வைக்கப்போகிறது எனப் பயந்ததில் வேறு சில பிக்குமாரையும் பௌத்த அமைப்புகளையும் சேர்த்துக்கொண்டு மகாசங்கத்தினரின் நடவடிக்கைகளுக்கு எதிராகப் பிரச்சாரம் செய்தது. தொலைக்காட்சி செய்திகளில் அதிக நேரம் இந்த எதிர்ப்பிரச்சாரங்களுக்கு ஒதுக்கப்பட்டதுடன் பௌத்த பிக்குமாரைக் கொண்டே பதிலளித்தது. ஒக்டோபர் 7ஆம் திகதியன்று விகாரமகாதேவி பூங்காவினருகில் அரசாங்கத்தின் தீர்வுத்திட்டத்தை ஆதரித்து ஒரு பெரும் ஆர்ப்பாட்டத்தை அரச சார்பு பௌத்த அமைப்புகள் நடத்தின. பெருமளவில் இதற்குக் கூட்டம் இருந்தது. பல அரச சார்பற்ற நிறுவனங்களும், புத்திஜீவிகளும் "பேரினவாதிகளுக்கு எதிராக" ஒன்று சேர வேண்டும் எனும் நோக்கில் அரசாங்கத்தை ஆதரித்து வருவது வேடிக்கையாக இருக்கம் அதே நேரம் தீர்வுத்திட்டத்தையும் ஆதரித்து தமது வேலைத்திட்டங்களை அமைத்து வருகின்றன. இந்த கண்மூடித்தனமான போக்கு ஒட்டுமொத்தத்தில் பேரினவாதத்துக்கு பலி கொடுக்கும் ஒரு போக்கேயன்றி வேறில்லை.

பேரினவாதிகளின் நடவடிக்கைகளுக்கு மறைமுகமாக நிதியளித்து அதரவளித்து வருவதாக ஐ.தே.க சார்பு சிங்கள வார பத்திரிகையொன்று தெரிவித்துள்ளதும் இங்கு கவனிக்கத்தக்கது. ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட ஐ.தே.க.வினர் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்பதெல்லாம் வெறும் கண்கட்டிவித்தையே. "சிங்கள ஆணைக்குழுவின் அறிக்கை பற்றி அரசாங்கத்தின் நிலைப்பாட்டைத் தெரிவிக்க வேண்டும்" என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் கூறியிருப்பதைக் கொண்டு அதன் உள்நோக்கத்தை அறியலாம். ஐ.தே.க. இது பற்றிய தனது நிலைப்பாட்டை இதுவரை தெரிவிக்கவில்லை. ஆனால் ஆணைக்குழுவின் அறிக்கைக்கு பூரணமாக உடன்பாடில்லாவிடினும் ஒற்றையாட்சித் தன்மை மாறாதிருக்க வேண்டும். எனும் ஆணைக்குழுவின் அறிவிப்புக்கு தமக்கும் உடன்பாடு உள்ளது" என ரணில் தெரிவித்திருப்பதையும் கொண்டு அதன் உண்மையான சுயரூபத்தை அறியலாம்.

அரசாங்கத்தைப் பொறுத்தளவில் பேரினவாதிகளின் இந்த எதிர்ப்புகள் ஒரு பக்கம் தமக்கு வாய்ப்பானதே. ஏனெனில் ஏற்கெனவே அரசு சார்பற்ற அமைப்புகள், புத்திஜீவிகள் பலரையும் பேரினவாதிகளைக் காட்டித்தான் தம்பக்கம் இழுத்துக்கொண்டது. அதே போல் பாராளுமன்ற தமிழ் அரசியல் சக்திகளையும் தம்பக்கம் இழுத்துவிடலாம். "சின்ன, சின்ன பிழையிருந்தாலும் அரசாங்கத்தை கவிழ்க்க விடமாட்டோம்." எனும் பாராளுமன்ற இடதுசாரிகளின் நிலைப்பாடும் இந்த வகையைச் சார்ந்ததே

உண்மையில் பேரினவாதிகள் செய்யும் ஆர்ப்பாட்டத்திலும் எந்த வித அர்த்தமுமில்லையென கூறலாம். அரசாங்கம் உண்மையில் தமிழ் மக்களுக்கும் எதையும் வழங்கிவிடாத பொதியையே முன்வைத்துள்ளது. அந்த வகையில் பேரினவாதிகளின் கடமையைத் தானே அரசாங்கமும் செய்துள்ளது.

பேரினவாதத்தை வளர்ப்பதில் அரசுக்கும், அரசியல் வாதிகளுக்கும் இருந்த பாத்திரம் பாரியது. அரசாங்கங்களே வளர்த்துவிட்ட பேரினவாதப் போக்கானது குறிப்பிட்ட வளர்ச்சியின் பின் அரசே தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முற்பட்டாலும் கட்டுப்படாதது மாத்திரமன்றி பேரினவாதமே அரசை வழிநடத்துமளவுக்கு சென்றுவிடும். அந்த நேரம் அரசு கூட பேரினவாதத்திடம் மண்டியிட்டு, சமரசம் செய்துகொள்ளவும், சரணடையவும் நேரிடும் என்பதற்கு இந்த ஒரு சில போக்குகளே சிறந்த ஆதாரம்.

மங்கள சமரவீர லங்காதீபவுக்கு அித்த பேட்டி இதற்கு நல்ல உதாரணம். அப்பேட்டியில்...

"சிங்கள ஆணைக்குழுவின் நோக்கமான சிங்கள மக்களக்கு நேர்ந்த அநீதிகளை ஒழிப்பது எனும் அதே இலக்கிலேயே அரசாங்கமும் செயற்பட்டு வருகிறது. யுத்தத்தினால் அதிகமாகக் கொல்லப்படுபவர்கள் எமது சிங்கள பௌத்த இளைஞர்களே. இது பற்றிய வருத்தம் இருப்பதாலேயே யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவர ஜனாதிபதி தீர்வுத்திட்டத்தை முன்வைத்துள்ளார். இன்று சிங்கள இனத்தைப் பாதுக்காக நாம் செய்யக்கூடிய உயரிய விடயம் யுத்தித்தினால் கொல்லப்படும் சிங்கள பௌத்த இளைஞர்களின் உயிர்களை பாதுகாப்பதே" (லங்காதீப-5-10-97)

சிங்கள பௌத்த பேரினவாததத்துக்கு நேருக்கு நேர் நின்று எதிர்கொள்ள முடியாமல் தாஜா பண்ணுவதையே இங்கு காண முடிகிறது.

இந்த நிலையில் தமிழ் முஸ்லிம் மலையக மக்களுக்கு இதுவரை சிங்கள ஆட்சியாளர்களினால் ஏற்பட்ட அநீதிகள் குறித்து விசாரணை செய்ய ஆணைக்குழு அமைத்தால் அதன் எதிரொலி என்னவாயிருக்கும்? முதலில் அப்படியொன்றை அனுமதித்து விடுவார்களா? மகா சங்கத்தினரைப்பற்றி எங்குமே அறிக்கையில் குறிப்பிடவோ அறிக்கையில் குறிப்பிடவோ அறிக்கையை பொறுப்பேற்கவோ இல்லை. இல்லாத போது மகாசங்கத்தினரை அவமதித்ததாக எப்படி மகாசங்கத்தினர் கூறமுடியும்? அனுராதபுரத்தில் சிங்கள விசசாயிகள் தற்கொலை செய்து கொண்டபோது அமைக்கப்படாத சிங்கள ஆணைக்குழு தென்னிலங்கையில் 60,000க்கும் மேற்பட்ட சிங்கள இளைஞர்கள் கொல்லப்பட்ட போது அமைக்கப்படாத ஆணைக்குழு, 600க்கும் மேற்பட்ட பிக்குகள் சிங்களத் தலைவராலேயே டயருக்கு இரையாகிய போது அமைக்கப்படாத ஆணைக்குழு இப்போது எங்கிருந்து வந்து முளைத்தது?

இனவாதத்தைத் தவிர வேறு என்ன இருக்க முடியும்?

**கோமதி**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மட்டு. கிராம சேவகர்களின் கதி:

# தர்மலிங்கம் காணாமல் போனது எப்படி?

கிழக்கு மாகாணத்தில் கட்டவிழ்த்து விடப்பட்ட அரச பயங்கரவாதத்தின் மிருகத்தனமான கொலைகளின் உச்சக்கட்டமே, இராணுவக்கட்டுப்பாடற்ற பகுதிகளில் கடமை புரியும் அரச அதிகாரிகள் மீதான இராணுவ வன்முறைகளும், காணாமற் போகும் சம்பவங்களும், 90களில் அம்பாறை மாவட்டத்தில் புலிகளின் ஆதரவாளர்கள் என 30க்கு மேற்பட்டவர்கள் பெரிய நீலாவணை விசேட அதிரடிப்படை முகாமில் ''சொய்ஸா'வினால் 'ரயர்' போட்டு எரிக்கப்பட்டதும், காரைதீவில் கைது செய்யப்பட்ட பொறியியலாளர்களும், ஆசிரியர்களும் காணாமற் போனதுமான சம்பவங்களைப் போன்ற ஒரு பயங்கரமான நிலை இன்று மீள உருவாகியுள்ளது. சென்ற வாரம் அக்கரைப்பற்று தாண்டியடி விசேட அதிரடிப்படை முகாமுக்குட்பட்ட பிரதேசத்தில் புலிகளுக்கு ஆதரவு வழங்கியதாகக் கூறப்பட்டு, நான்கு வீடுகள் விசேட அதிரடிப் படையினரால் எரித்து சாம்பலாக்கப்பட்டுள்ளது. இச்சம்பவத்தை நோக்கும் போது விடுதலைப்புலிகளோடு நேருக்கு நேர் அணுக முடியாத நிலையில் அல்லது தோல்வியை தழுவிய தறுவாயில், புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் கடமை புரிபவர்கள் அல்லது அப்பகுதியில் இருப்பவர்கள் ஒரு சிலரை அடக்கிவிட்டால் போதும் என்ற நிலையிலே இந்த அரசு இருக்கின்றது போலும்.

உண்மையில் இராணுவ கெடுபிடியோடு உருவாகிக்கொண்ட போர் தமிழ் மக்களைப் பூண்டோடு அழிக்கும் இலங்கை அரசாங்கத்தின் நோக்கையே வெளிப்படையாகக் காட்டுகின்றது. கிழக்கு மாகாணத்தைப்பொறுத்தவரையில் 2/3 பகுதி விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருக்கின்றது. இப்பகுதியிலும் மக்கள் வாழ்கின்றார்கள். சிவில் நிர்வாகம் ஒழுங்காக நடைபெறுகின்றது. அரச ஊழியர்கள் இப்பகுதிக்குச் சென்று கடமை செய்ய வேண்டியது அவர்களுடைய பொறுப்பு. இந்நிலையில் இராணுவத்தினரும், அரசு போடும் எச்சில் இலைக்காக தமிழ் மக்களைத் துன்புறுத்தும் தமிழ் குழுக்களும் இவர்களை புலிக்கு ஆதரவு வழங்குபவர்கள் என்ற சந்தேகக் கண்ணோடு நோக்கி புலனாய்வு விசாரணைகளுக்கு உட்படுத்துவது பெரும் போக்கிரித்தனமாகும். இவர்கள் துன்புறுத்தப்படுவதற்கும், காணாமற் போவதற்கும் அரசு பதில் சொல்லியே ஆகவேண்டும். இவ்வாறு விசாரணைக்கு என்று அழைக்கப்பட்ட பலர் துன்புறுத்தப்பட்டிருக்கின்றனர். சிலர் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் 6ம் மாடியில் தடுத்து வைக்கப்பட்டு இருக்கின்றார்கள்.

***செல்லத்துரை தர்மலிங்கம்:***

செப். மாதம் 16ம்திகதி முறக்கொட்டாஞ்சேனை இராணுவத்தினரால் விசாரணைக்குஅழைக்கப்பட்ட செல்லத்துரை தர்மலிங்கம் காணாமற்போயுள்ளார். இவருக்கு நடந்தது என்ன? செப்.15அன்று கடமைக்குச் சென்று திரும்பி வரும்போது இவர் வந்த வாகனத்தை சந்திவெளி இராணுவ முகாமுக்கும், கோரகல்லிமடுவுக்கும் இடையில் உள்ள கிரிமுட்டிபாலம் என்னும் இடத்தில் வைத்து மறித்து 'சுரவீர' என்னும் இராணுவ வீரரும், முன்னை நாள் ரெலோ உறுப்பினரும், தற்போது இராணுவத்துடன் இயங்கிவரும் 'சபா' என்பவரும் 16ம்திகதி காலை 10மணிக்கு முறக்கொட்டாஞ்சேனை இராணுவ முகாமுக்கு வருமாறு உத்தரவிட்டுள்ளனர். இதன்படி மறுநாட் காலை 9 மணியளவில் வீட்டில் இருந்து புறப்பட்டு முகாமுக்கு வந்துள்ளார். இவர் வருமுன் பிரதேச செயலாளருக்கு எழுத்து மூல அறிவித்தல் கொடுத்து விட்டே வந்துள்ளார். 9.50மணியளவில் முகாமுக்கு சென்றுள்ளார். சுரவீர, சபா இருவருமே முகாமுக்கு அழைத்துச் சென்று வேலை செய்யும் இடம் பற்றியும், புலிகள் தொடர்பாகவும் விசாரித்துள்ளனர். அத்துடன் வரும் போது யார் யாருக்கு அறிவித்து விட்டு வந்தீர் என்றும் விசாரித்திருக்கின்றனர். இனிமேல் வரும்போது யாருக்கும் அறிவிக்கக்கூடாது என்றும், நாங்கள் கூப்பிட்டால் இனிமேல் வருவாய் தானே என்று கேட்டுவிட்டு போக அனுமதித்திருக்கின்றார்கள். 10.25க்கு முகாமை விட்டு வந்த தர்மலிங்கம் பக்கத்திலிருந்த பரமலிங்கத்தின் தேனீர்க்டையில் நடந்த சம்பவத்தைக் கூறியிருக்கின்றார். பரமலிங்கமும், தருமலிங்கமும் ஏற்கெனவே பழைய நண்பர்கள் என்றபடியால் நடந்த முழுவிடயத்தையும் கூறியிருக்கின்றார். இவர்கள் இவ்வாறு கதைத்துக்கொண்டிருக்கும் போது முகாமுக்குள் இருந்து ஐந்து இராணுவத்தினர் ஆற்றோரமாக ஓடிச்சென்றுள்ளனர். சென்றவர்கள் முகாமிலிருந்து 100 யாருக்கு அப்பாலுள்ள ஓர் இடத்தில் இருந்து வீதியால் சென்ற இரண்டு மினி பஸ்களையும், லொறி ஒன்றையும் மறித்து 'தருமலிங்கம் ஜி. எஸ். இருக்கின்றாரா என்று விசாரித்துள்ளனர். இந்த வேளையில் தான் வீதியால் வந்து கொண்டிருந்த பேரின்பம் பிரபாகரன் (வாழைச்சேனை கூட்டுறவுக் கடை இலிகிதர்) தர்மலிங்கம் ஜி.எஸ். ஐக் கண்டதும் தான் வந்த மோட்டார் சைக்கிளில் ஏற்றி வந்துள்ளார். காத்து நின்ற இராணுவத்தினர் மோட்டார் சைக்கிளை வழிமறித்து இவருடைய கண்களை கறுப்புத் துணியினால் கட்டி ஆற்றங்கரைப் பக்கமாக உள்ள பிரப்பம் பற்றைக்குள் கூட்டிச் சென்றுள்ளனர். மோட்டார் சைக்கிளை ஒரு இராணுவத்தினன் முகாமுக்கு ஓட்டிச் சென்றுள்ளான். இவர் மோட்டார் சைக்கிளைக் கொண்டு போகும் போது துணியினால் பின்பக்க இலக்கத் தகட்டை மறைத்துக்கொண்டு சென்றுள்ளான். (முன்பக்க இலக்கத் தகட்டை மறைக்காததால்) 108 சிறி 9529 என பொது மக்கள் அவதானித்துள்ளனர். 12.15க்கு பிடித்தவர்கள் 6 மணிக்கு முகாமுக்கு கொண்டு சென்றிருக்கின்றனர். இந்த விடயத்தை அறிந்தவர் பரமலிங்கம் என்பதனால் இவர் சபாவினால் அச்சுறுத்தப்பட்டிருக்கிறார். தற்போது கடையுமில்லை, பரமலிங்கமும் தலைமறைவு. தர்மலிங்கதைக் கைது செய்த மறுநாட் சென்ற சபா 10 நாட்களுக்குப் பின்பே முகாமுக்கு வந்துள்ளார். இவர் வந்தபோது விசாரணைகள் பலமாக இருந்தாலும், இவ்விடயத்தை கண்டவர்கள் உளறி விடுவார்கள் என்பதாலும், அயலில் உள்ளவர்களிடம் 'கிராம சேவகர் பற்றிய விடயம் தொடர்பாக யாரிடமாவது கூறினால் உங்கள் குடும்பங்கள்...?' என்று பயமுறுத்தியதுடன் சிங்களத்தில் எழுதப்பட்ட கடிதம் ஒன்றில் கையெழுத்து இடுமாறு வற்புறுத்தி கையெழுத்தும் பெற்றுள்ளார். உண்மையில் சபா இருக்கும் வரைக்கும் யாரும் முன் வந்து இந்த விடயத்தை சொல்லவும் மாட்டார்கள். சொல்லவும் விடமாட்டான்.

***மாரிமுத்து பீதாம்பரம்:***

இதேபோன்று மாரிமுத்து பீதாம்பரம் என்ற கிராமசேவகரையும் ஒருவாரம் முறக்கொட்டாஞ்சேனை இராணுவ முகாமில் தடுத்து வைத்து புலிகளுக்கு உதவுவதாகக் கூறி சித்திரவதை செய்துள்ளான் சபா. இவர் முகாமுக்குச் செல்லும் போது எழுத்து மூல அறிவித்தல் கொடுத்துவிட்டு வந்தது என்று கூறியவுடன் காசு தரும்படி கேட்டு ஒரு குறிப்பிட்ட தொகை காசு கொடுத்து விடுதலையாகி வந்துள்ளார். ஆனால் தர்மலிங்கத்துக்கு என்ன நடந்தது என்ன ஆனார் என்பது இன்னமும் தெரியவில்லை.


***வேல்முருகு லிங்கநாதன்:***


இதேவேளை வேல்முருகு லிங்கநாதன் என்ற கிராம சேவகர் கடந்த ஜூன்26 அன்று கொழும்பில் வைத்து குற்றப் புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டு 6ம் மாடியில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.


லிங்கநாதன் தனது மனைவியை கண் சிகிச்சைக்காக பொறல்லை கண்வைத்தியசாலையில் அனுமதித்து விட்டு, இவருக்கு துணையாக அருளப்பு மங்களராணி என்ற பெண்ணை நிறுத்தி விட்டு மருதானை 5ம் நம்பர் லொஜ்ட்ஜில் தங்கிநின்றிருக்கின்றார். ஜூன் 24 இரவு 10 மணியளவில் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் அறையில் வைத்து கைது செய்யப்பட்டிருக்கின்றார். இதே தினம் இரவு 10.15மணிக்கு லிங்கநாதனின் மனைவிக்கு துணையாக இருந்த அருளப்பு மங்களராணியும் கைது செய்யப்பட்டு பொறல்ல பொலிசில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். கண்சிகிச்சை நடந்து கண்ணில் மருந்து கட்டியிருந்ததோடு, காயம் ஆறுமுன் மருந்து அவிழ்க்கப்பட்டு லிங்கநாதனின் மனைவியையும் 26ம்திகதி கைது செய்து மங்களராணியோடு தடுத்து வைத்திருந்தனர். மங்களராணியையும், லிங்கநாதனின் மனைவியையும் தடுத்து வைத்த அறைக்குள் பொலிசார் தினமும் சென்று கண்மூடித்தனமாக மங்களராணியைத் தாக்கியுள்ளனர். ஒரு நாள் மங்களராணியை மூன்று பொலிசார் தான் 'புலி என்றும்', 'மின்சார சபைக்கு குண்டு வைக்க வந்தது' என்றும் கூறும்படி பொல்லால் அடித்ததுடன், அவளுடைய மார்பகங்களைத் திருகி இம்சைப் படுத்தியுள்ளனர். இவற்றைப் பார்த்துக் கொண்டிருந்த லிங்கநாதனின் மனைவி மயக்கம் அடைந்து வீழ்ந்ததுடன் அன்றிலிருந்து மங்களராணியை வேறு அறைக்கு மாற்றிவிட்டனர். லிங்கநாதனின் மனைவி கைது செய்யப்பட்டு 22 நாட்களில் விடுதலை செய்யப்பட்டார். இவர் சிறையில் இருக்கும் போது செஞ்சிலுவைச் சங்கத்தினர் பார்க்க வந்த போது அலுமாரிக்குப் பின் மறைத்து விட்டு தாங்கள் பிடித்து விரவில்லை என மூன்று தடவைகள் ஐ.சீ.ஆர்.சியை திருப்பியனுப்பியிருக்கிறார்கள். ஆனால் விடுதலையாகி வந்ததும் லிங்கநாதனின் மனைவியால் நிம்மதியாக வாழ முடியவில்லை. இவர்கள் வீட்டுக்கு யாரும் வர முடியாது. இவர்கள் யாரும் வெளியில் செல்லவும் முடியாது. செல்வதென்றால் பொலிசாரிடம் அனுமதி பெற வேண்டும் எனக் கூறி இவர்கள் வீட்டுக்குச் செல்லும் வழியைக் கூட பொலிசார் தடை செய்துள்ளனர். இத்தனைக்கும் ஒன்றுமறியாத லிங்கநாதன் 6ம் மாடியில். மனைவி, பிள்ளைகள் உரிமைகள் பறிக்கப்பட்ட நிலையில் வீட்டில் சிறைவாசம் அனுபவிக்கின்றனர். லிங்கநாதனின் மனைவியின் கண்களின் காயம் ஆறு முன் மருந்து அவிழ்க்கப்பட்டதனால் மீண்டும் அவருக்கு கண்ணில் வருத்தம் ஏற்பட்டு நோய் வாய்பட்டிருக்கிறார்.


***சின்னத்தம்பி மாணிக்கவாசகம்:***

இதேபோன்று சின்னத்தம்பி மாணிக்கவாசகம் என்ற கிராம சேவகரை அரசாங்க அதிபரினூடாக விசாரணைக்காக அழைத்து கொழும்பு குற்றப்புலனாய்வுப் பிரிவினர் 6ம் மாடியில் தடுத்து வைத்துள்ளார்கள். 28.07.1997 அன்று விசாரணைக்காக சென்ற போதே புலிகளுக்கு ஆதரவு என்று இவரைத் தடுத்து வைத்துள்ளனர். ஐ.தே.க. அரசாங்கத்தினால் வேலையில் இருந்து இடைநிறுத்தப்பட்ட இவருக்கு 1995ம் ஆண்டே மீண்டும் வேலை கிடைத்தது. இந்தக்கால இடைவெளியில் வெளிநாடுகளுக்கு ஆட்கள் அனுப்பும் முகவராக இருந்திருக்கின்றார். இவர் தற்போது கடமை புரியும் மாவடிமும்மாரி என்னும் இடத்தைச் சேர்ந்த பகீரதி என்ற பெண்ணை சிங்கப்பூருக்கு அனுப்புவதற்காக அழைத்துச் சென்றிருக்கின்றார். ஆனால் பயணம் தடைப்பட்டதனால் லொட்ஜ் ஒன்றில் பகீரதியை நிறுத்தி விட்டு வந்திருக்கின்றார். பகீரதியை பொலிசார் கைது செய்துள்ளார்கள். பகீரதி அடி தாங்க முடியாமல் புலிகளுக்கு ஆதரவானவர் என்று ஒத்துக் கொண்டதால், பகீரதியை கொழும்புக்கு கூட்டி வந்தது மாணிக்கவாசகம் என்ற படியினால் பொலிஸார் இவரையும் புலியென்று தடுத்து வைத்திருக்கின்றனர். இவ்வாறாக மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏழு கிராம சேவக உத்தியோகத்தர்கள் கைது செய்யப்பட்டிருக்கின்றார்கள். 95டிசெ. 13இல் கைது செய்யப்பட்ட எருவிலைச் சேர்ந்த நந்தவனம் கிருஸ்ணமூர்த்தி என்பவர் புலிகளின் கடிதம் கொண்டு வந்ததாகக்கூறி களுத்துறையில் இருக்கின்றார். மாங்கேணியைச் சேர்ந்த மயிலிப்போடி அருந்தவநாதன் என்பவரை, புலிகளுக்கு மோட்டார் சைக்கிள் வாங்கிக் கொடுத்ததாகக் கூறி வாழைச்சேனை இராணுவத்தினர் கைது செய்து களுத்துறையில் வைத்திருக்கின்றனர். புலிகள் வந்துபோவதாகக் கூறி தர்மலிங்கம் தயாபரன், ஆரையம்பதியைச் சேர்ந்தவர், கைது செய்யப்பட்டு மட்டக்களப்பு சிறைச்சாலையில் இருக்கின்றார். ஒட்டுமொத்தமாய்ப் பார்க்கப் போனால் கைது செய்யப்பட்ட கிராமசேவகர்கள் அனைவரும் புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசத்தில் கடமை புரிபவர்கள். புலிகளுக்கு ஆதரவானவர்கள் என்ற போர்வையில் கைது செய்யப்பட்டவர்கள். இவர்கள் தொடர்பாக இதுவரைக்கும் எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. எந்த அரசியல்வாதிகளும் அக்கறை காட்டியதாகத் தெரியவுமில்லை.


சின்னத்தம்பி மாணிக்கவாசகம்


செல்லத்துரை தர்மலிங்கம்


வேல்முருகன் லிங்கநாதன்


பேரின்பம் பிரபாகரன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# முசலி மக்கள் அச்சம் தவிர்க்க..



1990 ஒக்டோபர் மாதம் பலவந்தமாக தமது சொந்த மண்ணிலிருந்து வெளியேற்றப்பட்ட (வடமாகாணத்தில் மன்னார் மாவட்டத்தில் உள்ள) எமது முசலிப் பகுதி முஸ்லிம் மக்கள் கடந்த ஏழு வருட காலமாக அகதி முகாமில் மிகக் குறைந்த அடிப்படை வசதிகளுடன் ஓலைக் குடிசைகளில் தமது காலத்தை கழித்துக் கொண்டிருக்கின்றனர். இந்நிலைமையில் தற்போது வவுனியா - மன்னார் தரைப்பாதை திறக்கப்பட்டு எமது முசலிப் பிரதேசம் சிவில் நிர்வாகத்திற்கு திரும்பியுள்ளதாகவும், அங்கு கடமையாற்றிய முசலிப் பிரதேச அரச ஊழியர்களை மீண்டும் கடமைக்கு திரும்புமாறும் அரசு அறிவித்துள்ளது.

அடுத்த கட்டமாக சிவில் நிர்வாகத்திற்குட்பட்ட எமது முசலிப் பகுதியில் மக்களை மீளக்குடியேறும்படி அரசு அறிவிக்குமாயின் நாம் என்ன முறையில் மீளக்குடியேறுவது? அதற்கான சாத்தியப்பாடுகள் உண்டா? எம் மக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படுமா? தமிழ் ஆயுதக்குழுக்களின் அச்சுறுத்தல்கள் ஏற்படாதா? எமது மீள்குடியேற்றம் திட்டமிட்ட அடிப்படையில் நடைபெறுமா? நாம் இழந்த சொத்துக்களுக்கான இழப்பீடுகள் கிட்டுமா? எமது அரசியல் அபிலாஷைகள் நிறைவேற்றப்படுமா? இவைபோன்ற பல தரப்பட்ட கேள்விளுக்கு விடை காணவும் எம் மக்களின் மீள்குடியேற்றம் சார்பான பிரச்சினைகள் அடையாளம் காணப்பட்டு, அதற்குரிய சாத்தியமான, ஏற்றுக் கொள்ளக்கூடிய தீர்வுத்திட்டங்கள் முன்வைக்கப்படவும், எமது சமூகத்தை வழிகாட்டவும், வழிநடத்த உறுதியும், தெளிவும் தன்னலமற்ற தூர நோக்கம் கொண்ட ஒரு சமூகத் தலைமைத்துவத்தின் தேவை எமது முசலிப் பிரதேச முஸ்லிம் மக்கள் மத்தியில் உணரப்பட்டுள்ளது. இந்த அடிப்படை சிந்தனை மாற்றம் எம் மக்களிடையே ஒரு அமைப்பை உருவாக்கி தமது பிரச்சினைகளுக்கு தீர்வு காண வழி அமைத்துக் கொடுத்திருக்கின்றது. அதன் தோற்றப்பாடுதான் தற்போது எம் மக்களால் உருவாக்கப்பட்டிருக்கும் எமது முசலிப்பிரதேச மக்கள் ஒன்றியம். இதில் எமது முசலிப் பிரதேசத்திலுள்ள 20 முஸ்லிம் கிராமங்களிலிருந்தும் ஐந்து பேருக்கு குறையாத கிராமியக் குழுக்கள் ஒவ்வொரு கிராமத்திலிருந்தும் உருவாக்கப்பட்டு, இக்கிராமியக் குழுக்கள் இணைந்து பொதுச்சபையை உருவாக்கியுள்ளது. இக்கிராமியக் குழுக்களை கொண்ட பொதுச் சபையிலிருந்து ஒன்றுக்கு குறையாத உறுப்பினர்கள் ஒவ்வொரு கிராமியக் குழுவிலிருந்தும் தெரிவு செய்யப்பட்டு செயற்குழு உருவாக்கப் பட்டுள்ளது.

இவ்வமைப்பானது மீள்குடியேற்றத்துடன் தொடர்புடைய பல்வேறு பிரச்சினைகளுக்கு விடைகாண இம்மக்களிடையே ஆய்வொன்றை நடாத்தியது. இதிலிருந்து இவ்வமைப்பானது இம்மக்களின் இறுதி இலட்சியமான ''சொந்த இடத்திலான மீள் குடியேற்றம்'' என்ற அம்சத்துடனான தனது நிலைப்பாட்டை பின்வருமாறு விளக்க விரும்புகின்றது. அவை:-

1. மீள்குடியேற்றத்திற்கு தயார் படுத்தும் கால கட்டம்.
2. மீள்குடியேற்ற கால கட்டம்.
3. நிலையான (ஸ்திர) சமூக அமைப்புக்கான கால கட்டம்.

### மீள்குடியேற்றத்திற்கு தயார் படுத்தும் கால கட்டம்

முசலிப் பிரதேச முஸ்லிம் அகதிகள் தமது சொந்த இடத்தில் அச்சமின்றி வாழ்வதற்கான மனவுறுதியைத் தோற்றுவித்தல்:-

#### 1. விடுதலைப்புலிகள்:

எமது மக்களை எமது தாயக மண்ணிலிருந்து வெளியேற்றிய அமைப்பு என்ற ரீதியில் முஸ்லிம்களின் மீள் குடியேற்றம் தொடர்பாக விடுதலைப் புலிகளின் அங்கீகாரம் மாத்திரமின்றி, அவர்களின் ஒத்துழைப்பும் அவசியமானதாகும். இது மீளக்குடியேற இருக்கும் முஸ்லிம்களை தைரியப் படுத்த உதவுவதுடன், முஸ்லிம்கள் மீளக்குடியேறிய பிறகும் அச்சமின்றி வாழவும் உதவும்.

விடுதலைப்புலிகளின் நிலைப் பாட்டில் இன்று பல மாற்றங்கள் காணப்படுவதை இலத்திரனியல் ஊடகங்கள் மூலமாக அறியக் கூடியதாகவிருக்கின்றது. அது மாத்திரமின்றி முஸ்லிம்களின் பலவந்த வெளியேற்றத்தின்போது இருந்த நிலைப்பாட்டில் அவர்கள் இன்று இல்லையென்பதை அண்மையில் எமது முசலிப் பிரதேசம் சென்று எமது கிராமங்களின் தற்போதைய அவல நிலையைப் பார்த்துவிட்டு வந்த முசலிப் பிரதேச அகதி மக்களின் மூலமாகவும் அறியக் கூடியதாக இருக்கின்றது. முஸ்லிம்களின் மீள்குடியேற்றத்தைப் பொருத்தவரை இது ஒரு சாதகமான அம்சம் மாத்திரமின்றி, முசலிப் பிரதேச முஸ்லிம்கள் தமது சொந்த இடத்தில் மீளக் குடியேறுவதை விடுதலைப்புலிகள் அங்கீகரித்து அனுமதிக்கக்கூடும் என்ற சூழ்நிலை இன்று காணப்படுவதை அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது. இது முசலிப் பிரதேச முஸ்லிம் அகதிகள் தமது சொந்த இடத்தில் அச்சமின்றி வாழ்வதற்கான மனவுறுதியைத் தோற்றுவிக்கும் என்பதில் ஐயமில்லை.

அதனால் முசலிப் பிரதேச முஸ்லிம்களின் மீள்குடியேற்றத்திற்கு விடுதலைப் புலிகளின் சம்மதத்தை பெற்றுக்கொள்ள வேண்டியது அவசியமும், அவசரமும் ஆகும். இதில் முசலிப் பிரேதச முஸ்லிம்கள் மிக நிதானமாகவும், அவதானத்துடனும், மிகக் கவனமாகவும் எதிர் காலத்தைப் பற்றி சிந்தித்து செயலாற்றக் கூடிய தூரநோக்கு கொண்டவர்களாகவும் நடந்து கொள்ள வேண்டும். இவ்வாறான ஒரு முயற்சி ஆரம்பத்தில் இருதரப்பு அதாவது விடுதலைப் புலிகளுக்கும், வடக்கு முஸ்லிம்களுக்கும் பேச்சுவார்த்தையின் அடிப்படையில் இருந்தாலும், பின்னர் இப்பேச்சுவார்த்தையிலிருந்து பெறப்பட்ட பெறுபேறுகள், விளைவுகள், தேசிய, சர்வதேச சமூகத்தின் அங்கீகாரத்திற்கும், ஒத்துழைப்பிற்கும் இடமளிக்கும் அடிப்படையில் அமைய வேண்டியது அவசியமாகும்.

#### 2. அரசு

இந்நாட்டின் இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வு ஏற்படும்வரை இராணுவ ரீதியாக மத்திய அரசின் செல்வாக்கு முசலிப் பிரதேசத்தில் தொடர்ந்திருக்கும். அது தவிர, முசலிப் பிரதேச முஸ்லிம்கள் இப்போது அரசின் முழுமையான செல்வாக்கிற்கு உட்பட்ட தென் மாகாணங்களில் குறிப்பாக புத்தளம், அநுராதபுரம, குருநாகல ஆகிய மாவட்டங்களில் உள்ள அகதி முகாம்களில் அரசின் தயவுடன் வாழ்பவர்களாக இருக்கின்றார்கள்.

அரசு ஏலவே வவுனியா - மன்னார் தரைப்பாதை திறக்கப்பட்டு முசலிப் பிரதேசம் சிவில் நிர்வாகத்திற்கு திரும்பியுள்ளதாக அறிவித்துள்ளதால் இம்மக்களின் மீள்குடியேற்றத்துடன் தொடர்புடைய புனர் நிர்மானத்திற்கும், இதர நடவடிக்கைகளுக்கும் அரசின் நேரடியான, மறைமுகமான உதவி தேவைப்படுகின்றது. அது மாத்திரமின்றி, எமது மக்களின் பொருளாதார இழப்பீட்டிற்கு நஷ்ட ஈடு தரவேண்டிய கட்டாயக் கடமையும் அரசிற்கேயுரியதாயிருக்கின்றது. அதாவது மீள்குடியேற்றத்தில் விடுதலைப்புலிகள் என்ற அம்சம் எவ்வளவு முக்கியமோ அந்த அளவுக்கு இலங்கை அரசும் முக்கியமானதாகும்.

#### 3 சர்வதேச ஸ்தாபனங்கள்

இலங்கையின் இனப்பிரச்சினையில் சம்பந்தப்பட்ட எல்லா இனக்குழுக்களும் இனப்பிரச்சினைக்கான தீர்வில் தத்தமது பிரதேச நிலைப்பாட்டிற்கு முக்கியத்துவம் கொடுக்கின்றனர். அதிலும் குறிப்பாக வட மாகாணத்திலுள்ள உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில், முசலி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மாத்திரமே நீண்ட நிலப்பரப்பில் முஸ்லிம் மக்கள் பெரும்பான்மையாக பரந்து காணப்படுகின்றனர். எனவே எமது அபிலாஷைகளை பேச்சு வார்த்தையில் முன்னெடுத்துச் செல்லக்கூடிய ஆற்றல் ஒரு மூன்றாந்தர சர்வதேச மத்தியஸ்தத்தால் மாத்திரமே முடியும்.

அது மாத்திரமின்றி யுத்தத்தால் பாதிக்கப்பட்ட முசலிப் பிரதேசத்திற்கான மீளமைப்பிற்கு சர்வதேச நிதியுதவி தேவைப்படுகின்றது. மேலும் பலவந்த வெளியேற்றத்திற்குட்பட்ட எமது முசலிப் பிரதேச முஸ்லிம்கள் சர்வதேச நியாய அடிப்படையில் நோக்கப்பட்டு அவர்களுக்கு பொருத்தமான மீள்குடியேற்றம் ஒன்று செய்யப்படுவதில் இச் சர்வதேச ஸ்தாபனங்கள் செல்வாக்கு செலுத்தக்கூடியதாக இருக்கின்றது.

### முசலிப் பிரதேசத்தை முசலி முஸ்லிம்களின் மீள்குடியேற்றத்திற்கு தயார் படுத்தல்:

முசலிப் பிரதேச மக்களின் பலவந்த வெளியேற்றத்தின் பின்பு அதாவது ஏறக்குறைய ஏழு வருடங்களின் பின்பு அங்கு சென்று திரும்பிய கிராம சேவை அலுவலர்களின் கருத்துப்படி சகல பொருளாதார வளங்கள், சமூக கட்டமைப்புகள், குடியிருப்பு சூழல்கள் என்பன முற்றாக அழிக்கப்பட்டு ஒரு வனாந்தரமாக முசலிப் பிரதேசம் காட்சியளிக்கின்றது.

எனவே சொந்த இடத்திலான மீள் குடியேற்றமொன்றில் இம்மக்களின் குடிசன மாற்றங்களுக்கேற்ப பொருளாதார வளங்கள் (விவசாய, மீன்பிடி என்பவற்றுடன் தொடர்பானவை) சமூக கட்டமைப்புகள் (பள்ளிவாசல்கள், பாடசாலைகள், வைத்தியசாலைகள் என்பன) மீளக் கட்டியெழுப் பப்படுவது, திட்டமிட்ட முறையில் குடியிருப்புச் சூழல்கள் அமைக்கப்பட வேண்டியது அவசியமாகும். அதாவது ஏழு வருடங்களின் பின்பு முசலிப் பிரதேசத்தில் அமைக்கப்படப் போகின்ற ஒரு மீள்குடியேற்றத் திட்டம் 21ஆம் நூற்றாண்டின் சமூகப் பொருளாதார சவால்களுக்கேற்ப திட்டமிடப்பட வேண்டியதும், செயற்படுத்தப்பட வேண்டியதும் அவசியமாகும்.

தயார் படுத்தல் என்பது மீள்குடியேற இருக்கும் மக்களையும் அவர்கள் மீளக்குடியேற இருக்கும் பிரதேசத்தையும், மீளக்குடியேற்றத்திற்காக தயார் படுத்துவதைக் குறிக்கின்றது. அகதிகளும் மீளக்குடியேற இருக்கும் பிரதேசமுமே ஒரு மீள்குடியேற்றத்தின் அடிப்படைக் காரணிகளாகும்.

அகதிகள் சொந்த இடத்திலான மீள் குடியேற்றத்திற்கு உளவியல் ரீதியாக தயார்படுத்தப்படல் வேண்டும். குறிப்பாக ஆயுதக் குழுக்கள் பற்றிய அச்சம் நீக்கப்படல் வேண்டும்.

அது போல மீள்குடியேற்றப் பிரதேசமும், புனர்நிர்மாண அடிப்படையில் தயார்படுத்தப்படல் வேண்டும். மீள் குடியேற்றத்திற்கான பழைய, புதிய இடங்கள் முஸ்லிம்களின் எதிர்கால சுபிட்ச அடிப்படையில் புனரமைக்கப்பட வேண்டும்.

முசலிப் பிரதேச முஸ்லிம் அகதிகள் முசலியில் அச்சமின்றி வாழ்வதற்கான மன உறுதியை தற்போது அவர்கள் வாழும் முகாம் சூழலில் ஏற்படுத்தும் அதே காலகட்டத்தில், முசலிப் பிரதேசத்தையும் முசலி முஸ்லிம்களின் மீள்குடியேற்றத்திற்கு தயார் படுத்தப் படல் வேண்டும். இவ்விரண்டு முக்கிய நிகழ்வுகளும் ஒரே கால கட்டத்தில் செய்து முடிக்கப்பட வேண்டியது அவசியமாகும். திருப்தி அளிக்கக் கூடிய விதத்தில் இவ்விரண்டு நிகழ்வுகளும் பூர்த்தியாக்கப்பட்ட பின்பு மீள்குடியேற்றம் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

### மீள்குடியேற்ற காலகட்டம்

ஏற்கெனவே மீள்குடியேற்றத்திற்காக தயாரிக்கப்பட்ட இடத்தில் முசலிப் பிரதேச முஸ்லிம் அகதிகளை குடியேற்றுவதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

அதாவது சொந்த இடத்திலான மீள்குடியேற்றம் திட்டமிட்ட அடிப் படையில் செயற்படுத்தப்பட வேண்டிய ஒன்றாகும். வெற்றிகரமான மீள்குடியேற்றத் திட்டம் குறுங் காலத்தில் நிறைவேற்றப்பட முடியாததொன்று. தமது சொந்த இடங்களில் அகதிகள் மீள்குடியேறுவதற்கு முன் செய்யப்பட வேண்டிய முன் ஆயத்த நடவடிக்கைகள் பல காணப்படுகின்றன. அது போலவே மீள்குடியேற்றம் மூலம் அகதிகளை பௌதீக ரீதியாக அகதி முகாமிலிருந்து அவர்களின் சொந்த இடங்களில் கொண்டு விட்டு விடுவதுடன் அகதிகளின் பிரச்சினைகள் முடிந்து விடுவதில்லை. நீண்ட அகதி வாழ்க்கையின் பின்பு மீள் குடியேறும் மக்கள் அச்சமின்றி தமது வாழ்க்கையை தமது சொந்த இடங்களில் தொடர்வதற்கான பொருத்தமான சூழ்நிலைகளை உருவாக்கிக் கொடுப்பது அவசியமானதாகும். அதாவது, மற்றுமொரு பலவந்த அல்லது வேறுவகையான வெளியேற்றத்திற்கு இம்மக்கள் எதிர் காலத்தில் உள்ளாகாதவாறான சமூக, அரசியல், பொருளாதார சூழல்கள் வாழும் பிரதேசத்தில் ஏற்படுத்தப்பட வேண்டும்.

### நிலையான சமூக அமைப்பிற்கான கால கட்டம்

மீள்குடியேறிய பின்பு நிலையான (ஸ்திர) வாழ்க்கைக்கான தொடர்ச்சியான முயற்சிகள், தத்தமது பொருளாதார நிலைகளுக்கு ஏற்ப அந்தந்த மக்களின் தொடர்ச்சியான சுய முயற்சியின் மூலம் கட்டியெழுப் பப்படவேண்டும்.

இதற்குத் தேவைப்படும் பொருத்தமான காலம், நேரம் என்பன அங்கு மீள்குடியேறிய முசலி பிரதேச முஸ்லிம்களின் மனநிலையில் மாத்திரமின்றி, அங்கு கிடைக்கக்கூடிய தத்தமது தொழில் ரீதியான சுயமுயற்சிக்கு தேவைப்படும் மூலப் பொருட்களிலும், அவற்றுடன் தொடர்பான இதர சேவைகளிலும் தங்கியுள்ளது. O

*முஸலிப் பிரதேச மக்கள் ஒன்றியத்தின் அறிக்கை*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

## வெட்கத்தை விட்டு வேதனைகளுடன் - 03

### திருமணம் முடிந்து விட்டது; வரவேற்கத் தயாராகுங்கள்!

அலியார் மவ்சூக்

எடுத்த துப்பாக்கிகளை இரவோடிரவாக எடுத்து வந்து ஆலையடிவேம்பைச் சேர்ந்த த.வி.கூ. அபிமானி ஒருவரின் வீட்டில் வைத்து விட்டு வந்தோம். அடுத்தநாள் காலை அம்பாறை மாவட்டமே அல்லோலகல்லோலப்பட்டது. அக்கரைப்பற்று மக்கள் வங்கியில் அப்போது வேலை செய்து கொண்டிருந்த கிருபாகரன் (வ.கி.மாகாண நிதியமைச்சர்) என்னிடம் ஓடிவந்தார். மவ்சூக் என்ன இது. நமக்குத் தெரியாமல் நேற்றிரவு யாரோ தம்பிலுவிலில் துப்பாக்கி திரட்டியுள்ளார்களே! சீ இந்த வேலையை நாம் செய்ய முடியாமல் போய் விட்டதே என்றார். இவரிடம் ஒரு அரைமணிநேரம் துக்கம் விசாரித்து விட்டு நாம்தான் இதைச் செய்தோம் எனது தலைமையில் தான் இது நடந்தது என்றேன். திகைத்த கிருபாகரன் எங்கே துப்பாக்கிகள் என்றார். பாதுகாப்பாக இருக்கின்றது என்றேன். சென்று விட்டார்.

என்னமாயம் நடந்ததோ தெரியாது. அடுத்தநாளில் இருந்து குன்சிகுணசேகரம் இங்கு நடமாடத் தொடங்கினார். வேலைகள் தீவிரமாகின. கிழக்கு மாகாண இளைஞர்கள் ஒவ்வொருவரும் நாயாய் அலைந்தனர். மட்டக்களப்பு மாநகரம் இளைஞர்களால் நிரம்பி வழிந்தது. ஈ.பி.ஆர்.எல்.எப். இளைஞர்கள் ஒரு பக்கம், புளொட் இளைஞர்கள் ஒரு பக்கம், சித்தார்த்தன் குரூப் இன்னொரு பக்கம்.

ஒவ்வொரு நிமிடமும் சிறையில் இருந்து தகவல்கள் திரட்டப்பட்டன. நாட்கள் நெருங்கியது. ஆனால் அக்கரைப்பற்றில் இருந்து மட்டக்களப்பு வரை ஆயுதங்களை கொண்டு செல்ல வழி தெரியாமல் இருந்தது. இறுதியாக கல்முனையைச் சேர்ந்த தங்கப்பல் நாட்டாமை எனப்படுகின்ற ஒரு முஸ்லிம் தனவந்தரின் மகனான ஹசன் என்பவரிடம் விசயத்தைச் சொன்னேன். எடுத்தார் டட்சன் சன்னி (Datson Sunny) காரை, விரைந்தார் என்னுடன் ஆலையடிவேம்புக்கு, ஏற்றினார் துப்பாக்கிகளை. பறந்தார் மட்டக்களப்புக்கு, இறக்கினார் கல்லடியில். ''அஸ்ஸலாமு அலைக்கும் போய் வருகிறேன் மச்சான்'' என்றார். போய் விட்டார்.

பின்னாளில் ஹசன் என்கிற இந்த முஸ்லிம் இளைஞர் சென்னைக்கு சென்று தோழர்களிடம் சில உதவிகள் கேட்டபோது யார் நீ எனக்கேட்ட இதே தோழமைகளை நினைக்கும் போது!! இன்று அந்த இளைஞன் உறவினர்களாலும் வெறுக்கப்பட்டு, நண்பர்களாலும் ஒதுக்கப்பட்டு சென்னையில் திருமணம் செய்து கொண்டு படும் வேதனைகளை பார்க்கும் போது!!

மறுநாள் இரவு மட்டக்களப்பு சிறைச்சாலை முழுக்க முழுக்க கிழக்கு மாகாண இளைஞர்களின் ஒத்துழைப்புடன் உடைக்கப் பட்டது. பல லெபனான் ட்ரெனிஸ்ட்களையும், லெபனான் ட்ரைனி என கூறிக்கொள்பவர்களையும், பல வீர தீர செயல்கள் செய்தவர்களையும், வீர தீர செயல்கள் செய்ததாக கூறிக் கொண்டிருப்பவர்களையும், சில மனிதாபிமானிகளையும்; காக்கைகளுக்குக்கூட குறிபார்த்து கல்லடிக்க முடியாத நாங்கள் அன்று இரவு 7.40க்கு சுதந்திர பறவைகளாக்கினோம். அன்று கூட்டத்துடன் கூட்டமாக எங்களை விட்டுப் பிரிந்த வரதராஜப்பெருமாள் (வ.கி.முதலமைச்சர்) அவர்களை ஓரிரு நாட்களில் கார் ஒன்றில் அனுப்பிவைத்தோம்.

சிறை உடைப்பு நடந்தது அடுத்த நாள் கல்முனை தபால் நிலையம் சென்று 300/=ரூபா பணம் செலுத்தி பி.பகல் 2மணிக்கு இந்தியாவுக்கு டெலிபோன் கணக்ஷன் ஏற்படுத்தித் தருமாறு கூறிவிட்டு வந்தேன். இக்காலகட்டத்தில் நேரடி வெளிநாட்டு தொலைபேசி வசதிகள் இப்பகுதியில் இருக்கவில்லை. பி.பகல் 2மணிக்கு தோழர் பத்மநாபா உடன் பேசினேன்: இங்கு முந்தநாள் இரவு 7.40க்கு திருமணம் முடிந்து விட்டது. பெண் மாப்பிள்ளையுடன் 45பேர் மட்டில் வருகின்றார்கள். வரவேற்க தயாராகுங்கள் என்றேன்.

இதில் ஆச்சரியம் எவ்வென்றால், சிறை உடைப்பு நடந்து இரண்டு நாள் ஆகியும் யாழ் ''பவர் புள்''களால் தலைமைக்கு செய்திகள் அனுப்பப்படவில்லையென்பதை தெரியப்படுத்தவே இதை எழுதுகின்றேன்.

வள்ளங்கள் வந்தாரை வாழவைக்கும் தமிழகத்தின் கரைகளை அடைந்தன. தோழர்களை இந்தியப்பத்திரிகைகளும், தொலைக்காட்சிகளும், வானொலியும் சுற்றிவளைத்தன. ஆம் பேட்டிகள் தொடங்கின. தோணியில் ஒரு கால், கரையில் ஒரு கால். கைகளில் ஏந்திய துப்பாக்கிகளுடன் தோழர்கள் போஸ் கொடுக்கத்தொடங்கினர். இந்திய மக்களுக்கு புதிய கதைகள் சொல்லப்பட்டன. மட்டக்களப்பு சிறை இருந்த இடத்தில் சாம்பல் கிடக்கின்றது. லெபனானில் பெற்ற பயிற்சியை கொண்டு எவ்வாறு சிறையை உடைத்து சீறிப்பாய்ந்தோம் என யாழ் இளைஞர்கள் அங்கே பேட்டிகள் தொடங்க, இங்கே சிறை உடைப்பில் முழுக்க முழுக்க பங்கு பற்றிய கிழக்கு மாகாண இளைஞர்கள் இராணுவம், பொலிசாரின் கண்களில் மண்ணைத் தூவுவதற்காக உண்ண உணவின்றி, உடுக்க உடையின்றி தங்க இடமின்றி ஊர்விட்டு ஊர் அலைந்து கொண்டிருந்தனர்.

அனைத்து பேட்டிகளிலும், புகைப்படங்களிலும் மட்டக்களப்பு இளைஞர்களின் திறமைகள் மூடி மறைக்கப்பட்டன. முழுக்க முழுக்க யாழ் இளைஞர்களின் சாதனை இது என கதைகள் சொல்லப்பட்டன. உலகின் சிறந்த ''இண்டலிஜன்'' என வர்ணிக்கப்படுகின்ற 'றோ', 'சி.பி.ஐ.' (இந்திய உளவு ஸ்தாபனங்கள்) என்பன குருட்டாம் போக்காக செயல்பட்டன. இந்த ஸ்தாபனங்கள் இவர்களின் புகைப்படங்களையும், பேட்டிகளையும் சேகரித்து ''மகா திறமைசாலிகள்'' என மேலிடத்துக்கு தெரிவித்துவிட்டன.

பத்திரிகைகளுக்கும், வார இதழ்களுக்கும் போஸ் கொடுத்தவர்களில் ஒரு பகுதியினர் அந்தப் புகைப்படங்களையும், பேட்டிகளையும் வெளிநாட்டு தூதுவராலயங்களில் ஆவணங்களாக காட்டி ஐரோப்பிய நாடுகளுக்கு பறக்க (இவர்கள் இந்திய மண்ணில் காட்டிய லெனினிஸ, மார்க்சிய கூத்துக்களை எதிர்வரும் வாரங்களில் புகைப்படங்களுடன் தருவேன்) இன்னொரு பகுதியினர் றோ, சி.பி.ஐ., என்.ஐ.பி. போன்ற அமைப்புகளுக்கு காட்டி அரசியல் அத்திவாரங்களை போட்டுக்கொண்டனர்.

அன்று சிறைக் கதவை உடைத்துத் திறந்து சிறையதிகாரிகளின் கைகளைக் கட்டி, வாய்களில் பிளாஸ்டர் ஒட்டி துப்பாக்கி சமர் நடாத்தி, மட்டு நகரையே ஒரு அரைமணிநேரம் ஸ்தம்பிக்க வைத்த தம்பிலுவில், அக்கரைப்பற்று, காரைதீவு, களுவாஞ்சிக்குடி, மட்டக்களப்பு, கிரான், செங்கலடி, வாழைச்சேனை இளைஞர்கள் தாயைப் பிரிந்து, சகோதர சகோதரிகளைப் பிரிந்து உற்றார் உறவினர், பிறந்த மண், செய்த தொழில் அனைத்தையும் பிரிந்து கிழக்கு மாகாண வீதிகளில் இன்றும் அலைந்து கொண்டிருக்கின்றார்கள்.

ஆனால் தோழர்கள், தோழர்களின் தோழர்கள் பிரசிடன்சி ஹோட்டல், தமிழ் நாடு ஹோட்டல்களில் திருமணங்கள் நடாத்தி மகிழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

தொடரும்

## கதிர்காமரும் செஞ்சோற்றுக் கடனும்.

'புலிகள் பத்துவயதுச் சிறுவர்களைக் கூட பலவந்தமாகத் தமது இயக்கத்தில் சேர்த்துக் கொள்கிறார்கள். அவர்கள் இச்சிறுவர்களை கடத்திச் சென்று, மூளைச் சலவை செய்து, தியாகத்திற்குத் தயாராகுமாறு ஊக்குவிக்கிறார்கள். அதே நேரத்தில் இந்த இயக்கத்தின் தலைவர்கள் தமது சிறார்களை வெளிநாடுகட்கு பாதுகாப்பாக கல்வி கற்க அனுப்பி வைக்கிறார்கள்.....''

''விடுதலைப் புலிகளின் தலைவர் ஆயிரக் கணக்கான இளம் சிறார்களை கொலைக் களத்திற்கு அனுப்பும் அதே நேரம் தனது குழந்தைகளை யுத்தக் களத்திற்கு வெளியே, நாட்டிற்கு வெளியே முற்றிலும் பாதுகாப்பான இடத்திற்கு அனுப்பியுள்ளார்...''

கடந்த வாரம் நடைபெற்ற ஐ.நா. பொதுச் சபைக் கூட்டத்தில் உரையாற்றிய வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் அவர்கள் கூறியவற்றில் சிலவே இவை.

விடுதலைப் புலிகளை அமெரிக்கா தடை செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை நியூயோர்க்கில் வைத்து அமெரிக்க இராசாங்க செயலாளர் மடலீன் அல்பிறட் அம்மையாரிடம் முன்வைத்த அமைச்சர் அதன் பின் நடந்த பொதுச்சபைக் கூட்டத்தின் போதே புலிகளின் 'குழந்தைக் கடத்தல்' பற்றியும் தெரிவித்திருந்தார். கூடவே புலிகளைத் தடை செய்வதன் மூலம் தமிழ்க் குழந்தைகளைக் காப்பாற்றுமாறும் அவர் கோரிக்கை விடுத்திருந்தார்.

பாதுகாப்பு அமைச்சரின் குழந்தைகள் மீதான அக்கறை யாரையும் மெய் சிலிர்க்க வைக்கும் என்பதில் ஐயமில்லை. அவ்வளவுக்கு உருக்கமாக 'மனோ வியாதி பிடித்த புலிகளால்' குழந்தைகள் அநியாயமாக கொல்லப்படுவது பற்றி அவர் எடுத்துக் கூறினார்.

ஆனால் எமக்கு எழுகிற ஒரேயொரு சந்தேகம் இதுதான்:

அதுசரி, ஏன் கதிர்காமருக்கு இப்போது திடீரென குழந்தைகள் மீது அதுவும் வடக்கு கிழக்கு தமிழ்க் குழந்தைகள் மீது இவ்வளவு அக்கறை ஏற்பட்டது?

உண்மையில் குழந்தைகள் மீது இவ்வளவு அக்கறை உள்ளவர் தான் அமைச்சர் கதிர்காமர் என்றால், புலிகளால் தமது இயக்கத்திற்கு 'கடத்திச் செல்லப்படாத' பல லட்சக்கணக்கான குழந்தைகள் அங்கு அகதி முகாம்களிலும், யுத்தத்தின் மத்தியில் நசுங்குண்டும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்களே... உண்ண உணவின்றி, உடுக்க உடையின்றி, சீரான கல்வி வாய்ப்பின்றி, நோய்க்கு உரிய மருந்தின்றி தவிக்கிறார்களே அவர்கள் குறித்து அமைச்சர் ஏன் இதுவரை வாய் திறக்கவில்லை?

பாடசாலைகள் மீது குண்டு போடப்பட்டு மாணவர்கள் கொல்லப்பட்ட போதும், பள்ளிச்சிறுமிகள் பாலியல் பலாத்காரத்திற்கு உட்படுத்தப்பட்ட போதும் அமைச்சரின் இந்தக் கரிசனை எங்கே போயிருந்தது? ஏன் அவ்வளவு தூரம்? நாள்தோறும் பத்திரிகைகளில் தென்னிலங்கைக் குழந்தைகள் வாழ்வு சீரழிக்கப்படுவது பற்றி வரும் செய்திகள் குறித்து அவர் மௌனம் சாதிப்பது ஏன்?

புலிகளின் இயக்கத்திற்கு 'கடத்திச்' செல்லப்படும் குழந்தைகள் மட்டும் தான் குழந்தைகளாக அவருக்குப்படுவது ஏன்?

புலிகளின் தலைவர்கள் தமது குழந்தைகளைப் பாதுகாப்பாக இருக்க விட்டுவிட்டு பிற குழந்தைகளைக் கொலைக்களத்திற்கு அனுப்புவதாக ஆத்திரம் கொள்ளும் அமைச்சரின் கேள்விகளை நாம் பாராட்டத்தான் வேண்டும். அப்படி நடந்தால் அதைத் தட்டிக் கேட்கத் தான் வேண்டும்... ஆனால், அமைச்சர் இதே கேள்வியை, தென்னிலங்கை அரசியல்வாதிகளிடமும் கேட்கலாம் தானே... ஏன் புலிகளிடம் மட்டும் கேட்க வேண்டும்?

பிரதி பாதுகாப்பு அமைச்சரின் மகன் கொலைக்குற்றம் ஒன்றில் குற்றம் சாட்டப்பட்டு இருந்த போதும், அந்த விடயம் தொடர்பான விசாரணை அமுக்கப்பட்டு விட்டன. 'தேசத்தைக் காக்கும்' புனித யுத்தத்தில் ஈடுபட வேண்டும் என்று கூறும் பல அரசியல் தலைவர்களது பிள்ளைகள் - ஜனாதிபதி அவர்களின் மகன் உட்பட - யுத்தக்களத்தின் நிறம் தெரியாமலேயே இருக்கிறார்களே இது எப்படி...?

ஏன் அதிகம்? குழந்தைகளை விட்டுவிடுவோம். கதிர்காமர் உட்பட இவர்களில் எந்த அரசியல் தலைவர்கள் யுத்தக்களத்தில் இராணுவத்துடன் ஒருநாளாவது பொழுதைக் கழித்திருக்கிறார்கள்...?

கதிர்காமருக்கு சந்திரிகா கொடுத்த தரகர் வேலையை அவர் திறம்படச் செய்கிறார் என்பதில் சந்தேகம் இல்லை.

'யானை மாலை போட்டதாலே ஆளவந்த ராணி' போல திடீரென முடிசூட்டப்பட்டவர் அவர்- சந்திரிகா புண்ணியத்தால்.

செஞ்சோற்றுக் கடனுக்காக பேசுகிறார்.

பேசட்டும்.

பதவியும், அதிகாரமும், வயிற்றுப் பிழைப்புக்கு அரசியல் நடாத்தும் அரசியல்வாதிகளுக்குக் கிடைத்து விட்டால் எப்படியெல்லாம் நடப்பார்கள் என்பதற்கு இலங்கை அரசியலில் உதாரணங்கள் ஆயிரம்.

கதிர்காமர் மட்டும் விதிவிலக்கா என்ன?

ஜமாயுங்கள் ஐயா, கதிர்காமரே! இன்னும் ஒரு இரண்டு வருடங்களுக்குள் உங்களுக்குள் உங்கள் ஆசைக்கு எல்லாவற்றையும் பேசித்தீர்த்துவிடுங்கள். அதற்குப்பிறகு இந்த நாட்டில் தமிழ் மக்களின் அரசியலுரிமைக்கு சமாதி கட்டியவர்களின் பட்டியலில் உங்கள் பெயர் என்றென்றைக்கும் நிலைத்திருக்கும்.

உங்கள் அதிகாரமும், பதவியும், ஆராவது போடும் பிச்சை தான் என்பதை அப்போது உங்களுக்கு வரலாறு புகட்டும்.

வாழ்த்துக்கள்!

www.tamilarangam.net

www.tamilarangam.net



*இறுதிப்பகுதி*


***இன்று பின்நவீனததுவம் என்பது பரவலாக பேசப்பட்டு வருவதுடன் வெவ்வேறு துறை சார்ந்தவர்கள் இதை வெவ்வேறு விதமான வியாக்கியானங்களுக்கு உட்படுத்தியும் வருகிறார்கள். இந்த வகையில் ஓவியம் சார்பாக பின்நவீனத்துவ போக்குகளையும், சிந்தனைகளையும் எவ்வாறு காண்கின்றீர்கள்?***

நாங்கள் ஏற்கெனவே பார்த்தது போல நவீனத்துவத்திற்கு பல உன்னத இலட்சிய எண்ணங்கள் இருந்தன. பின் நவீனத்துவம் இந்த உன்னத எண்ணங்களின் மீதான அவநம்பிக்கையின் வெளிப்பாடு. எந்த உன்னதங்களும் அற்ற நிலைமை. நாங்கள் எழுபதுகளில் ஓவியக்கல்லூரிக்கு சென்ற போது ஓவியம் ஒரு சர்வதேச மொழி என்று எண்ணினோம். முற்றாக எல்லோருக்குமானதாக ஓவியம் இருக்க முடியும் என்று நம்பினோம். முற்றாக எல்லோருக்கும் பொருந்தும் ஜனநாயகமோ, தொழிநுட்பமோ இல்லை. அப்பேற்பட்ட ஓவியம் ஒன்று இருக்க முடியும் என்று நான் நினைக்கவில்லை. மொன்றியானை (Montrian) எடுத்துக் கொள்வோம். அவர் அந்த சதுரங்களாலான ஓவியங்களை உருவாக்கிய போது அது காலத்தையும், கலாசாரத்தையும் புவியியல் எல்லைகளையும் தாண்டுவதாய் இருந்தது. அவர் இதை எவரும் புரியத்தக்க பிரம்மஞான மொழி (Theosophical) என்றார். ஆனால் இதன் வரலாறும், கோட்பாடும், தத்துவமும் தெரிந்தவர்கள் தான் அதை அனுபவிக்க முடியும். எனவே உலகப்பொதுமையாக ஓவியம் இருக்க முடியாது. ஏனெனில், அது சந்தர்ப்ப சூழ்நிலைகளாலும், நேரத்தாலும், கலாசாரத்தாலும் எல்லைப் படுத்தப்பட்ட ஒன்று. இந்த உண்மையை உணர்வது இவ்வுலகில் நிகழும் மாற்றங்களை உணர்வதன் ஓர் பகுதி தான்.

அடுத்தது உண்மையும் உலகப்பொதுமையானதல்ல. எல்லாவற்றிற்கும் ஒரு பொது உண்மை இருக்கமுடியாது. ஏனெனில் அனைத்தும் சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கு கட்டுப் படுகிறது. உண்மை போலியானது (Simulation). இந்த சமூகத்தின் முரண்பாடுகள் புரட்சியால் முடிவுக்கு வரும் என்று மாக்சியமும் கம்யூனிசமும் நம்பின. அவை நடை முறைச் சாத்தியமற்ற கற்பனைபூர்வமான விடையை (Utopian) வரலாற்றுக்கு அளிக்க முயன்றன. ஆனால் இது நம்ப முடியாதது. முரண்பாடு என்பது யதார்த்தத்தின் தவிர்க்க முடியாத ஒரு பக்கம். நீங்கள் இந்த முரண்பாடுகளின் உயர் வலுவைக் குறைக்கலாமே ஒழிய இவற்றைத் தீர்க்க முடியாது.

இனி நாங்கள் சொற்களில் நம்பியிருக்கப் போவதில்லை. சொற்களும் அவற்றின் அதிகார சக்தியும் ஓர் சர்வாதிகாரியாக இருந்து வருவதை இன்று உணர்கிறோம். இப்போ சொற்களின் வலு கேள்விக்குள்ளாக்கப்படுகிறது. நாங்கள் எத்தனையோ விஷயங்களை சொற்களால் கட்டமைத்துள்ளோம். இதனால் இன்று வரலாறும் கேள்விக்குள்ளாகிறது. வரலாறு சொற்களின் தொகுதிதான் வேறு ஒன்றும் இல்லை. எவரும் தமது திட்டத்திற்கேற்ப அதை வடிவமைத்துக் கொள்ள முடியும்.

பின்நவீனத்துவ கலை அருபங்களில் நம்பிக்கை கொள்ளவில்லை. அதற்கு கருப்பொருள் மிகுந்த முக்கியத்துவமாகின்றது. கலைஞர் தனது படைப்புகளில் சர்வதேச விஷயங்களை பிரசவிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப் படவில்லை. கலை ஒரு எதிர்வினை மட்டும் தான்



ஐரோப்பாவில் உருவாக்கப்பட்ட உன்னத அழகு (Ideal Beauty) என்ற எண்ணக்கரு இனியும் இருக்கப்போவதில்லை. ஆசிய நவீனத்துவம் தனது சொந்தப்பாதையைத் தெரிவு செய்துள்ளது. இதில் சுவாரசியமானது என்னவென்றால் மேற்கத்தேய நவீனத்துவம் தான் தெரிவு செய்த பாதையில் மானிட யதார்த்தங்களைத் தவற விட்டுவிட்டது. இது வெறும் புத்திபூர்வமான சகசமாக (Cerebral Venture) மாறிவிட்டது. ஒரு வெற்றுக்கன்வசு அல்லது தனித்து ஒரு நிறம் பூசப்பட்ட கன்வசு அருப வெளிப்பாடு என்று வருகிறது. இதற்கு ஓவியனின் உணர்வு ரீதியிலான தொடர்பு இல்லையென்பதை விட சமூகமும் மனித வாழ்வும் கலைக்கு வெளியே வைக்கப்படுகிற நிலைமை ஒன்றைப் பார்க்கிறோம். பின்நவீனத்துவத்தில் சமூகத்திற்கான தொடர்பு மீள வருகிறது. இந்த வகையில் நாங்கள் சாதகமான ஒரு நிலையில் உள்ளோம். ஏனெனில் வாழ்வின் தொடர்பை ஆசியக்கலை ஒருபோதும் இழந்ததில்லை. கடுமையான நவீனத்துவ போக்குகளுக்குள் சென்றதில்லை.

ஓவியம் என்பது ஒரு எண்ணக்கரு மட்டுமே. பார்வையாளர் எனப்படுவோர் இனி இருக்க மாட்டார்கள். பங்கு பற்றுபவர்களே இருப்பார்கள். இது நவீனத்துவத்தில் நிகழாத ஒன்று. நீங்கள் வழக்கமான ஓவியக்கூட மொன்றுள் சென்று ஒரு ஓவியத்தில் இருந்து இன்னொரு ஓவியத்துக்கு நகர்கிறீர்கள். நீங்கள் நகர்கின்ற இந்த கூடத்தின் பௌதீகவெளி இவ்வெளிப்பாட்டின் ஓர் பகுதி அல்ல. ஆனால் இன்று ஆசியாவில் பிரசித்தம் அடைந்து வருகின்ற



*சந்திப்பு: த. சனாதனன்*

பயனுறு நிலை இணைப்புக் கலையில் (Installation art) பார்வையாளர்கள் பங்காளிகளானவர்கள் இந்தக் காட்சி மண்டபம் பார்வையாளரின் பிரசன்னத்தால் பூரணத்துவம் பெறும். இது ஒரு கோயிலுள்ளோ, ஸ்தூபாவினுள்ளோ செல்கின்றது போன்ற ஓர் விடயம். பக்தர்கள் மலர்களுடன் உட்செல்லும் போது தான் ஸ்தூபா பூரணத்துவமடைகிறது. ஏனெனில் பங்குபற்றுதலுக்கான ஒரு வெளியை அது உள்ளடக்கியுள்ளது. 60களில் இவ்வெளிப்பாட்டு முறை ஆசியாவிற்கு வந்தது. இதில் எப்போதும் உங்களுக்கு வேண்டியதை நீங்கள் மீள் உரிமை கோர வாய்ப்பிருக்கிறது. மறுபக்கத்தில் வாழ்வும், சமூகமும் மேலும் மேலும் படைப்பினுள் உள்வாங்கப்படுகிறது.

படைப்பாளிகள் தாங்கள் சிருஷ்டிப்பதாக ஒரு போதும் நினைக்கவில்லை. அவர்கள் இணைப்புக்களை (Associations) மட்டுமே உண்டாக்கிக்கொள்கிறார்கள். பயனுறு நிலை இணைப்பு கலையில் என்ன செய்யப்படுகிறது - அங்கொன்றும், இங்கொன்றுமாய் ஓவியங்கள் வேறு பொருட்கள், இந்த ஓவியக்கூட சூழ்நிலை, இவற்றில் பங்கெடுக்கிற நபர் இவற்றுக்கிடையிலான உறவாடல், இதனால் விளையும் எதிர்வினை - இது தான் கலை. இதில் ஒரு நபர் குறித்த சூழ்நிலைக்குள் சீவிக்கிறார். இவை நேரத்தால் எல்லைப் படுத்தப்படுகின்ற எண்ணங்களும் கூட (Time bound)- இது மனிதாபிமானமானது. மனித அழகை இழக்காதது. இது தனிநபருக்கும் சமூகத்திற்குமுள்ள தொப்புள் கொடியை அறுக்காது. நான் இதைத்தான் நம்புகிறேன்.

**“உலகப் பொதுமொழியாக ஓவியம் இருக்க முடியாது”**

**ஜெகத் வீரசிங்ஹ**





பின்நவீனத்துவத்தில் சொற்களினால் நடைபெறுகிற ஓவிய விமர்சனம் இராது. வழமையான ஓவிய விமர்சனம் என்பது பார்வை மொழி பற்றி சொற்களினூடு நிகழ்த்தப் படுகின்ற விசாரணையும், வியாக்கியானமும் தான். இனி ஓவியம் தான். ஓவியத்தை விமர்சிக்கும் - வரலாற்று பூர்வமாய் ஒரு நல்ல ஓவியமோ வேற எந்த படைப்போ அதன் முன்னையதன் விமர்சனமாக வருகிறது.

ஓவியன் உலகிற்கு. வெளியே எங்கோ சீவித்துக்கொண்டு அழகிய படைப்புக்களை படைப்பது என்பது ஓர் தொல் சீர் சார்ந்த எண்ணம். ஓவியனும் சமூகத்திலுள்ள சிறப்புத் தேர்ச்சி பெற்ற மற்றவர்களைப் போல ஒருவன் - ஓவியன் பற்றிய கற்பனைகள் அற்றுப் போவதும் ஓவியன் புத்தி ஜீவியாக வருதல் என்பது ஆசியாவில் பின்நவீனத்துவத்துடன் நிகழ்கின்றன. இது உண்மையில் நவீனத்துவத்துடன் நிகழ்ந்திருக்க வேண்டியது. இது இசை, நாட்டிய துறைகளில் சாத்தியமாகிறதா தெரியவில்லை.

வெளிப்பாட்டிற்கு புதிய வெளிப்பாடு சாதனங்களை நாடுதல் இதன் இன்னொரு பரிமாணம். இப்பேற்பட்ட விடயங்கள் நவீனத்துவத்தில் இல்லாமல் இல்லை. ஆனால் பின்நவீனத்துவ யுகத்தில் இவை மேலும் மேலும் முக்கியத்துவத்திற்கு வருகின்றன. எமது பாரம்பரிய கலைகளில் நவீன கலைகளின் பல இயல்புகள் இருந்தன. அவை நவீன காலத்தில் மேற்பரப்பிற்கு வந்து முக்கியம் பெற்றன. இவ்வாறு ஒவ்வொரு காலத்திலும் ஒவ்வொன்றும் முக்கியமடையும்.

***ஏற்கெனவே எங்கள் சமூகத்தில் உள்ள மதக் கிரியைகளுடன் சம்பந்தப்பட்ட பயனுறு நிலை இணைப்புக் கலை போன்ற விடயங்களையும் நிகழ்கலை (Performance art) போன்ற விடயங்களையும் எப்படி நோக்குவீர்கள்?***

இது ஒரு மிகவும் சிக்கலான கேள்வி. சமூக மாற்றம் மிகவும் சிக்கலான தளங்களில் நிகழ்கின்றது. வெவ்வேறு நபர்கள் வெவ்வேறு விதமாக இவற்றை எடுத்துக்கொள்வார்கள். இந்த யுகம் முடியும் வரையும் இவை பற்றி பேசிக்கொண்டிருக்கலாம்.

கலைக்கும் வாழ்க்கைக்கும் இடையிலான இடை வெளி குறைந்து வருகின்றது. கலை சந்தர்ப்ப சூழ்நிலைக்கும், காலத்திற்கும் கட்டுப்பட்ட ஓர் விஷயம் என்று பார்த்தோம். எனவே இது விளம்பரம் போன்றது. விளம்பரம் நுகர்வோருக்கு கட்டுப்பட்ட ஓர் விடயமும் கூட. கொக்கா கோலாவையோ, சிகரட்டையோ உதாரணமாக எடுத்துக் கொண்டால், அவர்கள் முழு மக்கள் குழாத்திற்கும் ஓர் உற்பத்தியைச் செய்வதில்லை. மக்களுக்காக என்று சொல்லி சொல்லி இந்த மக்கள் என்ற சொல்லையும் கெடுத்து மக்களையும் ஏமாற்றுபவர்கள் அரசியல்வாதிகள் மட்டும்தான். மக்கள் மயக்கமான போலியான ஒரு வாதம். அவ்வாறாயின் கலை யாருக்காக? இந்த கொக்கா கோலா போன்ற ஸ்தாபனங்கள் சமூகத்தின் வெவ்வேறு பிரிவினருக்கு ஏற்றதாக வெவ்வேறு உற்பத்திகளை வெளியிடுகின்றன. ஒரு வகையில் கலையும் இதைத்தான் செய்கின்றது. அதற்கும் சிறிய பார்வையாளர் குழுக்களே இருக்கின்றன. கலை சாதாரண தளத்திற்கு இறங்கி வருகிறது.

***கலை, சமூகத்தை மாற்றும் என்று நம்புகிறீர்களா?***

இல்லை. இல்லவேயில்லை. கலை சமூகத்தை மாற்றாது. சினிமா, நாடகம், பாடல்கள் போன்றவை மாற்றத்திற்கு பங்களிக்க கூடும். ஆனால் ஓவியம், இசை, நடனம் போன்ற கலையின் தூய வடிவங்கள் அதைச் செய்ய மாட்டா. இலக்கியத்தைப் படிக்கத் தெரிந்த அளவிற்கு வடிவங்களையோ, அபிநயத்தையோ ஒலியையோ படிக்க பலருக்கு தெரியாது. ஆனால் பின்நவீனத்துவ யுகத்தில் இத் தூயகலைகள் தூயதாய் இருக்கா. அப்போ அவையும் பங்களிப்பு செய்யலாம். நான் எனது கண்காட்சிகளில் இசையைப் பயன்படுத்துகிறேன். நீண்ட பரீட்சயத்தில் இத்தூய கலைகள் குறிப்பிட்ட சில மக்களில் தாக்கத்தை ஏற்படுத்தலாம். ஆனால் அவை செய்யத்தக்க சிறந்த விஷயம் அதிகார பூர்வமற்ற முறையில், பக்கச்சார்பற்ற விதத்தில் சாட்சியாக விஷயங்களையும் காலத்தையும் பதிவு செய்வதுதான். ○



நீர் கழுத்து மனிதன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





*செல்லையா இராமலிங்கம்.(52)*

நான் பிறந்த இடம் சேனைக்குடியிருப்பு, 1952 ல் இருந்து நான் 4ம் கொலனியில் தான் வாழ்ந்து வருகிறேன். வெடிச்சத்தம் கேட்ட நேரம் நாங்கள் எல்லோரும் வீட்டுக்குள்ளேதான் இருந்தோம். மூக்கையும் வாயையும் மறைத்துக் கட்டிய மூன்று பேர் வந்தார்கள். அவர்களில் முன்னே வந்த இரண்டு பேரும் பார்த்து விட்டுப் போய் விட்டார்கள். கடைசியாக வந்தவன் "எல்லாம் வெளிய வாடா, வெளிய வாடா" என்றான் . நாங்கள் பயத்தில் வெளியே வந்தோம். என் மருமகன்(வேலுப்பிள்ளை பாக்கியராசா -30 ) அவருடைய சின்னப் பிள்ளையை கையில் தூக்கிக் கொண்டு வெளியே வந்தார். வரும் போது அவருடைய கையில் இருந்த 3 வயதுச் சின்னப் பிள்ளையைப் பறித்து நிலத்தில் வீசி எறிந்து விட்டு, அவரை சேட் கொலரில் பிடித்து இழுத்துப் போனார்கள். பிறகு எங்கள் எல்லோரையும் 'லைன'ாக நிற்கும்படி கூறினார்கள். நாங்கள் பயத்தில் போகவில்லை. அவரை எங்கள் கண்ணுக்கு முன்னால் வைத்துச் சுட்டுவிட்டு ஓடிவிட்டார்கள். வந்தவர்கள் பொலிசாராகத்தான் இருக்க வேணும்.

*ராமலிங்கம் யோகேஸ்வரி (27)*

அவர்கள் எங்கட பொலிஸ் பக்கமிருந்து ஓடி வந்தார்கள், எல்லாரும் வெளிய வாடா என்று கூப்பிட்டார்கள். பயத்தில் வெளியே பிள்ளையோடு வந்த அவரின் (வேலுப்பிள்ளை பாக்கியராசா) கையில் இருந்த பிள்ளையை தூக்கி எறிந்து விட்டு, இரண்டு தடவை அவருக்கு துவக்கை நீட்டினார்கள், நாங்கள் "ஒன்றும் செய்திராதேங்கோ ஐயா" என்று கத்தினோம். மூன்றாவது தடவையும் துவக்கை நீட்டினார்கள்-நாங்கள் கத்தக் கத்த படாரென்று அவரைச்சுட்டுவிட்டு ஓடி விட்டார்கள்.



*செல்லத்துரை இந்திரா (42)*

செப்டம்பர் 23ந்திகதி எங்கட வீட்டுக்குப் பக்கத்தில் இருக்கின்ற பொலிஸ் காம்பிலிருந்து (சென்றல் காம்ப் பொலிஸ் நிலையம்) ஓடி வந்த அவர்கள், எங்களைத் துரத்தினார்கள் . நாங்கள் வயல் வெளிகளுக்குள்ளால் ஓடி வந்து 46 ம் நம்பர் வீட்டிலே, இருபத்தைந்து, முப்பது குடும்பம் அளவில் சேர்ந்து அந்த வீட்டு முற்றத்தில் இருந்தோம். நாங்கள் ஓடிவரும்போதே இரண்டு பேரைச் (தங்க நாயகி, குமாரசாமி) சுட்டுக் கொன்று விட்டார்கள்.பிறகு இன்னொரு ஆள்-கிழவர் சதாசிவத்தாரையும் கூப்பிட்டு ஓடச் சொல்லிவிட்டுச் சுட்டார்கள், அவரும் செத்துப்போனார். அடுத்து பாக்கியராசாவையும் சுட்டுக் கொன்று போட்டார்கள். பிறகு ரோட்டுக்குப் போய்ச்சுட்டார்கள். சுட்டதில் தம்பிராசா என்பவருக்கு பட்ட வெடி, எனது கணவரின் (சின்னத்தம்பி நாகலிங்கம் -48)காலிலும் பட்டது. பிறகு நாங்கள் வயல் வெளிகளுக்குள்ளால் ஓடி வந்தோம்,வரும்போது அவர்களும் எங்களைத் துரத்தித் துரத்திச் சுட்டார்கள். நாங்கள் ஓடி வரும் போது 5ம் கொலனிப்பக்கமிருந்து வந்த எஸ்.டி.எப். மாத்தையாமார்தான் எங்களைக் காப்பாற்றி இங்கு கூட்டி வந்தனர். எங்களைச் சுட்டது பொலிஸ்தான், புலிகள் இல்லை. பொலிஸ் காம்ப் பக்கமிருந்து புலிகள் எப்படி வரமுடியும்?..புலிகளைத் தேடிப் பிடியுங்களேன் . நாங்களும் பயங்கர வாதி களா ?. இப்படி நெடுகிலும் அகதியாகிப் போவதுதானா எங்கள் கதி ?

| பெயர் | வயது | பாதிப்பின் தன்மை |
|---|---|---|
| 1. கணபதிப்பிள்ளை குமாரசாமி | 52 | துப்பாக்கிச்சூட்டினால் மரணம் |
| 2. செல்லையா தங்கநாயகி | 42 | பாலியல் வன்முறைக்குள்ளாக்கப்பட்டு பின் சுட்டுக் கொல்லப்பட்டார். |
| 3.வெள்ளைக்குட்டி சுந்தரலிங்கம் | 22 | துப்பாக்கிச்சூட்டினால் மரணம் |
| 4. வேலுப்பிள்ளை பாக்கிராசா | 30 | துப்பாக்கிச்சூட்டினால் மரணம் |
| 5. பொன்னையா சதாசிவம் | 70 | துப்பாக்கிச்சூட்டினால் மரணம் |
| 6. வேலாயுதம் பேரின்பராசா | 45 | கவலைக்கிடமான நிலையில் மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதி. |
| 7. சின்னத்தம்பி நாகலிங்கம் | 48 | கல்முனை வைத்தியசாலையில் அனுமதி |

# 4ம் கொலனி
# காலனின் க

சென்றல் காம்ப் பொலிஸ் நிலையத்திலிருந்து சுமார் ஒரு கி.மீ. தூரத்திலிருக்கும் 4ம் கொலனியின் பிரதான வீதியினூடு நாங்கள் சென்று கொண்டிருக்கிறோம். செப்பனற்ற, குன்றும் குழியுமான தார் வீதி அது. நீண்ட நாட்களாக மழையைக் காணாத அப்பிரதேசத்தின் சூடான காற்று புழுதியை வாரியிறைக்கிறது; கூடவே எரிந்து போன வீடுகளிலிருந்து சாம்பரும், புகைக்கு எழுந்து காற்றில் சுழல்கிறது. வீதியின் இருமருங்கும் எரிந்த வீடுகளும், இடையிடையே தாவரப் பற்றைகளுமாக எங்களை விலத்தி வீதி நெடுகிலும் ஓடுகிறது. எரியுண்டு சிதைந்து போன மண் வீடொன்றின் சுவரில் பாதி எரிந்தபடி ரஜினி சிரித்துக்கொண்டிருக்கிறார். நிலத்தில் விழுந்து கிடந்த எம்.ஜி.ஆர் முகத்தின் மீது கரிக்கட்டையொன்று விழுந்து கிடக்கிறது. ஆள் அரவம் அறவே அற்ற வெளியூடு நாங்கள் பயணிக்கிறோம். வீதியில் அங்குமிங்குமாய் விடப்பட்ட செருப்புகள் ஒற்றையொற்றையாய் கவிழ்ந்து கிடக்கின்றன. ஒரு ஆளையாச்சும் காணமாட்டோமா என்கிற ஆவல் மிகுகிறது. கூடவே உள்ளே பயமும் உறைகிறது. எங்களில் ஒருவரின் முகத்திலும் ஈயாடவில்லை. குசுகுசுப்பாகவேனும் எங்களிடமிருந்து ஒரு வார்த்தை தானும் வரவில்லை. மௌனம், மௌனம்.....

எங்களோடு கூட வந்த சிங்களச் சகோதரி திரும்பிப்போய்விடுவோம் என்கிறார். யாரும் பதில் கூறவில்லை. இன்னும் கொஞ்சத் தூரம் செல்கிறோம்; நாங்கள் பயணித்த அந்தத் தார்வீதி இன்னுமொரு பிரதான தார் வீதியில் குறுக்காய்ப் போய் விழுகிறது. நாங்கள் அந்தச் சந்தியில் சிறிது தரிக்கிறோம். தூர நீலவாகனமொன்று எங்களை நோக்கி அசைகிறது; அது ஒரு கென்ரர். இந்த 4ம் கொலனியில் இருந்த மக்களைப்பற்றி ஏதாவது தகவல் கிடைக்கலாம் என்ற அவாவில் நாங்கள் அந்தக் கென்ரருக்காகக் காத்திருக்கிறோம். கென்ரர் எங்களை நெருங்குகிறது. ஒரு கணம் கென்ரரின் வேகம் குறைகிறது. கென்ரரில் சாரதியின் அருகிலிருந்த அந்த ஆள் எங்களைப் பார்த்துப் பரிதாபமாக தலையில் அடித்துக் கொள்கிறார். மறுகணம் கென்ரர் ஆர்முடுகுகிறது, இப்போது அந்த நீல நிற வஸ்து எங்கள் பார்வை எல்லையினின்றும் மறைந்து போயிற்று. இருந்த அற்ப சொற்ப நம்பிக்கை உலர்ந்து போயிற்று. இனி என்ன செய்வது?

ஒருவாறு அசட்டுத் தைரியத்துடன் கென்ரர் போன திசையில் நாங்கள் போகின்றோம். எங்கள் வேன் சாரதியின் பீதியும், பயமும்; வேனின் வேகத்தில் விளங்கிற்று. ஆ...! இப்போது திரும்பவும் அந்த நீலவஸ்து தெரிகிறது. அதன் பக்கத்தில் வயல் வெளிகளில் உழவு எந்திரங்கள் வேலை செய்வதும், ஓரிரு தொப்பி அணிந்த தலைகளும் தெரிகின்றன.

நாங்கள் கென்ரருக்கு பக்கத்தில் வேனை நிறுத்துகின்றோம். அது 4ம்கொலனி முஸ்லிம் பகுதியென்று தெரியவருகிறது. ''ஏன் அந்த வழியால் வந்தீங்க. அது புலி ஏரியா, யாரோ, எவனோவென்று பயந்துதான் நாங்கள் நிறுத்தாது வந்துவிட்டோம்'' என்றார், கல்முனையில் இருந்து செங்கல் ஏற்றிவந்த அந்த நீலநிறக் கென்ரர் சாரதி. பிறகு அங்கிருந்தவர்களிடம் 4ம் கொலனி மக்களைப் பற்றி விசாரித்தோம். அவர்கள் இப்போது சேனைக்குடியிருப்பில் இருப்பதாகச் சொன்னார்கள். அங்கு வயலில் வேலை செய்து கொண்டிருந்த கதிர்காமத் தம்பி (47) என்பவரோடு நாங்கள் சேனைக்குடியிருப்பை நோக்கிச் செல்கின்றோம். இவர் ஐந்து பிள்ளைகளின் தந்தை. முன்பு இவருடைய இரண்டாவது மகன் வயலில் வேலை செய்து கொண்டிருக்கும் போது படையினரால் சுடப்பட்டு இறந்த கதையையும் கண்கலங்கச் சொன்னார். இன்னும், இத்தோடு ஒன்பது தடவைக்கு மேல் அரச படைகள் இவர்கள் மீது அடாவடித்தனங்களை கட்டவிழ்த்து விட்டிருப்பதையும், இதனால் 1990க்குப்பின்னர் நூற்றுக்கணக்கான குடும்பங்கள் வேறு இடங்களுக்குச் சென்று குடியேறியிருப்பதையும், அவரோடு பேசியதிலிருந்து அறிய முடிந்தது. 4ம் கொலனியிலிருந்து சுமார் 4 மைல் தொலைவிலுள்ள சேனைக்குடியிருப்பை நோக்கிய எங்கள் பயணம் தொடர்ந்தது.



*குமாரசாமி ரவீந்திரன் (16)*

இரண்டு பேர் வந்து என் அப்பாவையும் (கணபதிப்பிள்ளை குமாரசாமி-54), அம்மாவையும் (செல்லையா தங்கநாயகி-42) கூப்பிட்டுச் சுட்டனர்.
எனக்கும் சுட்டனர் ,படவில்லை. தம்பி ஓடி ஒளித்து விட்டான். வந்தவர்கள் பச்சைப் புள்ளி போட்ட ரீ சேட்டும் கறுப்பு ரவுசறும் போட்டிருந்தனர், பொலிசார் போடுவதைப் போன்ற கறுப்பு சப்பாத்தும் போட்டிருந்தனர்.
அம்மாவின் உடம்பில் பல இடங்களில் கத்தியால் வெட்டிய காயங்கள் இருந்தன. அம்மமாவின் கழுத்தில் கிடந்த சங்கிலியையும் அறுத்துச் சென்றுள்ளனர். (அம்மாவின் உடலில் வெட்டுக்காயங்கள் இருந்த இடம் பற்றி இவரிடம் வினவியபோது குப்பென்று முகஞ் சிவந்து வார்த்தைகள் அடைத்து விட்டன, தொடர்ந்து அவர் ஏதும் பேசவில்லை. இவருடைய தாய் பாலியல் வன்முறைக்குள்ளாக்கப்பட்டுக் கொல்லப்பட்டதாக அருகில் நின்றவர்கள் கூறினார்கள்.)

**சம்பவத்தின் பின்னணி:**

செப்டம்பர் 22, இரவு:- விஜயவர்தனாராமயவைச் சேர்ந்த சீவலி தேரர் இறந்த வீடொன்றுக்குச் சமயக்கிரிகைக்காகச் சென்று இறந்தவரின் மருமக்கள் இருவருடன் (ஒருவர் இராணுவத்தைச் சேர்ந்த கோப்ரல் கே.ரஞ்சித்-28, மற்றவர் அம்பாறை பொலிஸ் பயிற்சி நிலையத்தில் கடமையாற்றும் காமினி ஜெயசுந்தர-26) இரு மோட்டார் சைக்கிள்களில் திரும்பிக்கொண்டிருக்கிறார். இடையில் 'தடயம்தலாவ' என்னும் இடத்தில் வைத்து ஆயுதம் தாங்கிய குழுவொன்று இவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்கிறது. சீவலி தேரர் உருண்டு விழுந்து வாய்க்கால் ஓரமாக ஒளிந்து கொள்கிறார். கூட வந்த இருவரும் பலியாகின்றனர். மேற்படி துப்பாக்கிப் பிரயோகத்திற்கு புலிகளே காரணம் என்ற கதை பரவுகிறது. இறந்தவர்களுள் ஒருவரான் இராணுவ உத்தியோகத்தர். வட பகுதியில் கடமையாற்றுபவர்.



*பேரின்பராசா செந்தில்நாதன் (12)*

வீட்டில் நானும் ,தம்பியும், அக்காவும், மற்ற அக்காவும்,அப்பாவும் ,அம்மாவும் இருந்தோம். அப்பா(வேலாயுதம் பேரின்பராசா -45) வயலில் உழவு வேலை முடிந்து பகல்சாப்பாடு சாப்பிட்டு விட்டு இருந்தார். திடீரென்று வெடிச்சத்தம் கேட்க நாங்கள் எல்லாம் ஓடிப் போய் பக்கத்து வீட்டில் இருந்தோம். இருக்கும் போது அங்கு ஓடி வந்த புள்ளி, புள்ளி ரீ சேட் போட்டவர்கள் முட்டுக் காலில் நின்று அப்பாவைச் சுட்டனர்,அப்பாவுக்கு பின்புறமாய் சூடு பட்டது. அப்பா இப்போது மட்டக்களப்பு வைத்திய சாலையில் நினைவிழந்த நிலையில் உள்ளார்.

இவர் விடுமுறை
யிருந்தார். சிவி
இராணுவ, பொ
தர்களை புலிக
டிலும் எவ்வா
கொலை செய்த
பட்ட விரோதத்
ராகிலும் செய்தி
என்ற கேள்வி
லும், கொலை
கள்தான் என்கிற
போது உயிர்த
தேரர். ரஜகம சம்
சேர்ந்த ரஜகம உ
இதே கருத்தை
ருந்தார்.

செப்ரம்பர் 23
சொறிக்கல்முனை
பிக்கொண்டிருந்
பொலிஸ் நிலை
பொலிஸ் உத்தி
சிங்க (இல.2756
கொலனியில்
கொல்லப்படுகி
இடம்பெற்று ஒரு
வதற்குள் சென்ற
சாரின் கோரத்தா
மாகின்றது.

செப்டம்பர் 23
மதிய உணவின்
குட்டித்தூக்கம்
சிலரும், வேலை
வென்று சிலரும
மக்கள் ...த்தமா
1.30க்கு நடை

சூட்டுச்சத்தம் த
ளிடமிருந்து கொ
ருக்கின்றது.

இப்போது திடீ
முழங்குகின்றன
மேற்பட்ட;
போட்ட, கறுப்
கறுப்பு, நீலம் ம
சட்டை அல்லது
(அவர்களில் சி
ரர்கள் உபயோ
சப்பாத்தும் அ
சிலர் தொப்பிய
தனர்.) குழுவெ
னிக்குள் செயலி
கையில் துவக்கு
பின்னால் வந்தவ
கள் 3ம் கொ
காம்பைச் சேர்ந்த
கத்தியும், கோ
இருக்கிறது. அவ
னிப்பக்கமாக பெ
லிருந்து ஓடி வந்
அவர்களில் பல
யால் மூக்கையு
மூடிக் கட்டியிருந்
இனி துவக்குகள்
4ம் கொலனி
நாலைந்து குடும்
ஒரு வீட்டுக்கு
புகுந்து கதவை
கொள்கின்றனர்.
''வெளியே வா

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





### குணபாலசிங்கம் கௌரி (௨௦)

வெடிச்சத்தம் கேட்டதும் நானும், அவரும் (செல்லக்குட்டி சுந்தரலிங்கம்-௨௨ -இருவரும் திருமணம் செய்து ০9 மாதம் தான் ஆகிறது.) ஓடிப்போய் பக்கத்து வீட்டில் இருந்தோம். 3ம் கொலனிப்பக்கமிருந்து ஓடி வந்த அவர்கள் சிங்களத்தில் தான் கதைத்தார்கள். வந்தவர்கள் அவரைப் பற்றிப்பிடித்திருந்த எனது கையைத் தட்டி விட்டு அவரை இழுத்துப்போனார்கள்.நான் பின்னால் குழறியபடி போனேன். என்னை அடித்துத் தள்ளிவிட்டார்கள். பிறகு என் புரிசனுக்கு என்ன நடந்ததோ தெரியாது.அவருடைய உடல் சுட்டு எரிக்கப்பட்ட நிலையில் 3ம் சந்தி(வேப்பையடித்தோட்டம்)யில் கிடந்தது. சடலத்தை கல்முனை வைத்தியசாலையில் வைத்துப் பெற்றுக் கொண்டோம்.

''எங்கடா போறாய்'' என்று கொச்சைத் தமிழில் உறுமியபடி தூஷணம் கூறியவாறு அந்தக்குழு சகட்டுமேனிக்கு கண்டவர்களை எல்லாம் அடித்து நொறுக்குகிறது. நினைத்தபடி சுடுகிறது. பூட்டிய வீடுகளுக்குள் வைத்து மக்களை தீயிட்டுக்கொழுத்த முனைகிறது. மக்கள் கத்திக்கொண்டு வெளியேறி ஓடுகின்றனர். ஓட ஓட விரட்டி அடித்தும், சுட்டும் அந்தக் குழு வெறியாட்டம் நிகழ்த்துகிறது. மக்கள் அலறியடித்துக் கொண்டு

மட்டக்களப்பு வைத்தியசாலையிலும், இன்னுனொருவர் காயம் காரணமாக கல்முனை வைத்திய சாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர். 50க்குமேற்பட்ட வீடுகள் எரிந்து நாசமாகியுள்ளன. இறந்த பெண்மணியொருவர் பாலியல் வன்முறை செய்யப்பட்டுள்ளதாயும், அவரின் கழுத்திலிருந்த சங்கிலி களவாடப்பட்டுள்ளதாயும், பல சைக்கிள்கள் காணாமல் போயுள்ளதாயும் தெரிகிறது.

# டைவிரிப்பு !

வயல் வெளிகளூடு ஓடுகின்றனர். 4ம் கொலனி முஸ்லிம் பகுதியில் நின்ற சொறிக்கல்முனை விஷேட அதிரடிப்படையினர் மக்களை தடுத்து நிறுத்துகின்றனர். என்னவென்று விசாரிக்கின்றனர். பிறகு, எல்லோரையும் ஏற்றி வந்து சேனைக்குடியிருப்பு கமு/கணேச வித்தியாலயத்தில் வந்து இருக்கச் செய்கின்றனர். மேற்படி கொலைக் குழுவின் வெறியாட்டத்தின் பெறுபேறாய் 5 பேர் மரணம், ஒருவர் கவலைக்கிடமான நிலையில்

''எங்களுக்கு இது ஒன்றும் புதிதல்ல. இத்தோடு ஏழெட்டுத்தடவைக்கு மேலாக எங்கள் மீது பொலிஸென்றும், ஆமியென்றும், விஷேட அதிரடிப்படையென்றும், ஊர்காவற் படையென்றும் பலரும் வெறியாட்டம் நடத்தியுள்ளனர். இங்கிருந்த 600 குடும்பங்களில் 1990க்குப் பின் பயம் காரணமாக இடம் பெயர்ந்து சென்றவர்கள் போக இப்போது 300 குடும்பங்கள் தான் இங்குள்ளோம் என்கிறார் 4ம் கொலனிவாசி ஒருவர்.



### காளிக்குட்டி-தங்கப்பிள்ளை(௬௬)

நாங்கள் பகல் சாப்பாடு முடிந்து இருக்கும் நேரம் துவக்கு வெடிச்சத்தம் கேட்டது.வெளியேறி நாங்களெல்லாரும் ஓடினோம்.அவருக்கு(பொன்னையா சதாசிவம் -70) ஓட இயலாது, அவர் மெல்ல மெல்லத்தான் பின்னால் ஓடிவந்தார். அவருக்கு என்ன நடந்ததோ தெரியாது. திரும்ப வந்து பார்த்த போது எங்கள் வீட்டு வாசலுக்கு கொஞ்சம் தள்ளி சுடுபட்டுக்கிடந்தார்- அவருடைய முதுகில் சூட்டுக்காயம் இருந்தது.

இந்த மக்களுக்கு இப்போது செஞ்சிலுவைச் சங்கம் இயலுமான உதவிகளைச் செய்து வருகிறது. காரைதீவு, சர்வோதைய இயக்கம் உணவு உதவிகளை வழங்கி வருகிறது.

இவர்களுக்கு இப்போது விஷேட அதிரடிப்படையினரே பாதுகாப்பு வழங்கி வருகின்றனர். விஷேட அதிரடிப்படை மீது 4ம் கொலனி மக்கள் மிகுந்த நம்பிக்கை வைத்துள்ளனர். அவர்கள் இல்லையாயின் அந்தக் கொலைப் பாதகர்கள் எங்கள் எல்லோரையுமே கொன்று போட்டிருப்பார்கள். விஷேட அதிரடிப்படை முகாம் அமைத்து பாதுகாப்பு வழங்கினால் மட்டுமே நாங்கள் 4ம் கொலனியில் மீளச் சென்று குடியேறுவோம் என்கின்றனர்.

தடயந்தலாவ மக்களிடமும், சீவலி தேரரிடமும் உரையாடியதிலிருந்து அவர்களின் இனவாத உஷ்ணம் விளங்கியது. அவர்கள் (4ம் கொலனி தமிழ் மக்கள்) எல்லோருமே புலி அல்லது புலி ஆதரவாளர்கள் என்ற எண்ணமே அங்கு மிகைத்துள்ள இந்நிலையில் அம்மக்களின் பாதுகாப்பை உத்தரவாதப்படுத்த அரசு என்ன செய்யப்போகிறது என்ற கேள்வி எம்முன் எழுகிறது.

கூடவே, சம்பவம் நடைபெற்ற அன்று சென்றல் காம்ப் பொலிஸ் நிலையத்தில் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிசார் அனைவரும் நீதியான விசாரணையில் தலையீடேதும் ஏற்படாதிருக்கும் வண்ணம் இடமாற்றம் செய்யப்பட்டிருப்பதாக அரசு அறிவித்துள்ள இவ்வேளையில் 1984ல் சேரனால் எழுதப்பட்ட ''இராணுவ முகாமிலிருந்து கடிதங்கள்'' எனும் கவிதையின் சிலவரிகள் ஞாபகத்துக்கு வருகின்றன.

*''இன்று,*

*எதிரிவீரவும் சந்திரசிறியும்*

*மூன்று தமிழரைச் சுட்டுக் கொன்றனர்.*

*'நெருக்கடி மிகுந்த தெருவில்*

*திடீரென இவர்கள் ஓடிச்சென்றதால்,*

*கலவரமுற்றுச் சுட்டு விட்டேன்'*

*என்று சந்திர சொன்னான்; பிறகு,*

*விசாரணை இன்றியே*

*இரண்டு பேரையும்*

*கொழும்புக்கு அனுப்பினர்*

*இடமாற்றம் தான்.*

*(கொடுத்து வைத்தவர்கள்)*

...

*யாரையாவது சுட்டால்*

*அல்லது*

*சனங்கள் மீது தாக்குதல் நிகழ்த்தினால்*

*வீடுகளைப் பற்ற வைத்தால்*

*உடனடியாக மாற்றம் கிடைக்கிறது.(?)*

....

13வருடம் கழித்தும் தமிழ் மக்களின் மீதான அரச படைகளின் அடாவடித்தனங்கள் அப்படியே மாறாமலும், புதிய புதிய வடிவங்களிலும் இன்னும் கட்டவிழ்த்து விடப்பட்டிருப்பதை ஒரு கணம் எண்ணிப்பார்க்கத் தோன்றுகிறது. கூடவே,

இவ் இடமாற்றத்தை எதிர்த்து அம்பாறைப் பகுதியில் பௌத்த பிக்குகள், சிங்கள மக்கள் சகிதம் ஆர்ப்பாட்டம் செய்திருந்த செய்தியும் வந்து என்னவோ செய்கிறது.

கட்டுரையும், படங்களும்:
**சி.செ.ராஜா**
**அ∴மத்**



### தங்கராஜா ரூபன் (16)

சைக்கிளில், அணைக்கட்டுக்கு நான் குளிக்கப்போய்க் கொண்டிருக்கும் போது வெடிச்சத்தம் கேட்டது.நான் உடனே குஞ்சியாத்தா (உறவினரொருவர்) வீட்டுக்குச் சென்று இருந்தேன்.பக்கத்து வீட்டிலிருந்த இரண்டு குடும்பமும் பயத்தில் அங்கு வந்து இருந்தது.அப்போது சிங்களத்தில் தூசணம் சொல்லிக் கத்தியபடி: பொலிஸ் போடுவது போன்ற ரீ சேட், சிலர் கறுப்பு ரீ சேட், வேறு சிலர் மஞ்சள் ரீ சேட்டும் போட்டு, கறுப்பு ஜம்பர், ரவுசர் போட்டு தொப்பியும் அணிந்து சுமார் ௨௦௦, ௨௫௦ பேர் மட்டிலிருக்கும்-துவக்கு, கத்தி, கோடரி சகிதம் வந்தார்கள். வந்த அவர்கள் பொலிசாரும், ஊர்காவற் படையினரும், மற்றும் 3ம் கொலனி, சென்றல் கேம்பைச் சேர்ந்த சாதாரண சிங்கள ஆட்களுமாகும். அவர்கள் காம்பிலிருந்து வந்ததை ஆட்கள் கண்டுமிருக்கிறார்கள்.நாங்கள் வீட்டுக்குள் சென்று கதவைப் பூட்டிக் கொண்டோம்.எங்ளை உள்ளே வைத்து அவர்கள் நெருப்புவை த்தார்கள்.நெருப்பின் வெக்கையடிக்க நாங்கள் கத்திக் கொண்டு வெளியே ஓடிவந்தோம்.எல்லோரையும் வா, வாவென்று இழுத்து, இழுத்து எடுத்தார்கள்.சுந்தரலிங்கத்தை இழுத்து அடித்து பின்னர் சுட்டுப்போட்டார்கள்.என்னைத் துரத்தித் தரத்தி துவக்கால் அடித்தான் ஒருவன். நாங்கள் ஓடி வரும்போது முஸ்லிம் கொலனிப்பக்கம் நின்ற எஸ்.டி.எப். மாத்தையாமார் தான் எங்களைக் காப்பாற்றி இங்கு கூட்டி வந்து தங்கவைத்துள்ளார்கள். எங்கள் சைக்கிள் எல்லாவற்றையும் அவர்கள் கொண்டு போய் விட்டார்கள்.



### வடிவேல் சுலோஜினி (30)

பிள்ளை பசியில் கத்துதென்று பிஸ்கட்டும், சீனியும் வாங்கவென்று கடைக்குப்போன தம்பி(வடிவேல் சிவராசா-௨௯) யைப் போட்டு அவர்கள் அடித்தார்கள் .கிரேனைட்டால் அடித்து பல்லையெல்லாம் உடைத்திருக்கிறார்கள்.நெஞ்சிலும் பலமாக அடி விழுந்துள்ளதால் எலும்புகள் உடைந்திருப்பதாக டொக்டர் கூறியுள்ளார். தம்பி இப்போது கல்முனை வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார். வந்தவர்கள் எங்கள் வீட்டிலிருந்த சாமான்களையெல்லாம் எரித்து விட்டுப் போயுள்ளனர்.

### பீ. சீவலி தேரர்,
### விஜயபுர விஜயவர்தனாராமய

(புகைப்படம் எடுக்க வேண்டாமெனத் தடுத்துவிட்டார்)

4ம் கொலனிச்சம்பவத்தில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் பூர்வீகப் பிரதேசம் 4ம் கொலனியல்ல. அவர்களுக்கு கல்முனை மற்றும், சம்மாந்துறைப் பிரதேசங்களில் பெரிய, பெரிய கல் வீடுகள் உள்ளன. அவர்கள் நிலங்களைக் கைப்பற்று வதற்காகவே 4ம் கொலனியில் வந்து குடியேறியுள்ளனர்.
அரச மற்றும் தனியார் நிறுவனங்களிடமிருந்து உதவிகளைப் பெற்றுக் கொள்வதற்காகவே அவர்கள் போய் சேனைக் குடியிருப்பு கமு-கணேச வித்தியாலயத்தில் தங்கியுள்ளனர்.மேற்படி நிதியுதவிகளைப் பெறுவதற்காக தங்கள் வீடுகளுக்குத் தாங்களே தீவைத்திருக்கவும் கூடும்.

(சீவலி தேரர் தமிழ் மக்களைக் குறிப்பிட நேரும் சந்தர்ப்பங்களிளெல்லாம், அவர்களை 'தெமளு' (தெமளு-தமிழர்களை கீழ்த்தரமாக அழைக்கப் பாவிக்கப்படும் சொல்)என்ற பதத்தையே பிரயோகித்து விளித்தார்.)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## குழந்தைகளுக்கும் உங்களுக்குமிடையே..

40



# பால் ரீதியான பாத்திரங்களும் ,சமூக நடை முறைகளும்.!

டொக்டர் ஜெயிம் ஜி ஜினொல்ட்

தமிழில் : அருண்

### வெவ்வேறு குடும்ப மாதிரிகள்

அடையாளப்படுத்தலுக்கான மிகச்சிறந்த மாதிரி, பெற்றோர் தமது சொந்த பால் ரீதியான பாத்திரங்களையும், மற்றவரது பால் ரீதியான பாத்திரங்களையும் கௌரவித்தலேயாகும். பெற்றோரது அன்றாட சாதாரண நடைமுறைகளின் ஊடாக, குழந்தைகளுக்கு ஆண், பெண் தன்மைகள் மதிக்கப்படுகின்றன என்ற விடயம் கொண்டு சொல்லப்படுகிறது.

ஒரு ஆணின் வாழ்க்கையின் குறிக்கோள் என்பது அவன் தன்னை இந்த உலகில் பதிய வைத்துக் கொள்வதும், காலத்தினைக் கடந்து நிற்கும் விதத்தில் தன்னைப்பற்றிய தடயங்களை உருவாக்கிவிட்டுச் செல்வதும் தான் என்ற செய்தியை சில குடும்பங்களில் உள்ள குழந்தைகள் பெற்றுக்கொள்கிறார்கள். இத்தகைய ஒரு சூழ்நிலையிலும் சரி, விஞ்ஞானத்திலும் சரி ஆய்வுக்கும், கண்டுபிடிப்புக்கும், சாதனை படைப்புக்குமான கனவுகளை உருவாக்குகிறதற்கு காரணமாக அமைகிறது. பெண்களும் கூட குடும்பத்தை நடாத்துவதற்கு அப்பால் சமூகத்துக்கு பங்களிப்பு நல்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இத்தகைய ஒரு கண்ணோட்டம், தகப்பனும், தாயும் தமது பாத்திரங்களை திருப்தியுடன் ஏற்றுக்கொள்ளும் பட்சத்தில், ஒருவரது பாத்திரம் குறித்து மற்றவர் பாராட்டுதல்களை தெரிவிப்பவராகவும், மற்றவர்களது சாதனைகள் குறித்த ஆர்வங்களை பகிர்ந்து கொள்பவராகவும் இருக்கும் பட்சத்தில், மிகவும் வெற்றிகரமான ஒரு கண்ணோட்டமாக அமையும்.

சில குடும்பங்களிலோ, குழந்தைகள் வேறுவிதமான செய்திகளைப் பெறுகிறார்கள். பெண்குழந்தைகளைப் பராமரிப்பதிலும், வீட்டைப் பராமரிப்பதிலும் சலிப்புற்று இருக்கும் போதோ, ஒரு பெண் தாயாகவும், மனைவியாகவும், இருப்பதன் காரணமாகத் தனக்குள்ள கடமைகளின் சிக்கல்கட்குள்ளும் விவேகமாக நடந்து கொள்வதை கணவன் பாராட்டாமல் இருக்கும் போதோ, குழந்தைகள் பெண்களின் பாரம்பரிய பாத்திரங்களை எதிர்நிலைப் பாட்டுடன் நோக்குகிறார்கள். இத்தகைய குடும்பங்களிலுள்ள சிறுமிகள் போட்டி போடுபவர்களாகவும் பையன்களை வெல்ல வேண்டும் என்று எண்ணுபவர்களாகவும் வளர்கிறார்கள். இது பிறகு ஆண்களுடனான போட்டியாக வளர்கிறது.

இன்னும் சில குடும்பங்களிலிருந்து இன்னும் ஒரு விதமான செய்தி வருகிறது. குடும்பங்களில் பால் சார்ந்த பாத்திரங்கள் தலை கீழாக்கப்பட்டிருக்கின்றன. பெண்ணே அங்கு எல்லாவற்றிலும் அதிகாரம் பண்ணுபவளாகிறாள். அவள் அந்தக் குடும்பத்தின் பிரதான வருவாயை தருபவளாக இல்லாமல் இருக்கலாம். ஆனால் அவளோ அக்குடும்பத்தின் அனைத்து தேவைகளிலும் முடிவெடுப்பவளாக இருப்பாள். ஒரு கணவன் குறிப்பிட்டது போல ''நான் பெரிய விடயங்களில் தீர்மானம் எடுக்கிறேன். சீனாவை ஐக்கிய நாடுகள் சபையில் சேர்க்கலாமா, டி.வி.ஏ. நிறுவனத்தை தனியொருவருக்கு விற்கலாமா என்பன போன்ற விடயங்களில் தீர்மானங்கள் எடுப்பதுபோல எனது மனைவியும் சிறிய விடயங்கள் குறித்து முடிவெடுக்கிறாள். எந்தக்காரை நாம் வாங்க வேண்டும், எந்த வீட்டில் இருக்க வேண்டும், எந்த பாடசாலைக்கு குழந்தைகளை அனுப்புவது போன்ற விடயங்களில் அவள் முடிவெடுக்கிறாள்''.

இத்தகைய குடும்பங்களில் உள்ள தகப்பன்மார்கள் தாம் குடும்பத் தலைவனாக இருப்பதை தவிர்க்கிறார்கள். அவர்கள் தாமே தமது மனைவியை வீட்டின் தலைவியாக வெளிப்படையாக கூறுகிறார்கள். குழந்தைகள் ஏதாவது முடிவு செய்யும் பொறுப்பை தகப்பனாரிடம் கொடுக்கும் போது அவர் 'அம்மாவிடம் கேளுங்கள்' என்ற பதிலை பொதுவாகத் தருகிறார்.

இத்தகைய குடும்பங்களில், குழந்தைகள் ஆண்களை மதிக்காதவர்களாக, அவர்கள் மீது குறைந்தளவு விருப்பையே காட்டுகின்றவர்களாக வளர்கிறார்கள். ஆண் குழந்தைகளும்சரி, பெண் குழந்தைகளும் சரி தகப்பனாரை தாயாரின் கண்களினூடாகவே பார்க்கிறார்கள். ஒரு நல்ல ஆனால் அரை வேக்காடான ஒருவனாக, நல்ல இயல்புள்ள ஒரு கலவையாக, ஒரு கேலிச்சித்திரமாகவே அவர் அமைகிறார்.

ஆண் குழந்தைகளும் சரி, பெண் குழந்தைகளும் சரி ஒரு பலவீனமான தகப்பனும், அதிகாரமிக்க தாயுமுள்ள குடும்பத்தில் வளரும் போது பாதிப்புக்குள்ளாகிறார்கள். ஆண் குழந்தைகள் மட்டுமீறிய தன்மையுடையவர்களாக மாறி குடிப்பவர்களாகவும் ஒழுங்கற்றவர்களாயும், கட்டுப்பாடற்றவர்களாயும பெண்களுக்கு எதிரான வக்கிர இயல்புடையவர்களாயும் வளர்கிறார்கள். பெண் குழந்தைகள், தமது குடும்பத்தின் நிலையை, தமது கணவன் மார்களுடனும் தொடர்பவர்களாகிறார்கள். இதன் மூலம் தமது, பாத்திரங்களை தலை கீழான முறையில் இன்னொரு சந்ததிக்கும் வழங்குகிறார்கள்.

### பால் ரீதியான பாத்திரங்களும், சமூக நடைமுறையும்

மகன் / மகள் என்ற இரு தனியாள்களையும் வளர்த்து வருவதில் உள்ள முக்கியத்துவமானது மகன் ஆண் என்பதையும், மகள் பெண் என்பதையும் அவர்களுக்கேற்ற விதத்தில் வளர்க்கப்பட வேண்டும் என்பதையும் மறந்து விடக்காரணமாக இருந்து விடக்கூடாது.

பால் ரீதியான சமத்துவத்தில் எமக்கிருக்கும் விருப்பம், சில உயிரியல் ரீதியான நடவடிக்கைகள் சமப்படுத்தப்பட முடியாதவை என்பதையும் அவற்றுக்கு சில உளவியல் மற்றும் சமூகத் தொடர்ச்சிகள் உண்டு என்பதையும் மறப்பதற்கு ஏதுவாக அமைந்து விடக்கூடாது. சமூகப் பாத்திரங்கள் வெறுமனே பால் ரீதியான கட்டுப்பாடுகளின் அடிப்படையிலான குறுகிய கண்ணோட்டத்துடன் மாதிரிகளாக்கப்படக் கூடாது என்பது உண்மையே. ஆயினும் இது முற்றுமுழுதாக பால்ரீதியான கட்டுப்பாடுகளிலிருந்து பிரிந்ததாகக்கொள்ளப்படக் கூடாது. பெரும்பாலான பெண்கள் மனைவிகளாகவும், தாய்மார்களாகவும் இருப்பதால், அவர்களது பொதுக் கல்வியும், தனிப்பட்ட எதிர்பார்ப்புகளும் அவர்களை இத்தகைய பாத்திரங்கள் மூலமாக ஆழமான திருப்தியடைய உதவுகின்றன

உண்மையில் சில தனிப்பட்ட பெண்கள் சில வேறுவிதமான பாத்திரங்களை ஆற்ற முடிவு செய்கிறார்கள்தான். அவர்கள் இயந்திரங்களைப் பழுதுபார்ப்பவர்களாக, கப்பலோட்டிகளாக, விண்வெளிப் பிரயாணிகளாக, தொழிலதிபர்களாக, வெகுஜன ஸ்தாபனங்களை நடத்துபவர்களாக இருக்க விரும்பலாம். இத்தகைய விதத்தில் ஒரு தனிநபர் - அவர் எந்தப் பாலைச் சேர்ந்தவராயினும்சரி - தமது தனிப்பட்ட, அரசியல் தெரிவுகளின் படி இயங்க வசதிகள் இருக்க வேண்டும் என்பது அவசியமே. அதேவேளை ஆண்களும், பெண்களும் ஒருவருக்கொருவர் எதிராகவும், போட்டி போடுபவர்களாகவும் இல்லாதிருக்கும் போதே வாழ்வு இலகுவானதாக அமையும் என்பதையும் கவனிக்க வேண்டும்!

(வரும்)

---

## நான் இழந்தவை

பெற்றவரை இழந்திட்டேன்
பிறந்த மண்ணை இழந்திட்டேன்
சுற்றத்தாரை இழந்திட்டேன்
சுதந்திரத்தை இழந்திட்டேன்
மாணவப் பருவத்தை இழந்திட்டேன்
மண்வாசனை மறந்திட்டேன்
பீரங்கிச்சத்தம் கேட்டவுடன்
என்னையுமே இழந்திட்டேன்

## விடைகிடைக்காத வினாக்கள்

தங்கக்கதிரின் வெள்ளொளியும்
வெள்ளி நிலவின் மெல்லொளியும்
காசில்லாமல் வீசும் தென்றலும்
மரங்கள் தருகின்ற பழங்களும்
வரியின்றிப் பொழிகின்றவானமும்
குறைவின்றி இருக்க எதுவேண்டும் நமக்கு?
செல்வீச்சுக்களும், துவக்குச்சூடுகளும்
எறிகணைத் தாக்குதல்களும் எதற்காக?
அப்பாவி உயிர்களைப்பறிப்பதால் ஏற்படும் இலாபம் தான் என்ன?
என் வினாக்களுக்கு விடை கிடைக்காத
விந்தை தான் என்ன?

மு. தணிகைச் செல்வன்
எட்டாம் ஆண்டு மாணவன்
சிவானந்தா தேசிய பாடசாலை
கல்லடி

---

மழைப்படலம் சோசோவெனப் பெய்ந்தழிகிறது...

மழை பொழிவதற்கென்று
உலகம் தேர்ந்தெடுக்கின்ற நேரத்தைப் பாருங்கள்
ஆகா
எத்தனை அழகாக இருக்கிறது...
உண்மையில் தண்ணீர் எப்போதுமே அழகானதுதான்...

சூறாவளித் தாழமுக்கத்தை
உள்வாங்கிச் சுழன்றுகுமுறும்
கடல் தண்ணீரையும்...-,
வெள்ளம் பெருக்கெடுத்துக் கட்டுமீறிப்பாயும்
ஆற்றுத்தண்ணீரையும் பார்க்குகையில்
பயம் சிலவேளை வரலாம்....
எரிச்சல் வருகிறதா....?

சொல்லுங்கள் -

மூன்று நாட்களாய்ச் சோவெனத்
தொடர்ந்து மழைத் திருக்கையில்
எத்தனை இனிமையாய் இருக்கிறது...
ஒவ்வொரு துளிகளாய்
தகரக்கூரைகளில் விழுந்தெழும்பியோடும்
ஓசைகளின் ஒழுங்கைத்தான் என்னவென்பேன்...

வெய்யில் அடிக்கும் போது
அப்படிக் கேட்கவா செய்கிறது....
வண்டில்காரர்களும் வாகனக்காரர்களும்
கிளப்பிவிட்டுப் போகும் புழுதியில் -
மூச்சுத் திணறுவது மட்டும் தான் மிஞ்சுவதைத் தவிர...!

நற்பிட்டிமுனை பளீல்

---

## பஸ்

ஒரு துளி
மற்றொன்றினைத் துரத்தி
இரண்டும் ஒன்றாகி
கோடாகி நீண்டு....
பிறகு
மற்றொன்று
கண்ணாடி எல்லாம்
துளிகளும் கோடுகளுமாகி.....

காற்றுள்ள
இடமெல்லாம்
மனிதர்கள் ஏறி
கையை, காலை, கைப்பையை
கண்ட இடத்திலும் எறிய...

வியர்வைகள் ஆறாகி
பெருமூச்சுகள் தொடர்ந்து
சப்பாத்துக்கள் நெரிக்க
நாங்களும் வேர்வையும்
வெற்றிடமுமற்ற பஸ்ஸுமாய்
நகரத்தொடங்கி

நியான் விளக்குகளும்
இரைச்சலுடனுமான தெருவில் இறங்கி
பஸ்களின் வரிசையில்
கலக்க,

கண்ணாடியில் மட்டும்
ஒரு துளி
மற்றொன்றினைத் துரத்தி
அதனுடன் கலந்து
கோடாகி நீண்டு....

க.கமலினி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஆனந்தன் கவிதைகளும் ஆத்மாவின் ராகங்களும்!

எம்.ஏ.நுஃமான்

ஆனந்தன் கவிதைகள் பற்றிய ஆத்மாவின் விமர்சனம் பார்த்தேன் (சரிநிகர் - 131). ஆனந்தனின் கவிதைகள் பற்றி எத்தகைய விமர்சனங்களையும் முன்வைக்கும் உரிமை அவருக்கு உண்டு. ஆனந்தன் கவிதைகளுக்கு நான் எழுதிய முன்னுரை பற்றியும் அவர் காரமாக சில வார்த்தைகள் எழுதி இருப்பதனால் - உண்மையில் எனது முன்னுரையின் பொய்மையை, அதன் பம்மாத்துத் தனத்தை அம்பலப்படுத்துவதற்காகவே, பொருட்படுத்தத் தகாத அந்தக் கவிதைத் தொகுதி பற்றி அவர் அந்த விமர்சனத்தை எழுதியிருப்பதனால்- அது தொடர்பாகச் சில கருத்துக்களைச் சொல்ல நேர்ந்துள்ளது.


ஆத்மா எப்போதும் கொஞ்சம் அவசரக்காரன் என்று தெரிகிறது. ஆற அமரச் சிந்தித்து தான் சொல்வது சரியாக இருக்கும்ா என்ற கவனத்துடன் பேசுவதும் எழுதுவதும் இன்னும் அவருக்கு அமையவில்லை. இதை அவசரம் என்று சொல்லுவதை விட ஒரு வெளிப்படையான அப்பாவித்தனம் என்று சொல்லத் தோன்றுகின்றது.

ஆர்வமும் திறமையும் உள்ள இளங்கவிஞர்கள் பலரையும் போலவே கவிதை பற்றி சில மாயைகளையும், கற்பிதங்களையும் வரித்துக் கொண்டு அல்லல்படும் ஒரு தன்மையும் அவரிடம் உண்டு. இதனை அவரை நான் முதல் முதல் சந்தித்த போதே உணர்ந்தேன். அச்சந்திப்பு சுமார் இரண்டு வருடங்களுக்கு முன்பு நிகழ்ந்தது. ஜோன் டி சில்வா அரங்கில் சுதந்திர இலக்கிய விழா முடிந்து வெளியே வந்து கொண்டிருந்தபோது ஆத்மா தன்னை எனக்கு அறிமுகப்படுத்திக் கொண்டு என்னுடன் உரையாடினார். அப்போது தான் எனது இரண்டு கவிதைகள் (காத்திருப்பு, என் கடைசி வார்த்தைகள்) சரிநிகரில் பிரசுரமாகியிருந்தன. அவர் என்னிடம் முதலில் கேட்ட கேள்வி ''என்ன சேர் உங்கட கவித்துவம் இப்படி வரண்டு போச்சு'' என்பது தான். எனக்குக் கோபம் வரவில்லை. என் சுபாவத்தில் அதற்கு இடமில்லை. நான் அவரது கல்மிசமில்லாத வெளிப்படையான அப்பாவித்தனத்தை அல்லது வெகுளித்தனத்தை உண்மையில் மிகவும் ரசித்தேன். நாசூக்கு, இங்கிதம் என்று பாராத வெளிப்படையான சுபாவம் அவருடையது என்பதைப் புரிந்து கொண்டேன். கவித்துவம் பற்றி அவரிடம் ஒரு வகையான கற்பிதம் இருப்பதையும் உணர்ந்து கொண்டேன். அத்தகைய கற்பிதங்கள் இளமையில் என்னிடம் இருந்தவை தான். கவித்துவம் பற்றியும் கவிதையின் பன்முகத் தன்மை பற்றியும் அவருடன் அன்று சற்று அதிக நேரம் உரையாட நேர்ந்தது. நீங்கள் சொல்வதும் சரிதான் என்று அன்று அவர் ஒத்துக் கொண்டதாக ஞாபகம்.

ஆயினும் கவிதையின் பன்முகத் தன்மை பற்றி இன்னும் அவருக்குள் ஒரு புரிதல் நிகழவில்லையென்பதையே அவரது சரிநிகர்க் கட்டுரை உணர்த்துகின்றது. அது பற்றி எழுதுவதல்ல எனது பிரதான நோக்கம். ஆத்மா கூறுவது போல் 'கவிஞர் ஆனந்தன் பற்றியும், அவருடைய கவிதை ஆளுமை பற்றியும் எனது முன்னுரை எத்தகைய மாயைகளைத் தோற்றுவிக்கின்றது? அல்லது நான் எந்த அளவு பம்மாத்துப் பண்ணியிருக்கிறேன் என்பதைப் பற்றிச் சொல்வதே எனது நோக்கம்.

'ஆனந்தன் கவிதைகள்' தனது விமர்சனத்துக்கு உள்ளாகும் தகுதி அற்றவை என்றும் 'அவன் மிகவும் ஆரம்ப நிலையில் உள்ள ஒரு கவிஞனே' என்றும், 'ஒரு கவிஞனுக்குரிய சராசரியான இயல்புகளில் கூட போதியளவு வளர்ச்சி பெறாதவன் என்றும், ஆனந்தனையும் அவனது கவிதைளையும் மதிப்பிடும் ஆத்மா, அத்தகைய ஒரு மோசமான கவிஞனுக்குப் பொற்கிரீடம் சூட்டி, அவனை ஏழு குதிரைகள் பூட்டிய தேரில் ஊர்வலம் கொண்டு போவது போல அபத்தமான பம்மாத்துத்தனமான ஒரு முன்னுரையை அந்த நூலுக்கு வழங்கியமைக்காக என்னைச் சாடுகிறார்.

ஆத்மா தன்னுடைய கட்டுரையை சரிநிகருக்கு அனுப்பு முன் எனது முன்னுரையை இன்னும் இரண்டு



தரம் வாசித்திருக்கலாம். ஆனந்தன் ஒரு மஹாகவிஞன் என்றோ- ஆத்மா போல் கவிதையின் உச்சங்களைத் தொட்டவன் அல்லது தொட முயன்றவன் என்றோ அவனுடைய கவித்துவ ஆளுமை அபாரமானது என்றோ நான் ஒரு இடத்திலும் எழுதவில்லை. பதிலாக ''ஆனந்தன் தன்னை நிலை நிறுத்திக்கொண்ட எழுத்தாளன் அல்ல. எழுத்தாளனாகக் கவிஞனாக தன்னை நிலை நிறுத்திக் கொள்ளும் அளவுக்கு அவன் எழுதியவனும் அல்ல'' என்றுதான் எழுதியிருந்தேன். **(ஆனந்தன் கவிதைகள் பக்.7)** ''இத்தொகுப்பில் அவனது ஆளுமையின் ஒரு துளியைத் தான் நாம் பார்க்கிறோம்'' என்று தான் எழுதியிருக்கிறேன். இங்கு அவனது கவித்துவ ஆளுமை பற்றி நான் பேசவில்லை. அவனது பொதுவான ஆளுமையைப் பற்றித் தான் நான் பேசுகிறேன். ''அவருடைய (ஆனந்தனின்) ஆத்மாவின் ஒரு சிறு பகுதியை மட்டுமே நாம் காணக்கிடைக்கிறது'' என்று ஆனந்தன் கவிதைகள் பற்றி தனது கட்டுரையில் ஆத்மா எழுதியுள்ள அதே வரிகள் போன்றது தான் இதுவும். 'கவித்துவ ஆளுமை' ஆத்மாவின் கண்டுபிடிப்புத் தான், நான் எழுதியதல்ல.

''அவன் எழுத்தில் தந்தவற்றை விட எழுதாமல் தந்தவை தான் அதிகம். அவன் எழுதிய சில கவிதைகள் இத்தொகுப்பில் உள்ளன. அவன் எழுதாதவை நம் நெஞ்சம் நிறைய உள்ளன. அவன் மறைவே ஒரு சோகக் கவிதையாக நம் உணர்வுகளில் வியாபித்துள்ளது. தன் மிகுதிக் கவிதைகளை அவன் நம் கனவுகளில் வந்து பாடுவான்'' என்ற இறுதி வரிகள் ஆத்மாவை மிகுந்த சங்கடப் படுத்தியுள்ளன. இதன் தாற்பரியத்தை, பொருளினை ஆத்மா புரிந்து கொள்ளவில்லை. தன் புரிதல் சரி தானா என்று கூட அவர் சிந்திக்கவில்லை. இதிலே என்ன பம்மாத்தை ஆத்மா காண்கிறார் என்று எனக்குப் புரியவில்லை, நான் உண்மையாக உணர்ந்து எழுதிய வசனங்கள் இவை. இந்த வரிகள் அவன் கவிதைகளின், கவித்துவத்தின் புகழ்பாடவில்லை. ஒரு மஹா கவிஞன் இறந்தமைக்கான இரங்கல் அல்ல இது என்பது ஒரு சாதாரண மொழி அறிவு உள்ளவருக்கும் புரியும். தன் ஆளுமையை தன் எழுத்தில் வெளிக்காட்டாமலேயே பாதிவழியில் அநியாயமாகக் கொலை செய்யப்பட்ட ஒரு நண்பனுக்கான கழிவிரககம் தான் இது என்பதைக் கவிதையின் உச்சங்களைத் தொடச் சங்கற்பம் பூண்டுள்ள ஆத்மாவால் புரிந்து கொள்ள முடியாமற் போனது துரதிஷ்டவசமானது.

ஆனந்தன் ஒரு மகத்தான கவிஞன் அல்ல. அவன் தன்னைப்பற்றி அவ்வாறு கருதியதாகவும் நான் அறியவில்லை, ஆத்மாவைப் போல் கவிதையின் உச்சங்களைத் தொடும் ஆர்வமும் அவனுக்கு இருந்ததில்லை. அவன் எழுதத் தொடங்கிய காலத்தில் வழக்கில் இருந்த பாணியில் அவ்வப்போது சில கவிதைகளை எழுதியிருக்கிறான். அவற்றிலே அவனது அரசியல், மனித நேயம் என்பன வெளிப்பட்டிருக்கின்றன. என்னுடைய முன்னுரையில் நான் அவற்றைப் பற்றித் தான் சொல்லி இருக்கிறேன். அதற்குமேல் எதுவும் இல்லை. ஆத்மா நான் எழுதாததையெல்லாம் கற்பனை பண்ணிக் கொண்டு அவஸ்த்தைப் பட்டிருக்கிறார்.


ஆனந்தன் எழுதத் தொடங்கிய காலப்பகுதிக்கு முன்னரே அவனது கவிதைப் பாணியும் கருத்தியலும் காலாவதியாகி விட்டன என்று ஆத்மா கூறுகிறார். மருந்து, உணவுப் பண்டங்கள் காலாவதியாவது போல இலக்கியங்கள், இலக்கியப்போக்குகள் காலாவதியாகுவதில்லை. காலாவதியான மருந்தை உணவுப் பண்டத்தை நாம் குப்பைக் கூடையில் வீசி விடுவோம். அவற்றால் பயன் இல்லை. ஆனால் இலக்கியத்தை அவ்வாறு வீசுவதில்லை. கலைப் பொருட்கள் காலாவதியாகும் உணவுப் பண்டங்கள் போன்றவையல்ல. கம்பனைப் போல் இளங்கோவைப் போல் இன்று யாரும் எழுதுவதில்லை. பாரதி போல் கூட யாரும் இன்று எழுத முடியாது. அதனால் அவர்களது படைப்புகள் காலாவதியாகி விட்டன; இனி குப்பையில் வீசி விடலாம் என்றாகாது. இலக்கியப் பாணிகள் தொடர்ச்சியானவை. முன்னோர்கள் இல்லாமல் பின்னோர்கள் இல்லை. முந்திய பாணி ஒன்று இல்லாமல், பிந்திய பாணி ஒன்று இல்லை என்பதை ஆத்மா மனங்கொள்வது தகும்.

ஆனந்தன் கவிதைகளை எட்டு வகையான வகை மாதிரிகளுக்குள் வகைப்படுத்தி விடலாம் என்று ஆத்மா கூறுகிறார். இத்தகைய ஆய்வு ஒரு நல்ல முயற்சி. அந்த எட்டு மாதிரிகளையும் அவர் இனங் காட்டியிருக்கலாம். மூன்றோ, நான்கோ மாதிரிகளை மட்டும் தான் அவர் காட்டியிருக்கிறார். ஏனைய மாதிரிகளைப் பற்றியும் அறிய நாம் ஆவலாய் உள்ளோம். ஆயினும் ஆனந்தனிடம் தனித்துவம் இல்லையென்பதை நிறுவுவதற்கே இந்த மாதிரிகளைப் பற்றி ஆத்மா பேசுகிறார். ஆரம்ப நிலைக் கவிஞர்கள் ஏதாவது ஒரு மாதிரியைப் பின்பற்றி எழுதுவது தவிர்க்க முடியாதது தான். சோலைக்கிளியின் மாதிரியைப் பின்பற்றி ஆத்மா எழுதுவது போன்றது தான் இது. எனினும் உச்சங்களைத் தொட்ட அல்லது தொட இருக்கின்ற கவிஞனாகத் தன்னைக் கருதுவதால், ஆத்மா இதனை ஒத்துக் கொள்வதில்லை. ஆனந்தன் எந்த உச்சங்களையும் தொடவில்லை. அவன் அவ்வாறு தொடவேணவாக் கொண்டிருந்ததாகவும் நான் நம்பவில்லை. அவன் ஒரு சாதாரண ஆரம்ப நிலைக் கவிஞன்தான். என்னுடைய கவலையெல்லாம் ஆத்மாவின் கவிதைச் சாம்ராச்சியத்தில் ஒரு சாதாரண ஆரம்ப நிலைக் கவிஞனுக்கு அனுமதி இல்லையா என்பது தான். செத்துப் போன ஆனந்தனையாவது ஒரு சாதாரண கவிஞனாக இருக்க அனுமதியுங்களேன். உச்சங்களைத் தொடும் உங்கள் கவிதை அளவு கோல்களால் மீண்டும் அவன் கழுத்தை நெரிப்பானேன் என்று ஆத்மாவைக் கேட்கத் தோன்றுகின்றது. ஆனந்தன் மேல் ஆத்மாவுக்கு மனஸ்தாபம் ஏதும் இல்லையென்று எனக்குத் தெரியும். மனஸ்தாபம் என்மீதுதான்; ஆனந்தனைச் சுற்றி ஒரு மாயையைக் கட்டியெழுப்பும் முன்னுரையை எழுதியமைக்காக. ஆனால் பாவம். ஆத்மா என் முன்னுரையை புரிந்து கொள்ளாமல் அவசரப்பட்டு விட்டார். அதனால் அவலை நினைத்துக் கொண்டு உரலை இடித்திருக்கிறார்.

இனி, ஆத்மாவின் கவிதைக் கோட்பாடு பற்றியும் சிறிது சொல்ல வேண்டும். நான் முன்னரே குறிப்பிட்டது போன்று கவிதை பற்றிய சில இறுக்கமான கற்பிதங்களைக் கொண்டிருக்கிறார் ஆத்மா. கவிதையை உணர்வாக மட்டும் அவர் கருதுகிறார். 'எல்லா நல்ல கவிஞர்களுக்கும் கவிதை ஒரு உணர்வுதான்' என்கிறார். அவரைப் பொறுத்த வரையில் கவிதையில் அறிவுக்கு இடம் இல்லை. அப்படிப் பார்த்தால் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்று தொடங்கும் கணியன் பூங்குன்றனின் புகழ்பெற்ற கவிதை அவரைப் பொறுத்தவரை கவிதையாக ஆகாது. இத்தகைய கொள்கையை 'வெளி ஒதுக்கற் கொள்கை' என்று முருகையன் சொல்லுவார். அதாவது ஒரு ரகமானதை மட்டும் கவிதை என்று எடுத்துக் கொண்டு ஏனையவற்றை ஒதுக்கி விடுதல். இத்தகைய கொள்கை குண்டுச் சட்டிக்குள் குதிரை ஓட்டுவதனால் வருவது. தமிழ்க் கவிதைப் பரப்பிலும் உலகக் கவிதைப் பரப்பிலும் விரிந்த அளவில் பரிச்சயம் கொள்ளும் போது, கவிதை பன்முகப்பட்டது என்பது தெரிய வரும். உணர்ச்சி, அனுபவம், சிந்தனை என கவிதைக்குப் பல முகங்கள் இருப்பது தெரிய வரும். அதில் ஒரு முகம் தான் எனக்குப் பிடிக்கும் என்பதற்காக மற்ற முகங்கள் முகங்களே அல்ல என்று ஆகாது. ஆத்மா இன்னும் விரிந்த அளவில் கவிதையில் பரிச்சயம் கொள்ளும் போது அவருக்கு இது தெரிய வரும். ஆத்மாவின் வயதில் கவிதை பற்றி நானும் ஆத்மாவைப் போல் தான் ஒற்றை வழியில் சிந்தித்தேன். அது ஒரு சிறுபிள்ளைக் கோளாறு.(Infantile Disorder) என்று இப்போது புரிகின்றது. அப்போது கவிதையைப் பற்றிய எனது ஞானமும், பரிச்சயமும் மிகவும் சொற்பம்.

கவிதையோ, கவிஞனோ சமூகப் பொறுப்புக் கொண்டிருக்கத் தேவையில்லை. 'அது பொய்மைகளாலும், வரட்டு வாதங்களாலும் நிரம்பிய ஒரு கலவையாகக் கவிதையைத் தொடர்ந்தும் ஒரு குறுகிய எல்லைக்குள் வைத்திருப்பதற்கே' வழிவகுக்கும். கவிதையின் பொருள் இரண்டாம் பட்சமானது தான். அதன் வெளிப்பாட்டு முறை தான் அடிப்படையானது. உயர்ந்த கருத்துக்கள் கவிதையின் முதன்மையான அம்சங்கள் அல்ல - இவை கவிதை பற்றிய ஆத்மாவின் முத்தான கருத்துக்கள். ஆனால் இவை ஏற்கெனவே உதிர்ந்த முத்துக்கள் தான். பல காலமாகப் பலரும் சொல்லிக் களைத்துப் போன வார்த்தைகள் தான் என்பதை ஆத்மா அறிய வேண்டும். உருவம், உள்ளடக்கம் பற்றிய சலித்துப் போன வாதத்தின் மறுபிறப்பு இது. ஆத்மா இவ்வாறு செத்த பாம்பை அடிக்காது கவிதைகளையும், கவிதைகள் பற்றியும் நிறையப் படிக்க வேண்டும். கவிதைப் பொருளுக்கும் அதன் வெளிப்பாட்டு முறைக்கும் இடையில் உள்ள இயைபின் முக்கியத்துவத்தை அவர் புரிந்து கொள்ள முயல வேண்டும். அல்லது கவிதை பற்றி எழுதுவதை விட்டுவிட்டு கவிதை மட்டும் எழுதிக் கொண்டிருக்கலாம்; அவருக்கும் நமக்கும் பிரச்சினை வராது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்



# தேவதைகளின் தேசம்

சிவக்கொழுந்து பரமானந்தன்

''அள்ளிக் குடுத்தனல்லோ...

நான் அணைத்தெடுக்கும் கையாலே, ஓ... அம்மா தான். அம்மாவே தான் ஒப்பாரி வைக்கிறா. அம்மாவுக்கு இது வழக்கம். எங்களுக்கும், சுத்தி இருக்கிற ஆட்களுக்கும் இது பழக்கமாப் போச்சு. முந்தி துவக்கத்திலை எல்லாரும் வந்து அம்மாவுக்கு ஆறுதல் சொல்லுவினம், இப்ப ஒருவரும் வாறதில்லை. அம்மா ஒப்பாரி வையாத நாளில்லைத் தான், ஏன் ஒப்பாரி வைக்கேல்லை எண்டு கேட்பினம். அந்த அளவுக்கு இந்தக் குடியேற்றத் திலை சிரிச்சு போச்சு...!

அம்மா செத்துப் போன அப்பாவுக்காக, அண்ணாவுக்காகத் தான் அழுகிறாவோ... அல்லது... உயிரோடை இருக்கிற எங்களுக் காக அழுகிறாவோ...? எனக்கு அது தெரியாது. யோசிக்கிறன், ஆறாம் ஆண்டு படிக்கிற என்ரை சின்ன மூளைக்கு அது நெடும்பிரித்தல் மாதிரி... பிடிபடுகுதில்லை. தேவாரம் முடிந்த பிறகு வகுப்புகள் துவங்கிற மாதிரி அம்மாவின்ர ஒப்பாரி முடிஞ்ச பிறகே அன்றாட வேலைகளை நாங்கள் துவங்குவம். சுத்திவர இருக்கிறவையும் அப்படித்தான்.

''சன்னதியானே! என்ரை நாலு தேவதை களிலை ஒண்டை கொண்டு போட்டாய், இந்த மூன்று தேவதைகளையாவது காப்பாற்றிப் போடு அப்பனே'' அம்மாவின் ஒப்பாரிக்கு அம்மாவே வைக்கிற முற்றுப் புள்ளி தான் அது.அம்மா மூன்று தேவதைகள் எண்டது என்னையும் பெரியபிள்ளையையும் தங்கச்சியையும் தான். எங்களுக்கு எல்லாமே அம்மாதான். அம்மாவுக்கு எல்லாமே நாங்கள் தான். கணிதபாடம் முடிய ஆங்கிலம் தொடங்கிற மாதிரி அம்மாவுக்கு ஒன்று முடிய இன்னொரு கஷ்டம். கஷ்டம் தாங்க மாட்டாமல் எங்களுக்கும் அடிப்பா. எங்களுக்கு அடிச்சுப் போட்டு தான்தான் அழுவா. அம்மாவின் அழுகை, ஒப்பாரி அடி எல்லாத்தையும் நான் இடைக்கிடை மறந்து போவன். ஆனால் அம்மா சொல்லுற ஒன்றை மட்டும் நான் மறக்க மாட்டன். ஈரச்சோக்காலை எழுதின எழுத்துப்போலை என்ர மனதிலை இருந்து அழிக்க முடியாது.

''குஞ்சு, கெலிச்சத்தம் கேட்டால் விட்டுட்டு ஓடி வந்திடு. பள்ளிக்கூடம் நாளைக்கும் நடக்கும் தானே. உன்னை நம்பித்தானே நாங்கள் இருக்கிறம்''. அம்மா திரும்பத் திரும்ப இதைத்தான் சொல்லுவா. பன்னிரண்டு வயதிலை என்னை இந்த வீட்டிற்கு மொனிற்றர் ஆக்கினது ஆர்? அப்பாவோ... கடவுளோ... வேறை ஆருமோ, எனக்குத் தெரியாது.

அப்பா ஏன் செத்தவர்?, நான் அம்மாவை ஒரு நாளும் கேட்கேல்லை. எனக்குப் பயம். அம்மா அழுவா, ஒப்பாரி வைப்பா. துண்டு துண்டாகக் கிழிச்ச உலகப்படத்தை பொருத்திப் பாப்பமே அப்படி அம்மா சொல்லுற ஒப்பாரித் துண்டுகளை நான் பொருத்திப் பார்த்து கண்டு பிடிச்சனான். எங்கடை சொந்த கிராமத்தை விட்டிட்டு வந்த பிறகு அப்பாவுக்கு வேலை என்ற ஒன்று இல்லை. கொம்பிளவுக் காட்டிலை விறகு வெட்டி அதைச் சைக்கிளிலை கட்டிக் கொண்டு போய் ஆவரங்கால் புத்தூர் பக்கம் தேத்தண்ணிக் கடையளுக்குக் குடுக்கிறவர். எல்லா நாளும் எண்டில்லை. ஆனால் அம்மாவுக்கு கஷ்ரம் இல்லை. அம்மா சந்தோசமாக இருந்தவ. ஒரு நாள் விறகுக் கட்டுக்கை இருந்த விரியன் பாம்புக்குட்டி அப்பாவுக்கு முதுகிலை கொத்தி அப்பா சைக்கிளோடை விழுந்து உடம்பெல்லாம் நீலம் பாரிச்சு வாயாலை நுரைதள்ளி - அந்த இடத்திலேயே செத்துப் போனார். அம்மா பட்ட பாடும்- அழுத அழுகையும் எனக்கு வாய்ப்பாடுமாதிரி ஒரு மனப்பாடம்.

''நீங்கள் இல்லாமல் இந்தத் தேவதைகளையும் வைச்சுக் கொண்டு நான் இனி என்ன செய்யப் போறன்?'' அப்பா செத்தப்பிறகு அம்மா கேட்டுக்கேட்டு அழுதா. உயிரோடை இருக்கேக்கை அமமா ஒருநாளும் அப்படிக் கேக்க இல்லை. படிப்பிக்காத பாடத்திலை கேக்கப் பட்ட கேள்வி மாதிரி எனக்கு பெரிய அந்தரமாய் போச்சு.

''குஞ்சு எழும்படா பள்ளிக்கூடம் போறதில் லையே நானும் இண்டைக்கு நேரத்துக்கு போகவேணும்''

எனக்குப் படுக்கையாலை எழும்புறதுக்கு விருப்பமில்லை. இருந்தாலும் எழும்பிறன். படுத்திருந்த உரச்சாக்கை சுத்தி வைக்கிறன். இந்த உரச்சாக்கு... ஆ... எனக்குத் தெரியும். அப்பா தோட்டத்திற்கு உரம் எடுத்தது. எங்கடை வீடு, தோட்டம் இப்ப எப்படி இருக்குமோ தெரியாது.

சதுரறுள் போட்ட மாதிரி குறுக்கும் மறுக்குமாக நாற்பது ஐம்பது கொட்டில்களிலை எண்பது தொண்ணூறு குடும்பங்கள். எல்லோரும் எங்களைப்போல உடுத்த உடுப்போடை சேர்த்த செல்வங்களை விட்டுட்டு பெற்ற செல்வங்களோடை வந்தவைதான்.

கட்டித் தந்த புதிசிலை கொட்டில்கள் நல்லாத்தான் இருந்தது. போன மாரிக்கு அடிச்ச காற்றுக்கு எல்லாமே பென்சிலாலை எழுதி துப்பல் போட்டு அழிச்ச மாதிரி சிதைந்து போச்சு. அதைத்திருத்தி தர யாருமே இல்லை. இப்ப இந்தக் கொட்டில்களை கண்கொண்டு பார்க்கேலாது. விளையாட்டுப் போட்டிக்கு போட்ட இல்லப்பந்தல் மாதிரி கிடைச்சதைக் கொண்டு, நினைச்சமாதிரி அவரவரே திருத்தி இருக்கினம். வெயில் காலம் கொஞ்சம் பரவாயில்லை. மழைக்காலம் தான் பெரிய கஷ்டம். வீட்டு முற்றத்திலை முழங்காலளவு வெள்ளம். வீட்டுக்கை ஒரே சறுக்கல், பள்ளிக்கூடத்து பைப்படி மாதிரி. எங்களை யாருமே கவனிக்கிறதில்லை! பள்ளிக் கூடத்திலை சமயபாட சேர் சொன்னது ''புதிசா வந்த பொடியளை அகதிகள் என்று சொல்லப்படாது, இடம்பெயர்ந்தவை என்று சொல்ல வேணும்'' என்று. எப்படிச் சொன் னால் என்ன இரண்டும் ஒண்டு தானே. கவனிப் பாரற்றவை எல்லாரும் அகதிகள் தானே.

எப்பவாவது சிவப்பா கூட்டல் அடையாளம் போட்ட ஜீப் ஒண்டு வரும். ஏ.எல்.படிக்கிற பொடியன்கள் மாதிரி வெள்ளை லோங்சும் வெள்ளை சேட்டும் போட்ட நாலஞ்சு பேர் இறங்குவினம். எல்லாரையும் கூப்பிட்டு கதைப்பினம். டாப்பு கூப்பிட்ட மாதிரி எல்லாற்றை பெயரையும் கூப்பிடுவினம். புதிசா வந்த ஆட்களை கூட்டி இடம் மாறினவையை கழித்துப் பெருக்கிப் பிரிச்சுக் கொண்டு போவினம். பிறகு எப்ப வருவினமோ தெரியாது.

''குஞ்சு, பல்லை மினுக்கி, முகத்தைக் கழுவு, நேரம் போகுதெல்லே இனி நீ படிச்சு... ஒரு மனிசனாகி, இந்தப் பெட்டைக் குஞ்சுகளுக்கு ஒரு வழிபண்ணி... இதையெல்லாம் பார்க்க நான் இருப்பனோ'' அம்மா இழுத்துப் பறிச்சு கதைக்க எனக்குப் பொல்லாத சினம் தான் வரும். பத்து வருசத்திலை செய்யிறதை பத்து நாளிலை செய்ய வேணுமென்று அவசரப் படுகிறா. ஏன் அப்படி? அப்பா மாதிரி தானும் செத்துப்போவனோ எண்டு அம்மாவுக்குப் பயம். தான் இல்லாட்டி நாங்கள் அகதிகளாகிப் போவமாம். இப்ப மட்டும் என்ன? அகதிகள் தானே. இப்ப நாலு அகதி, அம்மா இல்லாட்டி மூண்டு அகதி. அவ்வளவு தானே.

கொடியிலை தொங்குகிற காற்சட்டையையும் சேட்டையும் எடுக்கிறன். முந்தி எண்டால் எந்தச் சேட்டைப் போடுவம். எந்தக் காற்சட்டையைப் போடுவம் என்று யோசிப்பன். இப்ப கரைச்சல் இல்லை. ஒரு சேட்டு ஒரு காற்சட்டை. அதுவும் இனி தோய்த்தால் கிழிவன் எண்ட மாதிரி. என்ரை அளவுக்கு சின்னனான அந்தக் காற்சட்டையையும் என்ரை அளவுக்கு பெரியதான அந்தச் சேட்டையும் போடுறன். சேட்டை காற்சட்டைக்குள்ளை விடுவம். அப்பதான் காற்சட்டை போட்டிருக்கென்று தெரியும். இப்ப எப்படி இருக்கும். வினோத உடைப்போட்டிக்கு போன மாதிரி இருக்குமோ.! எனக்குத் தெரியேல்லை. கண்ணாடி என்றால் பார்க்கலாம், கண்ணாடி தான் இல்லையே.

பள்ளிக்கூடத்திலை போன திங்கட்கிழமை எல்லாருக்கும் சீருடைத்துணி குடுத்தது. எனக் கும் தான். வெள்ளை நிறத்திலை சேட்டுத்துணி. நீலநிறத்திலை காற்சட்டைத்துணி. இரண்டுக்கும் நடுவில் ஒரு நோட்டீசும் வைச்சு தந்தது. அந்த நோட்டீஸ் நான் வாசிச்சனான். நல்ல தமிழிலை தடித்த எழுத்தில அச்சடித்த வசனங்களும் எனக்கு நல்ல ஞாபகம்.

**''இலவசக்கல்வி என்ற எமது கொள்கையின் முழுப்பயனையும் பெற, இலவசப் புத்தகங்கள்-, இலவச மதிய உணவு என்ற தொடரில், இன்று இந்தச் சீருடைகளை இலவசமாக இந்த அரசு வழங்குகிறது. இந்த நாட்டின் எதிர்காலச் சந்ததிகள் இதன் பயனை முழுதாக பெற்று சிறந்த பிரஜைகளாக விளங்கவேண்டும்''.**

***இங்ஙனம்,***

***மேன்மை தங்கிய ஜனாதிபதி,சிறிலங்கா குடியரசு.***

என்றிருந்தது. எனக்கு சோதனைப் பேப்பரை கையிலை தந்த மாதிரி ஒரு நடுக்கம். வெள்ளைத் துணி சிவப்பாக, நீலத்துணி நாவலாக எனக்குத் தெரியுது. எனக்கு இது வேண்டாம். வேண்டவே வேண்டாம். அடுத்த நாள் வகுப்பு சேர் கேட்டவர் ''நேற்று என்ரை மேசையிலை சீருடைத் துணியை மறந்து போய் விட்டிட்டு போனது ஆர்?'' நான் தான். பேசாமல் இருந்து விட்டேன். பிறகு சேர் அதைப்பற்றிக் கதைக்கவே இல்லை.

வகுப்பிலை இருக்கிறன். எனக்குப் பயம். படிக்க விருப்பமில்லை என்றில்லை. எந்த நேரமும் ஒரு யோசினை, ஒரே யோசினை. அம்மா இப்ப என்ன செய்வா? எங்கையாவது இடிக்க, குத்தப் போயிருப்பா. அம்மா அப்படி வேலை செய்தால் தான் எங்களுக்கு சாப்பாடு. பெரிய பிள்ளை பள்ளிக்கூடம் போனால் இப்ப மூன்றாம் ஆண்டு படிப்பாள். தங்கச்சியைப் பார்க்கிறதுக்காக அம்மா அவளை மறிச்சுப் போட்டா. தங்கச்சி இப்ப நடந்து திரிவாள். எந்த நேரமும் பெரியவளோடை தான். அவள் பின் வாங்கில் பொடியள் மாதிரி ஒரே குழப்படி.

கொப்பியிலை முன்தாளை கிழிக்க பின்தாளும் விட்டுப்போகுமே, எங்கடை வீட்டிலும் அப்படித்தான். ஒரு ஆளில்லாட்டி இன்னொரு ஆளும் இல்லை. ஏதோ இரைகிற சத்தம், என்னது கெலியோ... நான் எழும்பி, ஓடட்டோ. அம்மாவும் சொன்னவ கெலிச்சத்தம் கேட்டால் ஓடி வந்திடு. வடிவாக உற்றுக் கேட்கிறேன். அது லொறி ஒன்று போகுது. நான் கவனமாக இருக்க வேணும்.

அண்ணை மாதிரி நானும் செத்தால், ஐயோ, அம்மா துடிச்சுப் போவா. அண்ணையும் இந்தப் பள்ளிக்கூடத்திலை தானே செத்தவர். இரண்டாம் தவணை சோதினை நேரம். சோதினை எழுதிக்கொண்டு இருந்தனாங்கள். கெலி எங்கை இருந்து வந்ததோ தெரியாது, பட பட வென்று சுடுற சத்தம். எட்டாம் வகுப்பு மண்டபத்திலை ஐயோ என்றொரு குழறல் சத்தம் ஆரது? பழகின குரல். எல்லாரும் ஓடுகினம். நானும் ஓடிப்போய் பார்க்கிறன். ஒரு பொடியன் குப்புற விழுந்து கிடக்கிறான். அண்ணை, ஐயோ அண்ணைதான். கெலி யாலை சுட்ட குண்டு கூரையை துளைத்து,சோதினை எழுதிக்கொண்டிருந்த என்ர அண்ணையின்ர முதுகையும் துளைத்து... ஐயோ கடவுளே. வெள்ளைச்சேட்டு சிவப்பாக- நீலக் காற்சட்டை நாவல் நிறமாக - இப்பவும் எனக்குத் தண்ணிப்படம் ஒட்டின மாதிரி பளிச்சென்று தெரியுது.

எல்லாரும் ஓடி வருகினம். கணித சேரும் தமிழ்ப்பாடச்சேரும் அண்ணையைத் தூக்கினம். அண்ணையின்ரை முகத்தைத் தடவி அண்ணை... அண்ணை என்று கூப்பிடுகிறன். கண்ணை முழிச்சு அண்ணை என்னைப் பார்க்கிறார். அம்மா... தங்கச்சியவை... அம்மாவின் மூத்த தேவதையின் ஆசை அது. அம்மா வந்தா. அழுது குழறிச் சன்னதம் ஆடினா. தானும் திப்பிலி ஆடி, எங்களையும் திப்பிலி ஆட்டி அந்தப் பள்ளிக் கூடத்தையே ஆட்டி விட்டா. பெற்றார் தின விழாவுக்கு வந்த சனம் மாதிரி ஒருசேனை சனம். அம்மா மாதிரி இன்னும் எத்தனை அம்மாக்கள் இந்தப் பள்ளிக்கூடத்திலை இப்படிச் சன்னதம் ஆடப்போகினமோ தெரியாது. அப்பாவுக்கு கொள்ளி வைச்சது அண்ணை. அண்ணைக்கு கொள்ளி வைச்சது நான். எனக்கு.. யார், நான் சாக மாட்டன். நான் சாகக்கூடாது, என்ரை, அம்மா- பெரியபிள்ளை- தங்கச்சி மூன்று பேரையும் விட்டிட்டு நான் சாகவே மாட்டன. கெலியிலை இருந்து சுட்டால்... எப்படித் தப்புறது, யோசிக்கிறன், அதிபர் சொன்ன மாதிரி கடவுள் காப்பாற்றுவாரோ?

அதிபர் மூன்றாம் தவணை பள்ளிக்கூடம் துவங்கின அன்று கூட்டம் வைச்சுச் சொன்னவர். ''இந்தப் பள்ளிக்கூடம் ஒரு கோயில், இந்தப் பிள்ளைகளெல்லாம் தேவதைகள். இந்த மண்ணிலை நடக்கிற எதுவும் தெரியாத, தெரிய விரும்பாத, தெரிய மாட்டாத தேவதைகள் நீங்கள். உங்களுக்கு பாதுகாப்பு கடவுள்தான். அவர் ஒருவரே உங்களைக் காப்பாற்ற வேண்டும்.'' கடைசிப் பாடத்து மணி அடிக்குது, என்ன பாடம். அட்டவணையைத் திருப்பிப் பார்க்கிறன். தமிழ், தமிழ்தான். தமிழ் புத்தகத்தை எடுக்கிறன். முன்மட்டையும் இல்லை. பின் மட்டையும் இல்லை. எங்களைப் போல, எங்களுக்கும் அப்பா என்ற முன்மட்டை யும் அண்ணை என்ற பின்மட்டையும் இல்லைத் தானே. மிச்சத் தாள்களும் இன்னும் எத்தனை நாளைக்கு.

தமிழ்ப் பாடத்துக்கு சேர் வாறார். சேர் நல்லவர். எனக்குத் தமிழ் பாடமும் விருப்பம். சோதனை யிலை தொண்ணூறு புள்ளிக்கு மேலை எடுப்பன். ''மாலை வணக்கம் சேர்'' எல்லாரும் எழும்பி நிக்கிறம். சேர் இருக்கச் சொல்கிறார். இருக்கிறம். ''பிள்ளைகளே'' சேரின்ரை குரலைக் கேட்கவே எனக்கு ஆசை. ஐஸ்பழக்காரன்ரை மணி அடிச்ச மாதிரி ஒரு தெளிவு. ''நீங்கள் எல்லாரும் சீருடை தைத்து விட்டீர்களா?'' சேர்தான் கேட்கிறார். போச்சு, போச்சு கொப்பியடிச்சுப் பிடிபட்ட மாதிரியாப் போச்சு. முழுசுறன், எல்லாரையும் சுத்திப் பார்க்கிறன். மோகன், சிவா, ரூபன், எல்லாரும் போட்டிருக்கினம். பின் வாங்கில சுப்பிரமணியமும் போட இல்லை. நான்... நானும் போட இல்லை. சேர் கேட்கிறார். ''சுப்பிரமணியம் ஏன் சீருடை போட்டு வர இல்லை'' சேர் அது ரெயிலர் இன்னும் தைச்சு முடிய இல்லையாம். வாற கிழமை போட்டு வருவன் என்று சொல்லிப் போட்டு முதலாம் பிள்ளை ரிப்போர்ட் வாங்கினது மாதிரி எல்லாரையும் ஒரு பார்வை பார்த்தான்.

அடுத்ததா சேர் திரும்பி என்னைப் பார்த்தார். புட்போல் மாட்ச் அம்பயர் மாதிரி. இந்திரன் நீ ஏன் சீருடை போட்டு வரவில்லை. வால் சிக்குப்பட்ட கடுதாசிப்பட்டம் மாதிரி எழும்பவும் மாட்டாமல் இருக்கவும் மாட்டாத ஒரு நிலமை. சமய பாடத்து திரிசங்கு சொர்க்கத் தேவனோ, உலகத்துக் கடவுள்கள் எல்லாரும் ஒரேயடியாக வந்து உதவ மாட்டினமே. அம்மா

→

www.tamilarangam.net



ம்மாதிரி முருகா என்று குழறட்டோ. முருகன். எங்கடை வீட்டு முன் தட்டியிலை தொங்குகிற முருகன் படம். அது படமல்ல. எங்கேயோ கண்டெடுத்த பழைய கலண்டர். ''யாமிருக்கப் பயமேன்'' என்று சொல்லுகிற மாதிரி கையிலே வேலும் இடுப்பில கோவணமுமா அந்த முருகன். எங்களுக்கும் நாங்கள் இருக்கிற சூழலுக்கும் பொருத்தமான முருகன் படம். சேர் பிறகும் கேட்கிறார். ''இந்திரன் வாற கிழமை நீயும் போட்டு வருவியா?'' சுப்பிரமணியம் திரும்பி என்னைப் பார்க்கிறான். தான் சொன்ன விடையை என்னையும் கொப்பியடியடா என்ற பார்வை. எனக்கு ஒரு மாதிரி இருக்கு.

சேர் கைகாட்டுகிறார். கிட்டவரட்டாம். வாங்காலை எழும்புறன், கை வாங்கிலும் ஒட்டிக் கொண்டு வருகுதே இல்லை. என்னை ஒரு மாதிரிப் பாக்கினம். நேரம் பார்க்க நிழலை அடி அளப்பினமே! அப்படி அடியளந்து கொண்டு சேருக்குக் கிட்டப் போறன். தெரிந்த விடையை சொல்லத் தெரியாத மாணவன் நான். ''சேர் என்னட்டை சீருடைத் துணி இல்லை. நான் கொண்டு போக இல்லை'' சொன்னன். உரேக்கா உரேக்கா எண்டு அந்த விஞ்ஞானி மாதிரி சேர் எழும்பி ஓட இல்லை. ஆனால் கண்டு பிடிச்சிட்டார்.

''ஓ என்னுடைய மேசையிலை சீருடைத் துணியை மறந்து போய் விட்டுட்டு போனது நீயா?'' கேட்டார். வேறை யார்? நான் தான். நானே தான். அதிபர் சொன்ன தேவதைகளில் ஒன்று அம்மாவின் மூத்த தேவதை.

மறக்கவில்லை சேர், எனக்கு மறதி என்று இல்லை சேர். எனக்கு ஞாபகம். ஞாபகம் கூட, அதுதான் சேர் எனக்குப் பிரச்சினை.

அப்ப வேணுமென்று தான் விட்டுட்டு போனியா? இலாச்சியை இழுத்து சீருடைத் துணியை எடுத்து மேசையில் வைத்தார். நான் போட்டிருந்த உடுப்பைப் பார்க்கிறார். பிறகு சீருடைத் துணியையும் மாறி மாறிப் பார்க்கிறார். அவருக்கு கண் சிவக்கேல்லை. மீசை துடிக்கேல்லை. கோபம் வரவில்லை. எனக்குக் காய்ச்சல் குறைகிற மாதிரி பயம் குறையிறதும் தெரியுது. ''இந்திரன் இது அரசாங்கம் குடுக்கிற துணி. அதுவும் ஜனாதிபதி இலவசமாகத் தாறார். எல்லாரும் தைச்சுப் போட்டிருக்கினம். ஏன் நீ மட்டும் வேண்டாமெண்டுட்டாய்?'' சேர்தான், எனக்கு விடை தெரியும். எப்படிச் சொல்லுறது. செய்கை வழியே பிழை, விடை மட்டும் சரியா வருமோ. விளாங்காய் திண்டிட்டு தண்ணி குடிக்காட்டி தொண்டைக்கை விக்குமே. அப்படி ஒரு தவிப்பு. ஒரு மாதிரி சமாளிச்சுக் கொண்டு அவருக்குச் சொல்லுறன் ''சேர் சீருடைத்துணி இது வேண்டாம். எனக்கு இங்கிலீசுப் படத்திலை போடுவினம் சேர் மினுமினுப்பா அலுமினிய நிறத்திலை சுட்டாலும் குண்டு துளைக்காத துணி அதிலை இரண்டு யார் துணி வாங்கித் தரச்சொல்லி அந்த ஜனாதிபதிக்கு எழுதுங்கோ சேர். அப்படித்துணி எண்டால் தைச்சுப் போட்டு வருவன் சேர்''.


சேருக்கு ஒரு மாதிரியாய்ப் போச்சு அவற்றை மீசை துடிக்குது. கண்கள் சிவக்கிறதும், தெரியுது. ஒருமாதிரி முகம் வித்தியாசமா, ஆ.. சேர் அழுவார் போலை முகம் தெரியுது. தலையைக் கவிண்டு கொண்டு மேசையிலை தெரியிற சூரிய வட்ட வெளிச்சத்தையே உற்றுப் பார்க்கிறார். பிறகு தலையை நிமிர்த்தி வெளிச்சம் வந்த துவாரத்தை கூரையிலை தேடுகிறார். ஒன்றல்ல, பல துவாரங்கள். எல்லாம் எல்லாமே குண்டுச்சன்னம் வந்த அல்லது வரப்போகிற துவாரங்களாக அவருக்கும் தெரியுது போல. திரும்பி வகுப்பில இருக்கிற - அவர் அடிக்கடி சொல்லுகிற தேவதைகளை - வீடியோ படக் கமரா மாதிரி ஒவ்வொன்றா பார்க்கிறார். என்னைப்போல ஒரு ஏக்கம் அந்த முகங்களிலும் தெரியுதோ? சேர் திரும்பி வெள்ளைத் துணியையும் நீலத்துணியையும் கண் வெட்டாமல் பார்க்கிறார். வெள்ளைத்துணி சிவப்பா, நீலத்துணி நாவலாக அவருக்கும் தெரியுதோ என்னைப்போல. பிறகு இது பற்றி ஒண்டுமே கதைக்கேல்லை.

O

*பிரான்ஸிலிருந்து சிறுகதைக்காகவே வெளியாகும் 'அம்மா'வின் மூன்றாவது இதழிலிருந்து இக்கதையை நன்றியுடன் பிரசுரிக்கிறோம். 'கதலி' இரண்டாவது இதழில் வெளியாகியிருந்த இக் கதையை அம்மா கதையின் சிறப்புக் கருதி மறுபிரசுரம் செய்திருந்தது.*

# தலித்தியக் குறிப்புகள்

## அடையாளங்களை தற்கொலை செய்தல்-2



சென்ற குறிப்பில் "அடையாளங்களைத் தற்கொலை செய்தல்" பற்றிய சிலவற்றை தொகுத்திருந்தேன். இம்முறை அதன் மேலதிக தொடர்ச்சிகளை நோக்குவோம்.

தமது அடையாளங்களே தம்மை இன்ன சாதியாக இனங்காட்டுகிறதென்றும், இன்ன சாதி என்பதாலேயே இத்தனை இழிவுகளும், அவலங்களும் என்பதே அடையாளங்களைத் துறக்கக் காரணமாகின்றன.

செறிவாக வாழும் குடியிருப்புகளிலிருந்து தனிமைப்படல் அதன் ஒரு அம்சம். மேலும் மேநிலையாக்க அந்தஸ்து பெற்றதும் தம்மை ஒளித்து வேற்று சமூகமாக இனங்காட்டிக் கொண்டு புற மணங்களை (கலப்பு மணம்) புரிவது, உறவினர்களுடனான உறவை மட்டுமன்றி காலாகாலமாக அவர்கள் பேசிவந்த தெலுங்கு மொழியைக் களைவது என இந்தப் போக்கு நீள்கிறது.

இது தவிர மதமாற்றம் ஒரு முக்கிய அம்சமாகவும் காணமுடிகிறது. அருந்ததியர்கள் வாழும் சில குடியிருப்புகளில் இதன் பாதிப்பை அதிகமாகக் காணமுடிகிறது. குறிப்பாக "பைபிள்" மதத்தவர்களின் பிரச்சாரங்களால் இப்படியான குடியிருப்புகளில் கூடியளவில் ஈர்க்கப்பட்டு, இழுபட்டுச் செல்கின்றனர். சில குடியிருப்புகளில் சிறு தெய்வ வழிபாடுகள் மங்கி அந்த இடத்தை சேர்ச்சுகள் சின்ன குடில்களில் ஆக்கிரமித்துள்ளன.

தலித்துகள் அனைத்து ஒடுக்குமுறைகளிலும்

| | தமிழ் | தலித் | பெண் | வர்க்கம் |
|---|---|---|---|---|
| தமிழ் | | X | | |
| தலித் | X | X | X | X |
| பெண் | | X | | |
| வர்க்கம் | | X | | |

இலங்கை மட்டுமல்ல மூன்றாம் உலக நாடுகளில் பொதுவாகவே இந்த "பைபிள் சபை"கள் விளிம்பு நிலை மக்களை ஈர்ப்பதில் வெற்றி கண்டுள்ளதைக் காணலாம். இந்த விளிம்பு நிலைப் பண்புகள் உள்ள இடங்களே தமது பிரச்சாரத் துக்கும், தமது மதத்தில் ஈடுபாடு கொள்ளச் செய்வதற்கும் தேர்ந்த இடம் என்பதையும் இவ்வாறான மதச் சக்திகள் விளங்கிக் கொண்டுள்ளன.

பிற்போக்கு சக்திகள் இனங்கண்ட அளவுக்கு (தங்கள் தேவைகளுக்காக இருந்தாலும்) கூட இதுவரை அந்த "விளிம்பு நிலை மக்களை" புரட்சிக்கு பொருத்தமான மக்களாக புரட்சிகர சக்திகள் இனங் காணவில்லை.

இந்த மதச் சக்திகளைப் பார்த்து "எங்களை மனுசர்களாகவாவது மதிக்கிறார்களே" என்று சிலர் சொல்வதை கவனமாக நோக்க வேண்டியுள்ளது. தமது சாதி மூகத்துக்கு வெளியில் புதிய நெருங்கிய தொடர்புகளைப் பெறுகிறார்கள். அவர்களின் அணுகு முறைகளால் புளகாங்கிதம் அடைந்து விடுகிறார்கள். அங்கு பின்பற்றப்படும் ஒருவித "நாகரிக"த்தால் ஈர்க்கப்படுகிறார்கள். சில சபைகளில் "அந்த சபைகளைச் சேர்ந்தவர்களை மணமுடிப்பவரே ஒரு இரட்சிக்கப்பட்ட கிறிஸ்தவராவார்" என்பதை விதியாகவே வைத்துள்ளனர். இது சாதிக்கு வெளியில் மணமுடிக்கச் செய்கிறது.

முறையான புரட்சிகர வழிநடத்தல்கள் அங்கு அற்றிருந்ததால் இவ்வாறான இன்னொரு எதிர் மறையான நிலைக்கு கொண்டு போய்விடப்படுகின்றனர். கொழும்பு ராஜகிரியவில் உள்ள வேலுப் பிள்ளை தோட்டம் (சக்கிலியத் தோட்டம் என்றும் இதனை அழைப்பர்) இதற்குச் சிறந்த உதாரணம்.

சில இடங்களிலோ சிறு தெய்வ வழிபாடுகளுக் கூடாக (முனியான்டி சாமி, மதுரைவீரன், சுடலை மாடன்...) தமது அடையாளங்கள் வெளித்தெரிவதாகக் கருதி (1) அவ்விடங்களில் உயர்சாதியினர் வணங்கி வந்த இந்துக் கடவுள்களின் விக்கிரகங் களை வணங்கத் தொடங்கியுள்ளனர். தமது குல தெய்வங்களாக (சுவாரஷ்யமான விடயம் என்ன வென்றால், இவ்வாறு அசைவ தெய்வங்களின் மத்தியில் சைவ விக்கிரகங்களை வைத்து விடுவதால், எந்தத் தெய்வத்துக்கு எதனை விட்டு கொடுப்பது என்ற பிரச்சினை எழுகிறது.. அந்த இடத்தில் சைவ கடவுளுக்கே விட்டுக்கொடுக்கின்றனர். அத்தனை நாள் வழிபட்டுவந்த அசைவ தெய்வங்களை "பட்டினி" போட்டு விடலாம் என தீர்மானித்து விடுகின்றனர்) (2) வேறு சிலர் தூய சைவர்களாக ஆவதில் பிரயத்தனம் புரிகின்றனர். விரதங்களை முறையாகப் பின்பற்றுவது, தூய்மை, துடக்கு என்பனவற்றில் தீவிரம் காட்டுதல் என்பனவும் அடங்கும்.

இதனைத் தவிர சில இடங்களில் தங்களை சிங்களவர்களாக மாற்றிக்கொள்ளும் முயற்சிகளும் இடம் பெறுவதைக் காண முடிகிறது. அதற்குப் பல காரணங்கள் உண்டு. தமிழ் சமூகத்திலிருந்து ஒரு வித அந்நியப்(படுத்தப்)பட்ட தன்மையும் கணிசமான அளவு இதற்குக் காரணமாக உள்ளது.

ஒன்றிலிருந்து இன்னொன்றாக மாறக்கூடிய சில சக்திகள்




அனுராதபுரம், பொலன்னறுவை மற்றும் தெற்கு மாவட்டங்களான மாத்தறை,காலி, ஹம்பாந்தோட்டை பகுதிகளில் இப்படியாகப் பலர் சிங்களவர்களாக தங்களை அடையாளங்காட்டும் போக்குகள் நிகழ்ந்துள்ளன - நிகழ்ந்து வருகின்றன. வீட்டில் கதைப்பது சிங்களத்தில். பிள்ளைகளை சிங்களப் பாடசாலைகளிலேயே சேர்த்துப் படிப்பித்தல் என இது தொடர்கிறது.

அண்மையில் கொழும்பில் பஞ்சிகாவத்தையில் குடியிருப்பிலிருந்து விலகி வாழும் தங்கவேல் என்பவரைச் சந்தித்து உரையாடினேன். அவர் சாதிய ஒடுக்குமுறைகளினால் அடிபட்டு நொந்து போனவர். தனது இரு பிள்ளைகளையும் (ஆண், பெண்) சிங்களப் பாடசாலைக்கே அனுப்பி வருகின்றார். சிங்கள மொழி டியுசனுக்கே அனுப்புகிறார். இத்தனையும் போதாத தற்கு அருகிலுள்ள பௌத்த விகாரைக்கு "தஹம் பாசல்" (பௌத்த அறநெறிப் பாடசாலை)க்கு அனுப்பி படிக்க வைக்கிறார். பிள்ளைகளுக்கு தமிழில் பேச இயலாது என்பதைப் பெருமையாகக் கூறி வருகிறார். ஏன் தாய்மொழிக் கல்வியை கற்க இடமளிக்கவில்லை" என்று கேட்ட போது "காலம் அப்படி" என்கிறார்.

தமிழ்ச் சமூகத்தின் இந்த சாதிய உள் முரண்பாடுகளே இதற்கு பொறுப்பாகவுமுள்ளது. "தமிழர்களே எங்களை தமிழர்களாக ஏற்றுக் கொள்ளாத போது..." எனும் குரலை நாம் இங்கு கவனமாக நோக்க வேண்டும்.

ஒருபுறம் தமிழ்ச் சமூகத்தில் இம்மக்களுக்கு உள்ள இடம் இப்படியிருக்கும் போது, தமிழ் மக்கள் பொதுவாக எதிர்நோக்கும் அத்தனை அவலங் களை யும் இவர்கள் எதிர் நோக்குகிறார்கள். கைது, கடத்தல், சித்திரவதை மற்றும் இன்னோரன்ன ஒடுக்குமுறைகளையும் இவர்கள் எதிர் நோக்குகிறார்கள்.

"அடையாளங்களைத் தற்கொலை செய்வதில்" காணப்படுகின்ற பல்வேறு போக்குகளையும் ஒடுக்கப்படுவோரின் நிலையில் இருந்து அலசுவதும், தீர்வு காண்பதும் மிக முக்கியமானது.

ஏனைய சமூக சக்திகளுக்கும் தலித்துகளுக்கும் ஒடுக்குமுறையில் உள்ள வேறுபாடு என்னவென்றால்,


விளிம்பு வர்க்கத்தினரெல்லோரும் தலித்துகள் இல்லை. பெண்களெல்லோரும் தலித்துகள் இல்லை. தமிழர்கள் எல்லோரும் தலித்துகள் இல்லை. ஆனால் இந்த அத்தனை பண்புகளையும் இவர்களுக்கு உள்ளமையால் அந்த அத்தனை அடக்குமுறைகளும் தலித்துகளுக்கு உண்டு.

* * *

தங்களை மாக்ஸிஸ்டுகள் எனச் சொல்லிக் கொள்ளும் சில வரட்டுவாதிகள் "தலித்தியம்" இன்று பேசுபொருளாகியிருப்பதை சகிக்க முடியாமல் முணுமுணுத்துத் திரிவதைக் காண முடிகிறது. இவர்களில் சிலர் இக்குறிப்புகளை அரைவேக் காட்டுக் குறிப்புகள் என்றும் சொல்லி வருகின்ற னர். வரலாறும் சமூகப் போக்குகளும் தமது கைப்பிடிக்குள்ளேயே இருப்பதாக கனவு காணும் இந்த வரட்டுவாதிகள், தமது பின்னடைவுகளுக்கு இந்த அணுகுமுறைகள் எவ்வாறு காரணமாயின என்பதை மீள மதிப்பிடக் கூடத் தயாரற்றிருப்பவர் கள் . இப்படியானவர்கள் தலித்தியக் குறிப்பை "அரைவேக்காட்டுத்தனம்" என்பதில் ஆச்சிரியப்பட என்ன இருக்கிறது.

தலித்திய குறிப்புகள் எந்த விதத்திலும்

தனக்குள்ளேயே சுழன்றுகொண்டிருக்கும் சாதியம்



வலதுசாரித்தனத்துக்கோ, எதிர்ப்புரட்சிக்கோ இட்டுச் செல்லாத வகையில் எச்சரிக்கையுடனேயே எழுதப்படுகின்றன. ஆனால் தலித்தியத்தின் தனித்த பண்புகளை இத்தகைய வரட்டுத்தனத்திற்கு பலி கொடுக்கவும் முடியாது என்பதிலும் அதே எச்சரிக்கையுணர்வு எமக்கிருக்க வேண்டும்.

* * *

சென்ற குறிப்புக்கு முந்திய குறிப்பில் ஷோபா எனும் அருந்ததிய மாணவியின் நிலையை உதாரணமாக எடுத்து எழுதப்பட்ட குறிப்பை வாசித்த ஜெர்மனிய வாசகர் ஒருவர் (அவரது அனுமதியின்றி அவரது பெயரை வெளியிடுவதை தவிர்ப்போம்) களுத்துறையைச் சேர்ந்த மாணவி ஷோபாவின் கல்விக்கு உதவி செய்ய முன்வந்துள் ளார். ஷோபாவுக்கும் அவருக்கும் இடையில் இது பற்றிய தொடர்பு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள் ளது. ஷோபாவும் அவரது வறுமையான பெற்றோரும் மிகுந்த மகிழ்ச்சியுற்றனர். ஷோபா தனது கல்விச் செலவை சமாளிக்க களுத்துறை நகரத்திலிருந்து தொலைவிலுள்ள இறப்பர் தோட்டமொன்றில் பகுதிநேர தொழில் புரிய ஆயத்தமாகிக் கொண்டிருந்த வேளையில் இந்த உதவி பேருதவி தான். எனவே அவ்வாசகருக்கு எம்மெல்லோரினதும் நன்றிகளும் உரித்தாகும்.

ஆனால் இப்படி எத்தனை பேருக்கு நம் எத்தனை பேரால் உதவி செய்துவிட முடியும் என்று சிந்தித்துப் பாருங்கள். இந்த உதவிகள் தனிப்பட்ட ஒரு சிலருக்கே நன்மை பயக்கும். அப்படித் தனிப்பட்ட ஒரு சிலருக்கு நன்மை பயப்பதற்குமப்பால் சென்று முழு சமூக மாற்றத்திற்குமான பணிகளை முன்னெடுக்கும் முயற்சிகள் பற்றியவையே இந்தக் குறிப்புகள். இதன் வாசகர்களின் பங்களிப்பும் அதுவாக அமைந்தால் இலக்கை அடைவதற்கு வெகு தூரம் செல்ல வேண்டியிராது.

* * *

தவிர்க்க இயலாமல் தலித்தியக் குறிப்பில் அருந்ததியர்கள் பற்றியே இடம் பெறுகின்றன. அதன் அர்த்தம்-இலங்கையில் குறிப்பாக தமிழ் சமூகத்தில் அருந்ததியர்கள் தான் தலித்துக்கள் என்பதல்ல. நேரடியாக அவர்களின் பிரச்சினைகள் எட்டக் கூடியதாக இருந்ததாலேயே இவை வெளிக் கொண்டு வரப்படுகின்றன. ஏனைய தலித் சமூகத்தினர் பற்றிய குறிப்புகள் பின்னர் இடம்பெறும்.

-அருந்ததியன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





சலாம் பொம்பே, மிஸிஸிப்பி மசாலா போன்ற சிறந்த படங்களைத் தந்த மீரா நாயர் காமசூத்ரா என்ற சர்ச்சை மிகு படத்தைத் தந்திருக்கிறார். இது பற்றி யமுனா ராஜேந்திரன் த்ன் அபிப்பிராயங்களை இங்கே எழு துகிறார். இப்படம் கொழும்பு சவோய் திரையரங்கில் திரையிடப்படவிருக்கிறது.



காமசூத்ராவில் இந்திரா வர்மாவும், ராமன் திகாரமும்.

படம் : ஜீ ஓப்சேவா

மீரா நாயரின் --

# காமசூத்ரா: மதம் அந்நியர்கள் மற்றும் பாலியல் அரசியல்

யமுனா ராஜேந்திரன்

பகுதி -1

**"இந்தியா அந்நிய ஆதிக்கத்தின் கீழ் வீழுவதற்கு முன்பான காலம் குறித்து- பிரிட்டிஷ்காரர்கள் அல்லது மொகலாயர்களின் ஆதிக்கம் - ஒரு திரைப்படத்தை உருவாக்க நீண்ட நாட்களாகவே நான் ஏங்கிக்கொண்டிருந்தேன்.**

**அப்போது ஆன்மீகத் தன்மையும் பாலுறவும் விலகிக் கிடக்கவில்லை. அன்றாட வாழ்க்கையில் எங்கெங்கு நோக்கினும் புலன்நுகர் இன்பம் கலந்து கிடந்தது.**

**இப்படம் பாலுறவில் ஈடுபடும் உடலின் நிலைகள் குறித்தது என்பதை விடவும் பாலியல்பின் அரசியல் குறித்தது என்பதுவே பொருத்தமாக இருக்கும்."**

**-மீரா நாயர்** *in Forbidden Love*

**"பாப்ரவ்யாவின் போதனைகளை பின்பவற்றுபவர்கள் சொல்கிறபடி ஐந்து ஆண்களால் அனுபவிக்கப்பட்ட எந்த ஒரு பெண்ணும் எவராலும் அனுபவிக்கப்படுவதற்கு மிகச் சரியானவள். ஆனால், கனிகபுத்ரா சொல்கிறார்: அப்படியே ஐந்து ஆண்களால் அனுபவிக்கப்பட்ட பெண்ணாக இருந்தாலும் கூட உறவினர் மனைவியர்களையோ, அதிகம் கற்ற பிராமணனின் மனைவியையோ, அரசனது மனைவியையோ இவ்வகையில் அனுபவிக்கக் கூடாது. அவர்கள் விதிவிலக்காகக் கருதப்பட வேண்டும்.**

**-வாத்ஸ்யாயனர்**

*அத்தியாயம் ஐந்து :காமசூத்ரா*

Ed: John Muirhead - Gould

காமசூத்ரா திரைப்படம் மிகப் பெரும் சர்ச்சைகளை இந்தியாவில் ஏற்படுத்தியிருக்கிறது. இறுதித் தீர்ப்பின்படி இந்நிமிடம்வரை காமசூத்ரா இந்தியாவில் திரையிடப்பட முடியாது என தணிக்கைக்குழு அறிவித்திருக்கிறது. அமெரிக்காவில் இந்திய சமூகத்தினரின் விமர்சனங்களையொட்டி சில வெட்டுக்களுடன் திரையிடப்பட்டிருக்கிறது. இங்கிலாந்திலும், ஐரோப்பிய நாடுகளிலும் எந்தவிதமான வெட்டுக்களும் இன்றி திரையிடப்பட்டுள்ளது.

இந்தியாவில் மட்டுமல்ல, ஐரோப்பிய நாடுகளிலிருந்து வெளிவரும் இந்தியப் பத்திரிகைகளும் இப்படம் குறித்து கண்டனங்களை எழுப்பியிருக்கின்றன. இது ஒரு மெலிதான நீலப்படம் என்று குறிப்பிடுகிறார் ஏசியன் டைம்ஸ் பத்திரிகையின் விமர்சகர்.

இந்தப்படத்தில் அப்படியென்ன தான் ஆட்சேபகரமான விசயங்கள் இருக்கின்றன? மீரா நாயரும் சரி அவரை ஆதரித்துக் குரல் கொடுப்பவர்களும் சரி, வீராவேசமான சாதனை என்று ஆர்ப்பரிப்பதற்கு ஏதேனும் நியாயங்கள் இப்படத்தில் இருக்கின்றனவா?

இந்தப்படம் எடுத்துக் கொள்ளும் பிரச்சினைதான் என்ன? பாலுறவுச் சித்திரிப்பில் இப்படத்திலிருந்து ஆக்கபூர்வமாகவே தேர்ந்து கொள்ள ஏதேனும் இருக்கின்றதா? இவ்வாறெல்லாம் கேள்விகளை எழுப்பிக் கொள்ளும் போது நமக்குள் இரண்டு பிரச்சினைகள் குறித்து தெளிவான புரிதல்கள் தேவையாகின்றது.

1. காமசூத்ரா எனும் வாத்ஸ்யாயனரின் நூலின் முக்கியத்துவம் என்ன? அதன் செய்தி என்ன? அந்த நூல் சொல்லும் விசயங்களின் இன்றைய பொருத்தப்பாடு என்ன?

2. காமசூத்ரா எனும் திரைப்படம் தனது சித்திரிப்பில் கையாளும் மையமான பிரச்சினை தான் என்ன?

பாலியல் அரசியலை இந்தியக் கலாசாரக் கண்ணோட்டத்தில் பார்க்கிறது என மீரா நாயர் சொல்கிறாரே அதன் அர்த்தம் தான் என்ன?

அ. இப்படம் காமசூத்ரா எனும் கருத்தியல் நிறுவனத்தை (Ideological Institution) சித்திரிக்கிறது.

ஆ. புலன் நுகர் இன்பம் தரும் சந்தோசத்தை காட்சிரூபமாக சித்திரிக்கிறது. உடல்களின் அழகை அதன் இயல்பில் கொண்டாடுகிறது.

காமசூத்ரா எனும் வாத்ஸ்யாயனரின் நூல் சமஸ்கிருதத்தில் எழுதப்பட்டது. முதலாம் நூற்றாண்டிலிருந்து நான்காம் நூற்றாண்டு வரையிலான கால இடைவெளியில் எப்போதோ எழுதப்பட்டிருக்கிறது. ஐந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்த காளிதாசன் காமசூத்ரா நூல்களிலிருந்து நிறைய மேற்கோள்களைக் கையாள்கிறார். வாத்ஸ்யாயனரின் நூல் அவருக்கு முன்பே இப்பிரச்சினைகள் குறித்து எழுதிய பாவ்ரய்யா, நந்தி, கனிகபுத்ரா போன்றோரது புத்தகங்களின் அடிப்படையில் அமைகிறது.

காமசூத்ரா நூலின் செய்தி நால் வருணங்களின் அடிப்படையிலும் (பிராமணன், சத்ரியன், வைஸ்யன், சூத்ரன்) நான்கு வாழ்க்கைப் படி நிலைகளின் அடிப்படையிலும் (Religious student, House holder, Hermit, Sanyasi) அமைகிறது.

இந்நூலின் தத்துவப் படிநிலையும் நான்கு வகையில் அமைகிறது. (அ) தர்ம, (ஆ)அர்த்த, (இ) காம, (ஈ)மோட்ச நிலைகள்.

தர்மம் ஸ்ருதிகளில் இருந்து (Holy Writ) பெறப்படவேண்டும். அர்த்தம் அரசாங்க அதிகாரிகளிடம் இருந்தும் வியாபாரிகளிடம் இருந்தும் அறியப்பட வேண்டும். காமம், காமஸாஸ்திரா (64 கலைகள்) விலிருந்து பெறப்பட வேண்டும். இந்த மூன்று நிலைகளையும் கடந்தவன் முக்தி அடைவான்.

தர்மம் = அறிவு = பிராமணன். அர்த்தம் = பொருள் = அரசதிகாரிமற்றும வியாபாரி. காமம் = காமஸாஸ்திரம் = மனைவி மற்றும் விலைமகளிர். முக்தி = கடவுள் தன்மை.

காமசூத்ரா நூல் ஏழுபகுதிகளால் ஆனது. காமசூத்ரத்தின் முதல் பகுதி பெண்களின் யோனிகளை மையப்படுத்தி நான்கு வகையாகப் பிரிக்கிறது. பெண்கள் பயில வேண்டிய 64 கலைகளை வகைப் படுத்துகிறது.

இரண்டாம் பகுதி, பாலுறவில் ஈடுபடும் போது பாவிக்க வேண்டிய உறுப்புகளின் நிலைகளை விவரிக்கிறது. தழுவுதல், முத்தமிடுதல், யோனி, லிங்கம் போன்றவற்றின் சங்கம நிலைகள் போன்றவற்றை விவரிக்கிறது.

மூன்றாம் பகுதி மனைவியை எப்படித் தேர்ந்தெடுத்து அடைவது, அதில் கையாளப்பட வேண்டிய தந்திரம் போன்றவற்றைப் பேசுகிறது.

நான்காவது பகுதி மனைவியைக் கையாளும் போது ஏற்படும் பிரச்சினைகள் சிக்கல்கள் பற்றிப் பேசுகிறது. ஒரு ஆணின் பல்வேறு மனைவியர்க்கிடையில் பிரச்சினைகள் எப்படிக் கையாளப்பட வேண்டும் என்று பார்க்கிறது. கணவனின் பாலுறவுப் பிரச்சினைகளைக் கையாள்வது தொடர்பாக மனைவிக்கு ஆலோசனைகள் தருகிறது.

ஐந்தாவது பகுதி, பிறரது மனைவியரை எவ்வாறு தமதாளுமைக்குள் கொண்டுவருவது என ஆண்களுக்கு ஆலோசனை தருகிறது. பெண்களின் மனநிலையறிந்து எவ்வாறு அவர்களை அடித்து வீழ்த்துவது எனக் கற்றுத் தருகிறது.

ஆறாவது பகுதி விலை மகளிருக்கும் அரண்மனைத் தாசிகளுக்கும் இருக்க வேண்டிய சாகசங்கள், மனப்பக்குவங்கள் பற்றி ஆலோசனை தருகிறது.

ஏழாவது பகுதி ஆண்களும், பெண்களும் பரஸ்பரம் கவர்ந்து கொள்வதற்கான வசியக் கலைகள் பற்றிய செயல் முறை விளக்கங்களைத் தருகிறது.

மீரா நாயரின் பார்வையில் காமசூத்ரா தரும் செய்தி தான் என்ன?

காமசூத்ராவின் செய்தி மிகமிக வெளிப்படையானது, நேரடியானது. காதல் இல்லாமலேயே நீங்கள் பாலுறவு கொள்வீர்களானால் அது, பாசாங்குக் கலை (Art of Pretence).

காதலுடன் பாலுறவு கொள்வீர்களானால் அது புனிதத்துவமானது. காமத்தின் மூலம் இகவுலகம் நோக்கிச் செல்வது அது.

இந்திய வாழ்க்கை காமத்தையும் முக்தியையும் இணைத்ததொரு நடைமுறையாக இருந்தது.*

மீரா நாயரின் படம் இந்தச் சூழலில் வரவேண்டிய காரணம் என்ன? யாரின் விமர்சனத்துக்கு எதிர் வினையாக, எவருக்கு பதில் வழங்கும் முகமாக இப்படம் வந்திருக்கிறது? இந்த மேன்மையான இந்திய வாழ்க்கையைக் குலைத்த அந்நியர்கள் யார்?

காமசூத்ரா படம் பதினாறாம் நூற்றாண்டில் நிகழ்வதாக அமைக்கப்படுகிறது. படத்தின் இறுதியில் இரண்டு இந்து மன்னர்களுக்கிடையிலான பகைமையில் ஒருவருக்கு ஆதரவாக நுழையும் இஸ்லாமியப் படைவீரர்கள் முகமூடிய கறுப்புத் துணிகளுடன் ஆரவார முழக்கமிட்டபடி குதிரையின் குளம்படியோசை இடி போல் வெடிக்க ஆதிக்கம் கொள்ள நுழைகிறார்கள். படத்தின் நாயகி வானத்தின் உள் நோக்கி புழுதிமூட்டத்தில் நடந்து போகிறாள்.

காமமும் தெய்வீகத்தன்மையும் கலந்து கிடந்த இந்திய வாழ்க்கை முறையில் நுழைந்து பாலுறவு குறித்து பிரம்மைகளை விதைத்தவர்கள் யார்? புலன் நுகர்வு இன்பம் குறித்து பொய்யான ஒழுக்கங்களை விதைத்தவர்கள் யார்? இந்தியர்கள் (இந்துக்கள்) பாலுறவு சாகசங்கள் புரியாதவர்களா? ஆண் பெண்ணுக்கிடையிலான இயல்பான உறவில் விகாரங்களைக் கொண்டு வந்தவர்கள் யார்? ஆண் பெண் பாலுறவை மூடுண்ட குகைக்குள் அடைத்த வைதீகர்கள் எவர்?

இக்கேள்விகளை இரண்டு விதமானவர்களிடம் கேட்கிறார் மீரா நாயர்!

(i) இந்தியாவில் பாலுறவு இன்பம் குறித்து இரட்டை மதிப்பீடுகள் கொண்டிருக்கும் 'ஐரோப்பிய சிந்தனை கொண்ட இந்தியர்களை நோக்கி இக்கேள்விகளைக் கேட்கிறார்.

அ) தணிக்கை அதிகாரிகளை நோக்கி.

ஆ) மதகோஷத்தின் கீழ் திரண்டிருக்கும் அரசியல்வாதிகளை நோக்கி இக்கேள்விகளை முன் வைக்கிறார் மீரா நாயர்.

(ii) இந்தியர்கள் பாலுறவு இன்பம் குறித்து போலியான மதிப்பீடுகள் கொண்டவர்கள் என விமர்சிக்கும் அமெரிக்க/ ஐரோப்பியர்களை நோக்கி - எங்கள் கலாசாரம் எவ்வாறு இருந்தது தெரியுமா? பாலுறவு இன்பம் குறித்து எவ்வளவு வெளிப்படையாக இருந்தோம் தெரியுமா?

இதோ பாருங்கள் எங்கள் கடந்த காலம்; பார்த்து விட்டுச் சொல்லுங்கள், எங்கள் பாலுறவு அணுகுமுறைகள் எவ்வாறாய் இருந்தது

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



என்பது பற்றி, என்கிறார் மீரா நாயர்.

ஒரு காலத்தில் பாலுறவு இன்பம் குறித்து வெளிப்படையாக இருந்த எங்களைப் போலி ஒழுக்கங்களுக்கு இட்டுச் சென்றவர்கள் யார், எவரது பாலுறவு மதிப்பீடுகள் எங்களை மாற்றி விட்டது என்று கேள்வி எழுப்பிக் கொண்ட மீரா பதிலாகச் சொல்கிறவை இவைதான்:

அ. மொகலாயப் படையெடுப்பு -இஸ்லாமியர்களின் கலாசாரம் எமது பாலுறவு மதிப்பீடுகளில் பாதிப்புச் செலுத்தியது.

ஆ. பிரிட்டிஷாரின் படையெடுப்பு - பிரிட்டிஷ்காரர்களின் ஜூடோ - கிறிஸ்ரியன் பாலுறவு மதிப்பீடுகள் -எமது பாலுறவு நடவடிக்கைகளில் பாதிப்புச் செலுத்தியது.

இவ்வகையில் மீரா நாயரின் பாலியல் அரசியல் (Sexual Politics) என்பது இதுதான்:

1. ஒரு காலத்தில் பாலுறவு இன்பம் குறித்து மிகவெளிப்படையாக நாங்கள் இருந்தோம். ஐரோப்பியர்களாகிய நீங்கள் போலிகளாக, பொய்யான ஒழுக்கம் கொண்டவர்களாக, முக்தியிலின்று பாலுறவு இன்பத்தை விலக்கியவர்களாக இருந்தீர்கள். ஆனால் இப்போது. நீங்கள் எங்களைப் பார்த்து கேள்வி கேட்கிறீர்கள். இது அறிவற்ற நிலைபாடு.

2. பாலுறவு இன்பம் குறித்து இரட்டை வேடம் போடும் இந்தியர்களே, நீங்கள் ஐரோப்பிய இஸ்லாமிய பெண்ணடிமை அறிவீனங்களால் பாதிக்கப்பட்டு விட்டீர்கள். எமது கடந்த காலத்திற்கு நீங்கள் திரும்பிப் போங்கள் (Back to the roots). அந்நியர்களின் அறவியல் மதிப்பீடுகளிலிருந்து விடுபடுங்கள்.

கலாசாரங்கள் குறித்ததும், பாலுறவு குறித்ததுமான மீரா நாயரின் புரிதல் சனாதனச் சட்டகங்களைத் தாண்டி வரமுடியவில்லை. மதம் + கலாசாரம் போன்றவற்றின் அடிப்படையில் இஸ்லாமிய/கிறிஸ்தவ பாலுறவு அறங்களை விமர்சிக்கும் அவர், இந்து மதம் இந்திய வாழ்க்கை முறையென்று வரும் போது தனக்குள்ளேயே பெருமிதப்பட்டுக்கொள்கிறார். தமது மதம் கலாசாரம் குறித்து இந்தப் பெருமைப்படும் மனம், தனது மதம்/ வாழ்வு குறித்த விமர்சனத்தைத் தவிர்த்து விடுகிறது.

காமசூத்ரா எனும் கருத்தியல் நிறுவனத்தின் படுகேவலமான ஆணாதிக்க நிலைப்பாட்டையும், பாலியல் அடிமைகளாக அரண்மனைத் தாசிகளையும், தேவதாசிகளையும் நிரந்தரப்படுத்தியதையும் மீரா நாயர் கண்டு கொள்ளவில்லை.

காமசூத்ரா எனும் கருத்தியல் நிறுவனத்தின் குரூரம் பற்றிய புரிதலின்மையும் விமர்சனமின்மையும் படத்தின் கதையமைப்பிலும் நிலவுகிறது காட்சியமைப்பிலும் இருக்கிறது.

காதலில் ஈடுபடும் உடல்களின் கவிதைத்தன்மை வாய்ந்த உடலுறவின் சந்தோசத்தைப் படைப்பாக்க முடிந்த மீராநாயருக்கு, அரண்மனைத் தாசியின் சோகத்தின் ஆழத்தையோ, மன்னனின் காமசேட்டை வக்கிரங்கள் மீதான விமர்சனத்தையோ எமக்குள் கொண்டு தரமுடியவில்லை.

* in Forbidden love and kama chameleon

*(பகுதி இரண்டு அடுத்த இதழில்)*



# உணர்வுகளை வெளிப்படுத்த நாகரீக வார்த்தைகள் தேவையில்லை!

123வது சரிநிகரில் வெளிவந்த கலாவின் ''கோணேஸ்வரிகளை''த் தொடர்ந்து இதழ் 126இல் வெளிவந்த விமர்சனங்களை வாசித்த போது, வேடிக்கையாகவும், எரிச்சலாகவும் இருந்தது.

அந்தக் கவிதையை வாசித்தபோது ஆழ்ந்த அருவருப்பு உணர்ச்சி ஏற்பட்டதென்றும், ஒரு தூஷணத்தை வாசித்தது போலிருந்ததென்றும், உபயோகிக்கும் மொழியில் ஒரு நாகரீகப் பண்பு இருக்க வேண்டுமென்றும், யோனி, நிர்வாணப் படுத்தல் போன்ற வார்த்தைப் பிரயோகங்கள் பெண்களை இழிவுபடுத்தியிருக்கின்றன எனவும் சில வாசகிகள் கோபப்பட்டிருந்தனர்.

கோணேஸ்வரி என்ற பெண்ணிற்கு நிகழ்ந்த கொடூரமான உண்மைச் சம்பவத்தை எழுத்தில் வடிப்பதற்காக கலா, யோனி, நிர்வாணப்படுத்தல் போன்ற சொற்களைத் தவிர்த்திருந்தால், செயற்கையான கவிதையொன்றைத் தான் அவரால் எழுதியிருக்க முடியும். உணர்வுகளை வெளிப்படுத்த நாகரீக வார்த்தைகளைத் தேடிப் போகத் தேவையில்லை.

''சமாதானத்திற்காகப் போராடுகிறோம்'' என்பவர்கள் சகபிரஜையுடன் நாகரீகமற்ற முறையில் நடந்து கொள்ளும் போது, அதை விபரிக்க மட்டும் நாகரீகப் பண்பை கையாள வேண்டும் என ஏன் நாம் எதிர்பார்க்க வேண்டும்?

கலாவின் கவிதையில் யோனி, நிர்வாணப்படுத்தல் போன்ற சொற்பிரயோகத்திற்கும், சில கவிஞர்களின் கவிதைகளில் பெண்ணை விபரிக்க யோனிகள் பற்றியும் முலைகள் பற்றியும் வலிந்து எழுதுவதற்கும் நிறைய வித்தியாசமுள்ளது.

*''உடைகளைக் கழற்றி*
*உங்களை*
*நிர்வாணப்படுத்திக்கொள்ளுங்கள்*
*என் அம்மா வே உன்னையும் தான்''*

என்ற வரிகள் இலங்கையில் வயது வித்தியாசமின்றி பெண்களிற்கு நிகழும், எதிர்காலத்தில் நிகழக்கூடிய சம்பவங்களை எதிர்மறை அர்த்தத்துடன் எழுதப்பட்டிருக்கிறது.

*''சமாதானத்திற்காகப் போரிடும்*
*புத்தரின் வழிவந்தவர்களுக்காய்...''*

என்பதற்கான நட்சத்திரன் செவ்விந்தியனின் விளக்கத்துடன் நான் உடன்படுகிறேன்.

*''சிங்களச் சகோதரிகளே!*
*உங்கள் யோனிகளுக்கு*
*இப்போது வேலையில்லை...''*

எனும் வரிகளை நோக்குகையில் இராணுவ ஒடுக்கு முறையின் போது சிதறப்படும் மன்னம்பெரிகள் போன்ற பெண்களின் ஞாபகம் தான் வருகிறது.

இக்கவிதையை வாசித்தபோது ஏற்பட்ட ஆத்திரமும், அருவருப்பு உணர்ச்சியும் கோணேஸ்வரியின் சம்பவத்தைக் கேள்விப்பட்டவுடன் இவ்விமர்சகர்களுக்கு ஏற்பட்டதா என்பது தெரியவில்லை.

இச்சம்பவம் கலாவிற்கு ஏற்படுத்திய பாதிப்பை இவ்விமர்சகர்களுக்கு ஏற்படுத்தியிருந்தால், இக்கவிதையை வெறும் சொற்களை மட்டும் வைத்து மதிப்பிட்டிருக்க மாட்டார்கள்.

பெண்கள் 'நாகரீகமாக' நடந்து கொள்ள வேண்டும், பாலியல் சம்பந்தமாக கதைத்தல் தவிர்க்கப்படல் போன்ற தமிழ்ச் சமூக விதிகளுக்கெதிராகப் போராட வேண்டிய பெண்நிலைவாதிகளே இத்தகைய விமர்சனங்களை வைப்பது கவலைக்குரியதாகும்.

இதழ் - 129இல் சரிநிகரில் வெளிவந்த ''அமைதியின் மன்னம்பெரிகள்'' என்ற கவிதை அரசின் அட்டூழியங்களை நன்கு சித்திரிக்கின்றது. ஆனால் சந்திரிகாவினதும், சிறிமாவினதும் ஆட்சிகளின் கொடுமைகளை விமர்சிக்க ''விதவை அரசி... விரைவில் விதவை அரசிகளைத் துரத்தும்... முன்பொரு விதவையின் வெற்றிக் கொடி...'' எனும் சொற்பதங்களைத் தவிர்த்திருக்கலாம்.

விதவை எனும் சொற்பிரயோகம் பெண்களை கீழ்மைப்படுத்த, அதாவது கணவனை இழந்தவள், மதிப் பற்றவள் என்பதையே குறிக்கின்றது.

அவ்விருவரின் அரசியலை விமர்சிக்கையில் பெண்களை இழிவு படுத்தக் கூடிய சொற்களை ஏன் உபயோகிக்க வேண்டும்?

மாறாக, மனைவியை இழந்த ஆணாக விருந்தால் இதுபோன்ற சொற்பதங்களை உபயோகித்திருப்பார்களா என்பதைச் சிந்தித்துப் பார்த்தல் நல்லது.

**உமா**
**ஜேர்மனி**

# பாய் விரித்தது என்பதே இழிவு!

கோணேஸ்வரிகள் கவிதை பலரிடையே சர்ச்சைக்குரிய விவாதங்களைக் கிளப்பியுள்ளது. குறிப்பாக செல்வி திருச்சந்திரன், இது இனவாதக் கவிதையாகவும், பெண்களை இழிவு படுத்தும் கவிதையாகவும் சித்திரிக்கிறார். இது போலவே சன்மார்க்கா, பாத்திமா, வானவர்க்கோன் போன்றோர்களால் பெண்களை இழிவுபடுத்தும் கவிதையெனக் கூறப்பட்டுள்ளது.

இவர்கள் அனைவரும் கூறும் தூய்மை, பண்பு, நாகரீகம் எல்லாமே கற்பிதங்கள். மேற்கூறியவர்கள் இக் கற்பிதங்களை தன்வயப்படுத்திய தனாலேயோ என்னவோ இந்தக் குழப்பங்கள் என நினைக்கிறேன்.

மற்றும் சிங்கள இராணுவம் தமிழ்ப் பெண்களை பாலியற் பலாத்காரம் செய்வதை எடுத்துக் கூறும் போது அது எப்படி இனவாதமாகும். இங்கு தனிப்பெண்கள் மீதான பாலியற் பலாத்காரம் நடைபெறவில்லை. தமிழ்ப்பெண்கள் மீதான பாலியற் பலாத்காரம் தான் நிறைய நடைபெறுகிறது. இதன் எதிர்க்குரல் தான் கலாவின் கவிதை.

அத்துடன் சிங்களச் சகோதரிகள் இந்த இராணுவ வெறியர்களிடமிருந்து தற்போதைக்குத் தப்பியுள்ளனர் 'என்' பதை கலா எடுத்துக்காட்டுவதாகவே நான் கருதுகிறேன்.

இக்கவிதையில் இனவாதமோ, தூசண வார்த்தைகளோ இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

வீரமுனை வானவர்க்கோன் சரிநிகர் ஏன் இக்கவிதைக்கு ''பாய்விரித்தது'' என்று கூறுவதுதான் பெண்களை இழிவுபடுத்துவதாக உள்ளது.

**றஞ்சினி பிராங்பேர்ட்**

# கலா கொடுத்த அதிர்ச்சியும் தாங்க முடியாத விமர்சகர்களும்

ஜூன் 5-18ல் வெளிவந்த கோணேஸ்வரிகள் கவிதை பாதித்த மொழியின் வீச்சம் அந் நிகழ்ச்சியின் கொடூரத்தை முன் கொண்டு வருகிறது. சரிநிகர் 126இல் வெட்கித் தலைகுனியுங்கள், எல்லாப் பெண்களையும் நிர்வாணமாக்குகிறது, இரண்டாவது தடவையும் பாலியல் வல்லுறவு, ஆபாசமொழி என்ற தலைப்பின் கீழ் வந்த விமர்சனங்கள் அதுவும் குறிப்பாக பெண்களிடமிருந்து வந்தது எதிர்பார்க்காத ஒன்று எனலாம். இக்கொடூரமான நிகழ்ச்சியை கவிதையாக வடித்த கலா கவிதையில் கையாண்ட மொழி மூலம் வாசகரை அதிர்ச்சிக்குள்ளாக்கியிருக்கிறார் என்பதையே இவ்வகையான விமர்சனங்கள் காட்டுகின்றன. இது கலாவின் கவிதைக்கு கிடைத்த வெற்றி தான். இந்தக் கவிதையை கொச்சைப்படுத்துவதுதான் உண்மையில் எரிச்சல் அடையச் செய்கிறது. அந்தப் பெண்ணை பாலியல் பலாத்காரம் செய்த பிறகு அவளின் யோனிக்குள் கிரனைட்டை வைத்த காட்டு மிராண்டிகளின் அரக்கத்தனமான இந்தச் செயலை எந்தப் பெண்ணுமே மன்னிக்க முடியாது. அப்படியான ஒரு கொடூரமான சம்பவத்தை கலா தெட்டத் தெளிவாக அவரது கவிதையில் வடித்துள்ளார்.

இந்தக் கவிதையில் பாவிக்கப்பட்ட சொற்கள் ஆழ்ந்த அருவருப்பைத் தந்தது என்றும் தமிழிச்சிகளே, சிங்களச் சகோதரிகளே என்பதும் இனவாதத்தை தூண்டுவனவாக இருக்கிறதென்றும் விமர்சிக்கப் பட்டிருக்கிறது. இதில் என்ன இனவாதத்தைக் கண்டு கொண்டார்கள்? அன்றிலிருந்து இன்று வரை. தமிழன், சிங்களவன் என்ற ஆண்நிலைச் சொற்கள், இன அடையாளப்படுத்தல் சொற்களாக பாவிக்கப்பட்டு வருகிறது. ஆனால் தமிழிச்சிகளே, சிங்களச் சகோதரிகளே என (பெண்நிலைச் சொற்கள்) பாவிக்கப்பட்டதும் இனவாதத்தைத் தூண்டும் சொற்கள் எனக் கூறுவதும் எந்த வகையில் நியாயமானது. அதுவும் பெண்களே விமர்சனமாக முன்வைத்திருந்தது வினோதமாக உள்ளது. யோனி, நிர்வாணம் என்ற சொற்கள் பாடசாலை (உயிரியல்) பாடங்களிலிருந்து செய்தித்தாள்கள் வரை சாதாரணமாக இடம் பெறுவது ஒன்றும் புதினமானதல்ல. உண்மையில் கவிதையின் மொழி ஏற்படுத்திய அதிர்ச்சியை தாங்க மாட்டாமல் கவிதையின் சொற்கள் மீது பழிபோட்டிருப்பது போல் விமர்சனங்கள் அமைந்துள்ளன.

கலா தனது கவிதை மூலமாக கோணேஸவரிக்கு நேர்ந்த கொடூரத்தை பொருத்தமான சொல்லாடல்களின் மூலம் வடித்துள்ளார். இன்னும் பல கோணேஸ்வரிகள் எமது நாட்டில் உருவாக்கப்பட்டுக்கொண்டேயிருப்பார்கள். அவர்களுக்காக கலாவுடன் சேர்ந்து நாமும் குரல்கொடுப்போம்.

**றஞ்சி**
**சுவிஸ்**

# உள்ளங்கை நெல்லிக்கனி

கோணேஸ்வரிகள்...! என்ற கவிதையில் குறைந்த பட்ச மனிதாபிமானம் கூட காட்டப்படாமல் ஒரு பெண்ணுக்கு இழைக்கப்பட்ட கொடுமையை உள்ளங்கை நெல்லிக்கனியாக தெட்டத் தெளிவாக எடுத்துரைத்திருந்த விதம் என் உணர்வுகளை ஆக்கிரமித்து விட்டது. ஒரு கவிதையால் எவ்வளவு செய்ய முடியுமோ, அத்தனையையும் 'கோணேஸ்வரிகள்..!' உருவகப்படுத்தியிருந்தமை சிறப்பிக்கத்தக்கதும் புகழ்ப்படுத்தக் கூடியதுமாகும்.

பாலியல் கல்வி பாடசாலைகளில் கூட கற்றுக் கொடுக்கப்பட வேண்டும் எனக் கருதப்படுகின்ற இக்கால கட்டத்தில், ஒரு பெண் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டமை பகிரங்கப்படுத்தப்பட்டால் அது அருவருக்கத்தக்கதும் அநியாயத்துக்குரியதும் என்று முத்திரை குத்துவதா?

பெண்மை இங்கே இழிவுபடுத்தப்பட்டிருப்பதாக விமர்சனங்கள் வெளிவந்திருந்தன. இந்தக் கவிதை எதையுணர்த்திநிற்கின்றது என்பதை கவனிப்பதை விடுத்து, அதன் சொற்பிரயோகங்களைக் குற்றவாளிக்கூண்டில் ஏற்றுவது வேதனைப்படத்தக்கது. இக்கவிதைக்கூடாக கோணேஸ்வரியின் வேதனையினதும், இந்தத் தாயைக் கொடூரப்படுத்தியவர்களின் வக்கிரங்களினதும் யதார்த்தத்தை உணர வேண்டுமே தவிர ஒவ்வொரு வரும் தங்களை நிர்வாணப்படுத்துவதாகக் கற்பனை செய்யக்கூடாது எனக் கேட்டுக் கொள்ளவிரும்புகிறேன்.

**ப்ரீத்திவி வட்டவளை**

# வெறும் கோபவீச்சுக்களே!

கோணேஸ்வரிகள் கவிதை சற்று கொச்சையாகவே இருந்தது. பாவிக்கப்பட்ட சொற்கள் கடுமையானது. மீண்டும் ஒரு தடவை வாசிப்பதற்குக் கூச்சமாக இருக்கிறது. வெறும் கோபவீச்சுக்கள். வானம் பாடிக் கவிதைகள் பலவற்றை ஞாபகப்படுத்துகின்றன. ''சன்மார்க்கா'' எழுதியது போல கோணேஸ்வரி இக்கவிதையில் இரண்டாவது தடவையாக பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப் பட்டுள்ளார்

**கல்லூரன், கல்முனை**

# நிதர்சனத்தின் அழகு!

செல்வி திருச்சந்திரன், பாத்திமா, சன்மார்க்கா, சிரால் லக்திலக்க ஆகியோர்க்கு,

எமது பண்பாடு, பாரம்பரியம் சம்பந்தமான உங்கள் எதிர்ப்புணர்வு எனக்கு நன்கு புரிகிறது. எனினும் ''கோணேஸ்வரிகள்'' கவிதை ஏற்படுத்திய தாக்கத்தையே சம அளவில் ஏற்படுத்தக் கூடியவாறு வேறு மொழிப்பிரயோகம் கொண்டு கவிதை எழுத உங்களால் முடிந்தால் நானும் உங்கள் பக்கம் தான். எனக்குத் தெரிந்த வரையில் ''கோணேஸ்வரிகளில்'' பாவிக்கப்பட்டுள்ள சொற்கள் தான் அப்பட்டமான நிஜம். நடந்த சம்பவத்தின் நிதர்சனம். அதனை அழகு படுத்தி எழுத முனைந்திருந்தால் அந்தச் சம்பவத்தின் யதார்த்தம்/ தாக்கம் எங்களை அடைந்திராது. ஒரு கற்பனைக் கதையாகவே இருந்திருக்கும்.

எனவே நான் இப்போது கலா, துஷ்யந்தி பக்கம்.

**செல்வி**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# யாழ்ப்பாணம் காணாமல் போனோர் :

# அரசின் ஏமாற்று அறிக்கை அம்பலமாகிறது !

கடந்த பத்தாண்டு காலத்துக்குள் உலகிலேயே காணாமல் போவோரின் பட்டியலில் ஈராக் முதலிடத்தையும், இலங்கை இரண்டாம் இடத்தையும் கொண்டுள்ளதாக அண்மையில் வெளியான ஐ.நா. அறிக்கை கூறுகின்றது. இனி வரும் காலங்களில் ஈராக்கையே மிஞ்சி விடும் அளவிற்கு இலங்கையின் உள்நாட்டு நிலவரங்கள் நீண்டு கொண்டே செல்கின்றன.

இப்போதும் வடகிழக்கின் ஒவ்வொரு மூலையிலும் நிலைகொண்டுள்ள படையினரால் கைது செய்யப்பட்டு காணாமல் போகின்ற இளைஞர், யுவதிகளின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே செல்கின்றது.

கிழக்கில் படையினரால் கைது செய்யப்பட்டு கூட்டிச் செல்லப்பட்ட ஆயிரக்கணக்கான இளைஞர், யுவதிகள் பற்றி இன்னமும் எதுவும் தெரியாத நிலையிலேயே அவர்களது குடும்பங்கள் வறுமையிலும் துயரிலும் வாடுகின்றன.

அதே போல் யாழ் குடாநாட்டின் மீதான அரச படைகளின் படையெடுப்புக்குப் பின்னரான காலகட்டங்களிலிருந்து இற்றைவரை 676பேர் அரச படையினரால் கைது செய்யப்பட்டு காணாமல் போயுள்ளார்கள்.

பாடசாலை மாணவர்கள், பல்கலைக் கழக மாணவர்கள், அரச உத்தியோகத்தர்கள், இளைஞர், யுவதிகள் என பலதரப்பட்டோரும், அரச படையினரால் அழைத்துச் செல்லப்பட்டனர். கூட்டிச் செல்லப்பட்ட 676 பேருக்கும் என்ன நடந்தது?

யாழ் குடாநாட்டில் காணாமல் போன இளைஞர், யுவதிகளின் பெற்றோர்கள் ஒன்று சேர்ந்து ''கைதானோர் காணாமல் போனோர் பாதுகாவலர் சங்கம்'' மூலம் உள்நாட்டிலும், சர்வதேச ரீதியாகவும் மகஜர்களை அனுப்பி தங்கள் புதல்வர்களை மீட்டுத்தரும்படி வேண்டினர்.

இவர்களின் நெருக்குதல்கள், சர்வதேச சமூகத்தின் கேள்விகளுக்கு பதிலளிக்க வேண்டிய நிர்ப்பந்தத்தை அரச உயர்மட்டத்திற்கு உருவாக்கியது.

செப்டெம்பர் 19ம்திகதி, நல்லூர் கந்தசாமி கோவிலிலும், 21ம்திகதி, யாழ் பெரியமாதா கோவில் முன்பாகவும் உண்ணாவிரதப் போராட்டங்களையும் நடத்தினார்கள். யாழ் அரச அதிபர் ஊடாகவும், சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகள் மூலமும் ஜனாதிபதிக்கும், இராணுவ விசாரணை கமிஷனுக்கும் மகஜர் அனுப்பி நெருக்கடியைக் கொடுத்தனர்.

இந்நிர்ப்பந்தங்களால் பாதுகாப்பு அமைச்சினால் நியமிக்கப்பட்ட பனாகொடை, பந்துலகுணவர்தன ஆகிய இராணுவ உயரதிகாரிகளைக் கொண்ட ஒரு குழு விசாரணைகளை மேற்கொண்டது.

மூன்று கட்டமாக 320 பேர் மட்டும் விசாரணைக்கு அழைக்கப்பட்டு பலாலியில் விசாரணை நடைபெற்றது. இராணுவத்தினரால் ஏற்கெனவே அச்சிட்டு கொண்டு வந்த கேள்விகள் மட்டுமே கேட்கப்பட்டன.


பாதுகாப்பு அமைச்சினால் நியமிக்கப்பட்ட விசாரணைக்குழு தங்களால் கண்டு பிடிக்கப்பட்ட 176 பேர் கொண்ட பட்டியலை யாழ் கச்சேரிக்கு அனுப்பி வைத்திருந்தது. இவர்களில் பலர் விடுதலை செய்யப்பட்டுள்ளதாகவும், இன்னும் பலர் பிணையில் விடப்பட்டுள்ளதாகவும், சிலர் தொடர்ந்து தடுப்புக்காவலில் உள்ளதாகவும் அறிவித்துள்ளது.

எனினும், இந்த 176பேரில் விடுதலை செய்யப்பட்டோர் யார்? எப்பேது விடுதலையாகினர்? பிணையில் விடப்பட்டோர் யார்? எப்போது பிணையில் விடப்பட்டனர்? தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டுள்ளோர் யார்? எங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்ற விவரங்கள் ஏதும் அப்பட்டியலில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. வெறுமனே 176 பெயர்களும், அவர்களின் விலாசங்களும், கைதான திகதிகளும் மட்டுமே காணப்பட்டன.

கைதானோர், காணாமல் போனோர் பாதுகாவலர் சங்கமோ காணாமல் போன 600 பேர் தொடர்பாக தாம் வெளியிட்டுள்ள பெயர்ப் பட்டியலில் உள்ள ஒரு பெயர் கூட பாதுகாப்பு அமைச்சு வெளியிட்ட கண்டுபிடிக்கப்பட்டோர் பட்டியலில் இல்லையென்றும்,

1997 ஜனவரி மாதத்திலும் அதற்கு முன்னரும் விடுதலை செய்யப்பட்டவர்களின் பெயர்களைத் திரட்டியே 176 பேர்கள் அடங்கிய பட்டியலை அது வெளியிட்டுள்ளது என்றும்,

காங்கேசன்துறை, அனுராதபுரம், நீதிமன்றங்களாலும், பலாலியிலும் விபரம் அறிவிக்கப்பட்டவர்கள், விடுவிக்கப்பட்டவர்கள் ஆகியோரின் பெயர்களே அப்பட்டியலில் உள்ளன என்றும்,



முருகேசு வடிவேலு (21)

இப்பட்டியல் தமக்கு வேதனையையும், ஏமாற்றத்தையும் தருவதாக உள்ளது என்றும் தெரிவித்துள்ளது. கூடவே பிள்ளைகளைத் தேடும் பெற்றோரையும், கணவன்மார்களைத் தேடும் மனைவிமாரையும் ஏமாற்றும் வெறும் கண்துடைப்புச் செயலே இது எனவும் தெரிவித்துள்ளது.

இதற்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் இச்சங்கத்தைச் சேர்ந்தவர்களை அழைத்துப் பேசிய ஒவ்வொரு இராணுவ உயர் அதிகாரிகளும் ஒருவருக்கொருவர் முரண்பட்ட வகையிலேயே கருத்துத் தெரிவித்துள்ளார்கள்.

இவர்களுடனான நேர்காணலில் விஜேரட்னா, மெண்டிஸ் ஆகியோர் மேலிடத்துடன் தொடர்புகொண்டு கைது செய்யப்பட்டவர்களையும் காணாமல் போனவர்களையும் தேடிக் கண்டு பிடித்துத் தருவதாக உறுதியளித்துள்ளார்கள்.

இதைவிட பிரிகேடியர் செனவிரட்ன பேசும் போது 'கண்ணாடி உடைந்தால் உடைந்தது தான். அதை ஒட்ட முடியாது. ஜே.வி.பி. காலத்திலும் ஆயிரக்கணக்கான சிங்கள இளைஞர்கள் காணாமல் போயுள்ளார்கள். உண்ணாவிரதம் நடத்துவதெல்லாம் புலிகளுக்கு ஆதரவான விடய'மென்றும் கூறியுள்ளார்.

ஜூலை மாதம் கொழும்பு வந்த கைதானோர், காணாமல் போனோர் பாதுகாவலர் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சித் தலைவர் டக்ளஸ் தேவானந்தா மூலம் ஜனாதிபதியைச் சந்திப்பதற்கு முயற்சிகள் மேற்கொண்ட போதிலும் ஜனாதிபதி சந்திரிகா அவர்களை சந்திக்காமல் தட்டிக்கழித்து விட்டார்.

செப்டெம்பர் 29ம் திகதி மனித உரிமைகள் ஆர்வலரும், வழிக்கறிஞருமான திருமதி மகேஸ்வரி வேலாயுதம் தலைமையில் 'கைதானோர் காணாமல் போனோர் சங்கத்தின் உறுப்பினர்கள் பெற்றோர்கள் கலந்து கொண்ட கலந்துரையாடல் நடைபெற்றது. இன்னமும் தங்கள் பிள்ளைகளுக்காக காத்துக் கொண்டிக்கும் அவர்களின் குரல்கள் கரகரத்தன. கண்கள் பனித்தன. சிலர் துக்கம் தாளாமல் அழுதார்கள்.

அவர்களின் அழுகுரலுக்கும் கண்ணீர்த் துளிகளுக்கிடையேயும் தங்கள் புதல்வர்களைப் பற்றிக் கூறினார்கள்.

✱ **சின்னத்தம்பி ஜெயந்திரன் (25)** சாவகச்சேரி, மீசாலை வடக்கு. சாவகச்சேரி அம்மன் கோவிலடியில் குழாய்க் கிணறு வேலை செய்து கொண்டிருந்த போது 07.08.1996 அன்று அவ்விடம் வந்த கஜபாகு றெஜிமெண்ட் 525 பிரிகேட் (6ம் படைப்பிரிவு) படையினர் இவருடன் வேலை செய்து கொண்டிருந்த இன்னும் மூன்று இளைஞர்களையும் பிடித்துக் கொண்டு சென்றார்கள். மனைவியின் பெயர் தமிழ்த் தேவி. திருமணம் செய்து ஒன்றரை வருடங்கள். எனது கடைசி மகனான இவரை இதுவரை காணவேயில்லை என்கிறார், சாவகச்சேரியைச் சேர்ந்த சின்னத்தம்பி (50).

✱ **துரை சிங்கம் செந்தில்நாதன் (19)** அரியாலை. க.பொ.த. உயர்தர பரீட்சை எழுதுவதற்கு 15 நாட்களுக்கு முன்னர் தான் டியூசன் விட்டு வந்த போது வீட்டில் வைத்து கொழும்புத்துறை முகாம் படையினரால் கூட்டிச்செல்லப்பட்டார்.

கைது செய்யப்படுவதற்கு முன்னர் கொழும்புத்துறை முகாமில் ஒன்று விட்டு ஒரு நாள் ஒப்பமிட்டு வந்தவர். முகாம் பொறுப்பதிகாரி கப்டன் லலித் ஜெயவர்தனாவிடம் முறையிட்ட போது விடுவதாகக் கூறினார். பின்னர் தெரியாதெனக் கூறி விட்டார். யாழ்/ சென். ஜோன்ஸ் மாணவரான இவர் இன்னமும் எங்கே என்று தெரியவில்லை. எல்லோரிடமும் முறையிட்டேன். யாரும் எனது துயரத்தைப் புரிந்து கொள்ளவில்லையே என்கிறார் அரியாலையைச் சேர்ந்த கமலா தேவி.

✱ எனது மகன் **லிங்கப்பிள்ளை விஜயகுமார் (21)** 20.04.1996 அன்று மீசாலையில் வைத்து படையினரால் பிடிக்கப்பட்டார். இவருடன் கூடச் சென்றவர் படையினரால் சுடுபட்டு ஓடிவந்துவிட்டார். இவர் வியாபாரம் செய்து கொண்டிருந்தவர். இவருக்கு என்ன நடந்தென்று தெரியாது. ஜனாதிபதிக்கும் கடிதம் அனுப்பினேன். எந்தப்பதிலும் இல்லை என்கிறார் 65 வயதான புத்தூரைச் சேர்ந்த லிங்கப்பிள்ளை.


✱ **மனுவேற்பிள்ளை ஜேம்ஸ் பிரபாகரன் (26)** யாழ்/ ஸ்ரான்லி வீதியிலுள்ள கடையொன்றில் கணக்காளராகப் பணிபுரிந்தவர். கடையை மூடிவிட்டு வீடு வரும்போது ஆஸ்பத்திரி வீதி சந்தியிலுள்ள செக்பொயின்றில் வைத்து 15.07.1996 அன்று மாலை ஆறு மணிக்கு கைது செய்யப்பட்டார்.

இவரைக் கைது செய்ததை நேரில் கண்டவர்கள் வீட்டில் போய்ச் சொன்னதும், அடுத்த நாள் மனைவி போய் கேட்ட போது பிடிக்கவில்லையென்றனர். ஆனால் சைக்கிள் கிடந்தது. தாய் போனபோது காங்கேசன்துறையில் வைத்திருப்பதாகச் சொன்னார்கள். ஆனால் காட்டவில்லை. இதுவரை இவருக்கு என்ன நடந்தென்று தெரியாது என்கிறார் இவரின் தந்தையான மனுவேற்பிள்ளை.

✱ **நவரெட்ணம் யோகநேசன்(27) செல்லத்துரை சாந்தகுமார் (29)** 23.07.1996 அன்று பகல் நல்லூர் செட்டித்தெருவிலுள்ள வீட்டுக்கு வந்த 512வது றெஜிமெண்டைச் சேர்ந்த 15 படையினர் இவரை கூட்டிச் சென்றனர்.

512வது றெஜிமெண்டின் முகாமொன்று ஆரியகுளம் சந்தியிலுள்ளது. அங்கு போய் கேட்ட போது தெரியாது என்று சொல்லி விட்டார்கள்.

யோகநேசன் மோட்டார் சைக்கிள் மெக்கானிக், சாந்தகுமார் சலூன் வைத்திருப்பவர். இருவரும் மச்சான்மார்கள். பகல் 11.30லிருந்து 2.30 வரையும் படையினர் எங்கள் வீட்டிலேயே நின்றனர். இவர்களுக்கு என்ன நடந்தென்று தெரியாது என்கிறார் யோகநேசனின் தந்தையாரான நவரெட்ணம்.



து. செந்தில்நாதன் (19)

✱ **வடிவேலு கண்ணதாசன் (21)** யாழ்/ கன்னாதிட்டியில் நகை வேலை செய்பவர். 50ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகள், 15 ஆயிரம் ரூபா புணம் ஆகியவற்றுடன் சாவகச்சேரி செல்லும் போது நுணாவில் செக்பொயின்றில் 26.08.1996 பகல் கைது செய்யப்பட்டுள்ளார். இவர் சென்ற சைக்கிள் அதே முகாமில் இருந்தது. ஆனால் கண்ணதாசன் தான் இல்லை. முகாமிற்கு பல தடவை போய்க் கேட்டேன். தெரியாதென்றே சொல்லி விட்டார்கள் என்கிறார் கண்ணதாசனின் தந்தையார் வடிவேலு.

**கந்தசாமி சுபோகரன்(18)** க.பொ.த உயர்தர வகுப்பு மாணவன். (நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி) டியூட்டரியில் இருந்து வெளியில் வந்தபோது இவருடன் படிக்கும் என். சிவநேசன், சசிகாந்த் ஆகிய மூவருடன் காணாமல் போயுள்ளார்.

512 பிரிகேட் செக்பொயின்ட் தாண்டும் போது பிடிபட்டுள்ளார்கள். இதுவரை எங்கே என்று தெரியவில்லை என்கிறார் இவரின் தாயார் அழுகையுடன்.

✱ **செல்வன் தெய்வேந்திரன் (22)** 04.04.1997 அன்று காலை 8மணிக்கு சுற்றிவளைப்பின்போது மாவடி வீட்டில் வைத்து கைது செய்யப்பட்டார். இவர் சிறுவயது முதலே ஒரு கண் பார்வையற்றவர். சூரியக்கதிர் நடவடிக்கையின் போது இடம் பெயர்ந்து வவுனியா சென்று, அங்கிருந்து திருமலை, சென்று கப்பல் மூலம் யாழ் சென்றவர். மாவடி முகாம் படையினர் தான் இவரை பிடித்தார்கள். இவரை பிடித்துக்கொண்டு போனதை ஊரில் பார்த்துள்ளார்கள் என இவரின் தமக்கை எழுதிய கடிதத்தை காட்டினார் தெய்வேந்திரனின் அண்ணன்.

✱ இதைவிட, **இரத்தினம் கிருஷ்ண குமார்** மாவடி 04.04.1997 அன்று சுற்றிவளைப்பின் போது மாவடி முகாம் படையினரால் கைது செய்யப்பட்டார். இவர் கூலி வேலை செய்பவர். இவருக்கு 2 வயது குழந்தை ஒன்றும் உள்ளது.

✱ **சின்னையா சோமாஸ்கந்தர் (25)** யாழ் பல்கலைக்கழக மாணவன் வீடு திரும்பும் வழியில் கைதடி முகாம் படையினரால் கைது செய்யப்பட்டார்.

இப்படியிப்படி எம்கண்முன்னாலேயே எமது பிள்ளைகளை பிடித்து விட்டு எப்படி இவர்கள் இல்லையென்று சொல்வார்கள் என கதறிய மூதாட் யாழ் அரியாலையைச் சேர்ந்த கமலாதேவி (50). எனது பிள்ளை ஆயுதங்களுடன் அல்ல, பாடசாலைப் புத்தகங்களுடன் தான் பிடிபட்டான் என்கிறார் இவர்.

676 பேரின் பெயர்ப்பட்டியல் கைதானோர் காணாமல் போனோர். பாதுகாவலர் சங்கத்திடம் உள்ளது. இதைவிட 720க்கு மேற்பட்டோர் காணாமல் போயிருக்கலாமென நம்பப்படுகிறது.

70க்கு மேற்பட்ட இளம் பெண்கள் கைக்குழந்தைகளுடன் தங்கள் கணவன்மார்களை இழந்த நிலையில் உள்ளார்கள். இவர்களின் எதிர்காலம் என்னாவது?

காணாமல் போன எங்கள் புதல்வர்களைப் பற்றி உங்களுடன் பேசுவதற்கு ஒரு சந்தர்ப்பம் தாருங்கள் என ஈ.பி.டி.பி. தலைவர் டக்ளஸ் தேவானந்த மூலம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் மீண்டும் கேட்டுக்கொண்டு காத்துக்கிடக்கிறார்கள் கைதானோர் காணாமல் போனோர் பாதுகாவலர் சங்கத்தைச் சேர்ந்தோர்.

ஒழுக்கமும் கட்டுப்பாடும் நிறைந்தவர்கள் தான் சிறிலங்காப் படையினர் என பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் கூறியுள்ளார். ஒழுக்கமும் கட்டுப்பாடும் நிறைந்த சிறிலங்காப் படையினரால் இரண்டு வருட காலத்துக்குள்ளேயே 700க்கு மேற்பட்டோர் குடாநாட்டில் காணாமல் போயுள்ளார்கள். வெற்றிக்கொடி/ சிங்கக் கொடி நாட்டிய 'சமாதானப் படை'யினரின் சாதனை தான் என்னே? இந்த சாதனைக்கு அடியெடுத்துக் கொடுத்த அரசாங்கத்தின் 'தீர்வு'த்திட்டம் தான் என்னே? இந்தத் திட்டத்துக்கு 'சமாதானத்துக்கான யுத்தம் 'என்று பெயர் வைத்த புத்திசீவித்தனம் தான் என்னே? அந்த சமாதான யுத்தத்தக்கு ஆதரவளித்து அவசரகாலச்சட்டத்துக்கு மாதாமாதம் கையுயர்த்திக் கொண்டே தமிழ் மக்களுக்காக முதலைக் கண்ணீர் வடிக்கும் தமிழ்க் கட்சிகளின் சாமர்த்தியம் தான் என்னே? எல்லாவற்றுக்கும் மேலாக ஐ.தே.க. காலத்தில் காணாமல் போனவர்களின் எண்ணிக்கையுடன் (60,000) இப்போது காணாமல் போனவர்களின் எண்ணிக்கையை (600) ஒப்பிட்டு இந்த அரசாங்கத்தில் மனித உரிமைகள் மேம்பட்டிருப்பதாக அறிக்கை விடும் மனித உரிமை வாதிகளின் பிழைப்புவாதம் தான் என்னே?


○

எழிலரசன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





## கற்பகப் பணிகள் கட்டுரை: ஒரு குழப்பவாதியின் சிந்தனைகளே !

ஜூன் 19 - ஜூலை 02 இதழில் வெளியான 'கற்பகப் பணிகள்' என்ற செய்தி தொடர்பாக இதனை எழுதுகிறேன். தற்போதும் பனை அபிவிருத்திச் சபையின் தலைமை அலுவலகம் யாழ்ப்பாணத்தில் தான் உள்ளது. இதனை கொழும்புக்குக் கொண்டு செல்வதற்கு எதுவிதத்திலும் யாரும் நடவடிக்கை எடுக்கவில்லை. யாழ் தலைமை அலுவலகம் தனக்கென ஒரு கட்டிடம் இல்லாமல் (முதல் இருந்த இடத்தில் இராணுவம் குடியிருப்பதனால்) தற்போது சந்தைப்படுத்தும் பகுதி இருந்த இடத்திலேயே மிகுந்த நெருக்கடிக்கு மத்தியில் இயங்கி வருகின்றது. இருப்பினும் இந்த வருட வரவு செலவுத்திட்டத்தில் ஒன்றரை மில்லியன் ரூபா தற்போதைய தலைமையகக் காணியை கொள்முதல் செய்வதற்கென ஒதுக்கப்பட்டுள்ளது. காணி உரிமையாளருடன் பேச்சுவார்த்தை நடாத்தி, இது பற்றிக் கடந்த மாதம் தலைவரால் உரிமையாளருக்கு கடிதம் ஒன்றும் அனுப்பப்பட்டது. இது இப்படி இருக்க தலைமை அலுவலகம் கொழும்புக்குக் கொண்டு செல்ல நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்பது அபத்தம். தற்போது கொழும்பில் இயங்கும் காரியாலயம் தற்போதைய தலைவரால் ஏற்படுத்தப்பட்டதல்ல. யாழ்ப்பாணத்திற்கு தலைமையலுவலகத்தை மாற்றும் பொருட்டே 1995ம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் கொள்முதல் செய்து வைக்கப்பட்ட 15 மில்லியன் ரூபா பெறுமதியான பொருட்களை தலைமைப் பதவியைப் பொறுப்பெடுத்த பின்பு 1995ல் தலைவர் யாழ்ப்பாணம் சென்று வந்து யாழ்ப்பாணத்திலுள்ள கைதடி பனைவள ஆராய்ச்சி நிலையத்திற்கு அனுப்பி வைத்தார். ஆனால் இப்பொருட்கள் கப்பலில் ஏற்றும்போதே மூன்றாம் கட்டப் போர் ஆரம்பமானது. இதனால் ஒரு சில பாரிய பொருட்களை எம்மால் அனுப்ப முடியாமல் போய்விட்டது. இப்பொருட்கள் யாவும் அங்கு அனுப்பி ஸ்திரமாக்கப்பட முன்பு கொழும்பில் நன்கு ஸ்தாபிக்கப்பட்ட கந்தோரினை ஒரு சில நாட்களில் மூடுவிழா செய்து யாழ்நகர் கொண்டு செல்வது உடன் முடியாத காரியம் என்பது மரியானுக்கு விளங்கவில்லைப் போலும்.

தலைவர் பனை அபிவிருத்திச் சபையைப் பொறுப்பேற்ற போது நான்கு வருடங்களுக்கான கணக்கறிக்கைகள் செய்யப்படாமல் இருந்தன. அதே போல் 3 வருட கணக்காய்வாளர் நாயகத்தின் கணக்கு அறிக்கைகளுக்கு பதில் கொடுக்கப்படாமலும் இருந்தது. இவை யாவற்றையும் ஒரு வருடத்தில் செய்து முடிப்பித்து 1996ம் ஆண்டு கணக்கறிக்கையை குறிப்பிட்ட மார்ச் மாதத்திற்கு முன்பு முடிப்பித்து, கணக்குகளை ஒழுங்காக்கி இருப்பதில் தவறுகள் உள்ளதா?

பனை அபிவிருத்திச் சபையின் செயற்பாடுகள் வடக்குக் கிழக்கு மாகாணத்தில் உள்ள மாவட்டங்களிலும் புத்தளம், அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களிலும் ஸ்தாபிக்கப்பட்டு அங்கு ஊழியர்கள் நியமிக்கப்பட்டு ஒரு மாவட்ட இணைப்பாளரின் கீழ் மாவட்டக் காரியாலயங்கள் இயங்கி வருகின்றன. சகல மாவட்டங்களையும் இணைத்து அவர்களுடன் நேரடித் தொடர்பு வைத்திருக்க வேண்டியது ஒரு தலைமையகத்தின் கடமை. கடிதத் தொடர்பு, தொலைபேசித்தொடர்பு, வாகனப் போக்குவரத்து ஆகிய வசதிகள் யாவும் ஒரு தலைமை அலுவலகத்துக்கு முக்கியம். ஏனெனில், தலைமையகம் உடனுக்குடன் ஏனைய மாவட்டங்களுடனும், அமைச்சுடனும், திறைசேரியுடனும் ஏனைய திணைக்களங்களுடனும் தொடர்பு கொள்ள வேண்டும். தற்போதைய போர்ச்சூழலில் இது சாத்தியமாகுமா?

தற்போதைய சூழ்நிலையில் தலைவர் யாழ்ப்பாணத்தில் இருந்தால் அமைச்சுத் தொடர்புகளோ அல்லது திறைசேரித் தொடர்புகளோ உடனுக்குடன் மேற்கொள்ள முடியாது. கொழும்பில் ஏனைய உத்தியோகத்தர்கள் (கணக்காளர்) உட்பட இல்லாத காரணத்தினாலேயே முன்னாள் தலைவர் க. நடராசா அவர்கள் மீது வசைகள் பாட வேண்டிய நிலை ஏற்பட்டது.

தற்போதைய சூழ்நிலையில் பனை அபிவிருத்திச் சபை யாழ் குடா நாட்டில் இருந்து செயற்பட முடியவில்லை தான் ஏற்றுக் கொள்கின்றோம். இந்தச் சூழலைப் பயன்படுத்தி கொழும்பில் தலைவரால் பல ஆராய்ச்சிகள் முடுக்கி விடப்பட்டு வெற்றியும் காணப்பட்டுள்ளன. பனம் பழத்திலிருந்து பெக்ரின் என்னும் பதார்த்தம் கண்டறியப்பட்டு இதனை இந்தியாவில் உள்ள மைசூர் உணவுத்தொழிநுட்ப நிலையத்தின் பரீட்சார்த்தத்துக்காக அனுப்பப்பட்டுள்ளது. பனங்களிலிருந்து பற்பசை, சம்பூ போன்றவை தற்போது இங்கு ஆராய்ச்சி செய்யப்பட்டு உற்பத்தி செய்யப்பட்ட பரீட்சார்த்த.பொருட்கள் சீ.ஐ.ஆர். எஸ்.ஆர். இற்கு அனுப்பப்பட்டுள்ளது.

அடுத்து மலேசியாவில் உள்ள ஒரு தமிழ் அன்பர் ஒருவரின் உதவியுடன் பனையில் இருந்து பனையில் ஏறாமலேயே கள் எடுக்க ஒரு இயந்திரம் செய்யப்பட்டு பரீட்சார்த்த நிலையில் உள்ளது. அடுத்து எமது அலுவலக உத்தியோகத்தர் ஒருவர் பனை ஏறும் ஒரு விசைக் கருவியைக் கண்டுபிடித்துள்ளார். இவையாவும் பனையின் தொழிநுட்ப வளர்ச்சிக்கு செய்யப்பட்ட எமது பங்களிப்புக்கள்.

கொழும்புக்கு கணக்காளர் மாற்றப்பட்டது தவறு என்ற கருத்துப்பட மரியான் எழுதியுள்ளார். கணக்காளர் இங்கு இல்லாமல் விட்டதனால் தான் க. நடராசாவின் காலத்தில் பல சீர்கேடுகள் நடைபெற்றன. அதனை தற்போதைய தலைவரும் மேற்கொள்ள வேண்டும் என்று இவர் கருதுகிறாரா?

ஆம், தலைவருக்கு கொழும்பில் தனிப்பட்ட தொழில் உண்டு. ஏனைய பல தலைவர்களுக்கும் அப்படியே. ஆனால், அதனைத் தியாகம் செய்து காலை 9மணியில் இருந்து பி.ப.5 மணி வரையும் சனி, ஞாயிறு தினங்களிலும் வேலை செய்கின்றார். இது அவரது சொந்த தொழில் செய்யும் இலட்சணமா?

ஏறத்தாழ 15 ஆண்டுகளுக்குப் பின்பு ஒழுங்கான முறையில் எழுத்துப் பரீட்சை நேர்முகப் பரீட்சை வைத்து பனை அபிவிருத்திச் சபையில் வேலை செய்பவர்களை ஆளணித் திரட்டில் சேர்ப்பதற்காக நியமனம் வழங்கப்பட்டுள்ளது. இதே வரிசையில் ஒரு நிரந்தர பொதுமுகாமையாளர் நியமிக்கப்பட்டுள்ளார். பொது முகாமையாளர், ஆராய்ச்சி உத்தியோகத்தர், விரிவாக்கல் உத்தியோகத்தர் ஆகியோர் யாழ் தலைமை அலுவலகத்தில் தான் வேலை செய்கின்றார்கள். இதனால் யாழ் தலைமையலுவலக கடமைகள் அனைத்தும் எதுவித தடங்கலும் இன்றி நடைபெறுகின்றன.

சபை ஆரம்பிக்கப்பட்ட பின்பு தற்போது மட்டுமே ஆளணித் திரட்டில் மாற்றம் செய்யப்பட்டு அமைச்சின் அனுமதிக்காக அனுப்பப்பட்டுள்ளது.

நிர்வாக நடவடிக்கையாற்றி சம்பள அதிகரிப்பு வழங்க ஆட்கள் இல்லையென்று யாரும் கூறவில்லை. இந்த மாதமே இந்த அதிகரிப்புக்குரிய பணம் தலைவரால் அமைச்சிடமும், திறைசேரியிடமும் கதைத்துப் பெறப்பட்டுள்ளது. இந்த மாதம் தொடக்கம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த வருடம் எமக்கு மூன்று முறை கப்பலில் பொருட்கள் அனுப்பப்பட்டன. இவை யாவும் பணம் கொடுத்தே யாழ்ப்பாணத்தில் கொள்வனவு செய்யப்பட்டன, கடனுக்கல்ல. 1995ம் ஆண்டு தலைவராய் பொறுப்பேற்ற காலம், கடனுடன் பொறுப்பேற்ற காலம். அதனைப் பிந்தியே செலுத்த வேண்டி ஏற்பட்டது. இதுவும் தனிப்பட்டவர்களுக்கல்ல. எம்மால் கூட்டுறவுச் சங்கங்களிடம் மட்டுமே கொள்முதல் செய்யப்பட்டது.

மேலதிக ஊழியர்கள், தற்போதைய தலைவர் காலத்தில் நியமிக்கப்பட்டது என்ற மாயை கொடுக்கப்பட்டுள்ளது. இந்த மேலதிக ஊழியர்கள் தலைவரால் நியமிக்கப்படவில்லை. ஏற்கெனவே மாதாந்த அடிப்படையில் இருந்த ஊழியர்களை நிரந்தர ஊழியர்கள் ஆகச் சேர்க்கும் பொருட்டு நேர்முகப் பரீட்சை வைக்கப்பட்டு தற்போது 25 ஊழியர்கள் நிரந்தரமாக்கப்பட்டுள்ளார்கள். இது 15 வருடங்களின் பின்பு நடந்த ஒரு அரிய செயல்.

அடுத்து புதிய தலைவர் வந்த பின்பு அவரது காலத்தில், எவரும் வேலைக்குப் புதிதாகச் சேர்த்துக் கொள்ளப்படவில்லை.

கப்பலில் பொதி ஏற்றி வருவது சம்பந்தமாக அரச அதிபருடனும், அதிபர், வடமாகாண புனர்நிர்மாண புனர்வாழ்வு அதிகார சபையுடனும் தொடர்பு கொண்ட போது அத்தியாவசிய சேவை ஆணையாளரின் கப்பல் மட்டுமே இலவசமான சேவை வழங்க முடியும். அரசாங்க அதிபரினால் வாடகைக்கு அமர்த்தப்பட்ட கப்பல்களை இலவசமாக விடமுடியாது என்று கூறப்பட்டுள்ளது. இது பற்றி என்னால் கடந்த டி.டி.சி. கூட்டத்திலும் வினா எழுப்பப்பட்டது.

எந்த விடயத்திலும் ஒரு குழப்ப நிலையை உண்டு பண்ணும் ஒருவரின் சிந்தனை மட்டுமே இது. இதை ஒரு சில வழிகளில் பார்க்கும் போது பழையவர்களுக்கு வக்காலத்து வாங்கும் நோக்குடனும் புதியவர்களுக்கு கரி பூசுவதனையும் நோக்கமாகக் கொண்டது எனக் கூறலாம்.

**வி. ரகுநாதன்**
*தலைவரின் பிரத்தியேக உதவியாளர்,*
*பனை அபிவிருத்திச் சபை*

## விவேகிக்கு ஒரு சபாஸ் !

சரிநிகர் இதழ் 127ல் பிரசுரிக்கப்பட்ட திருகோணமலை பற்றிய விவேகியின் கட்டுரை உண்மைகளைப்புலப்படுத்தியிருந்தது.விவேகிக்கு பாராட்டும், தொடர வாழத்துக்களும்!

குறிப்பாக 'பறிபோன தலைவர்கள்' என்ற கட்டுரையில் தற்போதைய அரசியல் (ஏ)மாற்றுக்களும், தேர்தல்களும் இனங்களிடையே எவ்வளவு தூரம் விரிசலை ஏற்படுத்தியுள்ளது என்பதை அறியக் கூடியதாக உள்ளது.

தேர்தலுக்கு முன்னர் வேட்பாளர்கள் கூட்டுச் சேர்ந்து எத்தனையோ அரசியல் நாடகங்களை மக்கள் முன் நடிப்பதும், பதவி வந்ததும் பட்டியலில் அடுத்து இருப்பவர் பங்கு கேட்டு 'குட்டை'யை குழப்புவதும் சகஜமாகிவிட்டது.

அமரர் மர்ஹூம் மஹ்ரூப் (பா.உ) அவர்களின் ஆசனத்திற்கு அடுத்து வருபவர் பற்றி 'விவேகி' அழகாக உரைத்துள்ளார்.

இனவெறியில் உருவாகிய 'பெரும் கட்சிகள்' நிச்சயமாக பெருந்தன்மையுடன் தமிழ் மக்களின் பிரதிநிதித்துவத்தை வழங்குமென எதிர்பார்க்க முடியாது. (இது சார்பாக இம்மாதம் 6ம்திகதி வீரகேசரியில் எம்.எம்.அபுல்கலாம் குறிப்பிட்டுள்ளார்.) மர்ஹூம் மஹ்ரூப் அவர்களின் இடத்திற்கு எம்.எஸ்.ராஜிஸ் அவர்களை அமர்த்துவதே ஜனநாயகமும் தர்மமும்! அப்படியெனில் பட்டியலில் மேலுள்ள இருவர் இராஜினாமா செய்தல் வேண்டும். அப்படி நடைபெற எந்த வாய்ப்பும் இல்லையென வரலாற்றுச் சம்பவங்கள் சான்று பகர்கின்றன.

திருகோணமலையின் பாராளுமன்ற உறுப்பினர் பதவிக்கு பட்டியலில் முன்னுள்ளவருக்கும், அடுத்துள்ளவருக்கும் ஏற்பட்ட சிக்கல் ஒரே இனங்களுக்குள்ளும், ஒரே ஆதரவாளர்களுக்குள்ளும் ஏற்பட்ட விரிசல்களையும் பிரதேச வெளிப்பாட்டு உணர்வுகளையும் இலகுவில் மக்கள் மறந்திருக்க மாட்டார்கள். இவையனைத்திற்கும், தற்போதைய தேர்தல் முறை தான் காரணம் என்பது தெளிவு.

இத்தேர்தல் முறைகூட சிறுபான்மையினருக்காகவே கொண்டு வரப்பட்டதையும் மறுக்க முடியாது. தமிழர் விடுதலைக் கூட்டணி, எதிர்க்கட்சியாக ஒரு காலத்தில் வந்தமை, 'பௌத்த தர்மவாதி'களின் நெஞ்சில் ரணமான வடுவை ஏற்படுத்தி விட்டது. அதனால் அன்று ஏற்படுத்திய 'தேர்தல் சூத்திரம்' இன்று வரை நோக்கம் மாறாமல் பிசகின்றி பலிப்பது கண்கூடு.

***கனகசபை தேவகடாட்சம்***
***மல்லிகைத்தீவு***

## சரிநிகர் சரியாது இருக்கட்டும் !

சரிநிகர் இத்ழ் 126ல் கே.எஸ் சிவகுமாரன் அவர்கள் எழுதிய ''டொக்குமென்டரி என்றால் என்ன?'' என்ற கட்டுரையை படித்தேன். இதுவரை 'Documentry Film' என்று நாங்கள் பார்த்து எடை போட்டிருந்த படங்களும், உண்மையில் விவரணப்படங்கள் என்றால் என்ன என்பதையும் தெளிவுற அறியக் கூடியதாக இருந்தது. அதுதான் அக்கட்டுரையின் நோக்கமும் கூட.

அதைவிட ஒரு பத்தி எழுத்தாளனால் சுவையை, ரசனையைத் தொட்டுக் காட்ட முடியுமே தவிர அதன் முழுமையான அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ள முடியாது. காரணம், ஒவ்வொரு தனி மனிதனுக்கும் ரசனை, அனுபவ மட்டங்கள் வித்தியாசமானவை.

எனவே தேடி, வாசித்து, பார்த்து, தன் அனுபவ மட்டத்தில் ரசித்து உணர வேண்டியது வாசகனின், பார்வையாளனின் பங்காகும்.

எதற்கும் இரண்டு பக்கங்கள் (குறைந்தது) உண்டு. எழுந்தமானமாக எழுந்து ஒரு பக்கத்தை மட்டும் தகர்த்து விட்டு சாதனை படைத்த திறமையால் மார்த்தட்டுவது ஆரோக்கியமானதன்று. எவ்வித கருத்தையும் கூறும் முன் சுய பரிசீலனை அவசியம். அது வளரும் கலைஞர்களுக்கு நிச்சயம் தேவையான ஒன்று. சரிநிகர் சரியாது சரியாக இருந்தால் சரி.

***மாவை வரோதயன்***
***கொழும்பு -5***

## கிழியுங்கள் !

அமெரிக்காவின் செல்வாக்கு இலங்கையில் ஊன்றி இருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது. இலங்கை படிப்படியாக அமெரிக்க கட்டுப்பாட்டுக்குள் சென்று கொண்டிருக்கின்றது. சிங்கள இனவாதிகளின் கண்ணுக்கு இவை தெரியாதிருப்பது கவலைக்குரியது.விடுதலைப் போராட்டங்களை நசுக்குவதே அமெரிக்காவின் முதல் வேலையாகும்.

தெற்காசியாவின் நுழைவாயிலாக இலங்கையை அமெரிக்கா தெரிந்து எடுத்துள்ளது. அப்பொழுது தான் இந்தியா பாகிஸ்தான் போன்ற நாடுகளை வேவுபார்க்கலாம். அணுவாயுதத் திட்டங்களை அறியலாம். வரும் காலங்களில் அமெரிக்க இராணுவ அல்லது கடற்படைத் தளம் இலங்கையில் அமைக்கப்பட சாத்தியக் கூறுகள் உண்டு. அமெரிக்காவின் பொய்முகமூடியைக் கிழியுங்கள். எதிர்வரும் ''சரிநிகரில்'' அமெரிக்காவின் குள்ளநரித்தனத்தை பற்றி விரிவான கட்டுரையை எதிர்பார்க்கின்றேன்.

***தயாளன்***
***மட்டக்குளி***

## வேடிக்கை !

பெ. முத்துலிங்கத்தின் 'எழுதாத வரலாறு' நூலுக்கு எஸ்.வி.ராஜதுரையின் விமர்சனக் கட்டுரை ஒரு துணை நூல் போன்று விபரங்களைத் தருகிறது. இதில் உள்ள சில பிழைகளை சி.சிவசேகரம் சுட்டிக்காட்டியுள்ளமை சரியானதே.

ஆனால் அன்று சிறிமாவையும், இன்று வரை மாவோவையும் களங்கமில்லாத வராகப் பார்க்கும் சிவசேகரம் அவர்கள், பெரியார் தொடர்பாக எஸ்.வி.ஆரின் கருத்தைக் குறை கூறுவது வேடிக்கையாக உள்ளது.

***ஸ்பாட்டகஸ்தாசன்***
***பிராங்பேர்ட்***

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

Registered as a news paper in Srilanka

# பாடசாலைகளிலும் இனவாதம் ?




பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தில் திடீர் திடீரென பெயர்ப் பலகைகள் மாற்றப்படுவது அதுவும் சிங்களத்தில் பெயர்ப் பலகைகள் மாற்றப்படுவது ஒன்றும் புதியவிடயம் அல்ல. ஏற்கனவே வன்னியில் சப்புமல்புர என்ற பெயர் மாற்றப்பட்ட விடயம் சரிநிகர் வாசகர்கள் அறிந்ததே. இப்பொழுது அந்தவரிசையில் பெயர் மாற்றப் பட்டுள்ளது பறையனாலங்குளம்போல ஒரு கிராமம் அல்ல ஒரு தமிழ் அரசினர் பாடசாலை.

கொழும்பு வடக்கு (கொழும்பு 14) கிரான்பாஸ் பிரதேசத்தில் உள்ள புளூமெண்டால் அரசினர் தமிழ் மகாவித்தியாலயம் தான் இவ்வாறு பெயர் மாற்றப்பட்ட பாடசாலையாகும். இதுபற்றி இப்பாடசாலை மாணவர்களும் ஆசிரியர்களும் தமது எதிர்ப்பைத் தெரிவித்த போதும் அவற்றை பொருட்படுத்தாது பலவந்தமாக 'புளூமெண்டால் வித்தியாலய" என்று சிங்களத்திலும், ஆங்கிலத்திலும் எழுதப்பட்ட பெயர்ப்பலகை நடப் பட்டுள்ளது. இது பற்றி சரிநிகருக்கு தெரிய வந்துள்ள தகவல்கள் வருமாறு: புளூமெண்டால் அரசினர் தமிழ் வித்தியாலயம் என்ற பெயரில் இப்பாடசாலை 1936ஆம் ஆண்டு ஜுலை 1ம் திகதி முதல் இயங்கி வருகிறது. இப்பாடசாலை அமைந்துள்ள அதேகாணியின் உள்ளே 'புளூமெண்டால் வித்தியாலய" என்ற பெயரில் வேறொரு தனியான சிங்கள பாடசாலையும் இயங்கி வருகிறது. இக் காணி இவ்விரு பாடசாலைகளுக்கும் சொந்தமான தல்ல. இது கொழும்பு மாநகர சபைக்கு சொந்தமான காணியாகும்.

இரு பாடசாலைகளுக்கும் தனித் தனியான அதிபர்கள் ஆசிரியர்கள், மாணவர்கள், சம்பளப்பட்டியல்கள், தினவரவுப் பதிவேடுகள் கட்டிடங்கள், நுழைவாயில்கள் உள்ளன. இவை உண்மையில் இரு வேறு வேறு பாடசாலைகளே. ஆயினும் இவை அமைந்துள்ள காணிமட்டும் எல்லை பிரிக்கப்படாது தனிக்காணியாக உள்ளது.

புளூமெண்டால் தமிழ் வித்தியாலய நுழைவாயில் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க மாவத்தையிலும் சிங்களப் பாடசாலைக்கான நுழைவாயில் இதிலிருந்து பிரிந்து செல்லும் கிளைப்பாதையொன்றிலும் உள்ளன. அதற்கிணங்க பாடசாலைக்கான பெயர்ப்பலகைகள் அந்தந்த வாயில்களில் நடப்பட்டிருந்தன. சிங்களப்பாடசாலையின் பெயர்ப்பலகை புளூமெண்டால் வித்தியாலய என்று சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் இருக்க தமிழ்ப்பாடசாலையின் பெயர்ப் பலகை மூன்று மொழியிலும் எழுதப்பட்டிருந்தது. ஒக்டோபர் 1ம் திகதி புதன் கிழமை அன்று காலை சிங்களப்பாடசாலையில் சர்வதேச தினத்தை ஒட்டி ஒழுங்கு செய்யப்பட்டிருந்த விழாவொன்றிக்கு அங்கர்(ANCHOR) பால் கொள்கலன் வண்டியொன்று பாடசாலை நுழைவாயில் ஊடாக வருவதில் இருந்த சிரமம் காரணமாக அப்பாடசாலையின் பெயர்ப்பலகை ஆசிரியர்களாலும், மாணவர்களாலும் பிடுங்கப்பட்டது. ஆசிரியர் கருணாரத்தின, இன்னொரு ஆசிரியரான பௌத்த மதகுரு வேறும் ஒரு ஆசிரியர், சிலர் ஆண்டு 11மாணவர்கள் ஆகியோரால் பிடுங்கப்பட்ட இப் பெயர்ப் பலகை திடீரென்று தமிழ்பாடசாலையின் நுழைவாயிலில் இருந்த பெயர்ப்பலகைக்கு மேலாக நாட்டப்பட்டது. இச்செய்கை தொடர்பாக தமிழ்ப்பாடசாலை அதிபர் பாலச்சந்திரன் அவர்களும் பிறஆசிரியர்களும் மாணவர்களும் சிங்களப் பாடசாலை அதிபரான ஒகஸ்ரீன் பெர்னாண் டோவிடம் முறையிட்ட போது இது தற்காலிகமாகவே போடப்பட்டிருக்கிறது என்றும் விழா முடிந்ததும் இப்பலகை அகற்றப்பட்டு விடும் என்றும் கூறினார். ஆயினும் விழாமுடிந்த பின்பும் அந்த அதிபர் அதை அகற்ற நடவடிக்கை எடுக்காதது மட்டுமல்லாமல் நமது ஜனாதிபதியின் பாணியில் (ஒரே நாடு ஒரே இனம்) இது ஒரே பாடசாலை ஒரே மாணவர்கள் பாடசாலைகள் இரண்டையும் ஒன்றாக்க வேண்டும் என்று கூறியும் உள்ளார். இதனால் ஆத்திரம் அடைந்த தமிழ்ப்பாடசாலை மாணவர்கள் இதனை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்தனர். இந் நடவடிக்கை தொடர்பாக தமிழ்ப் பாடசாலை கிரான்பாஸ் பொலிசில் முறைப்பாடு செய்துள்ளதை தொடர்ந்து பாடசாலைக்கு வந்த பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி இந்த விடயத்தில் தலையிட தனக்கு அதிகாரம் இல்லை என்று கூறிச் சென்றுள்ளார். இவ்விடயத்தில் அவரைத் தலையிடுமாறு தாம் வலியுறுத்திய போது 'இதை அனுசரித்துப் போங்கள் இந்த விடயத்தை பெரிது படுத்த வேண்டாம் பெரிது படுத்தினால் மேல் மாடிக்கு கொண்டுபோய் விசாரிக்க வேண்டி வரும்' என்று எச்சரிக்கையும் செய்துள்ளார் என்று கூறுகின்றார்கள் பாடசாலை ஆசிரியர்கள்.

மறுநாட்காலை அதாவது 2ம் திகதி வியாழக்கிழமை அன்று பாடசாலைக்கு வந்து போன கொழும்பு வலைய கல்விப்பணிப்பாளரான இந்திராணி காரியவசம் அவர்களும் பிரதிப் வலையக் கல்விப் பணிப்பாளர் டி.ஏ.ராமநாயக்காவும் மேலும் இது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறிச்சென்ற போதும் இது வரை அச்சிங்களப் பெயர்ப்பலகை அகற்றப்படுவதற்கான எந்த நடவடிக்கைகளும் எடுக்கப் படவில்லை.

இவ்விடயம் தொடர்பாக 03.10.1997 வெள்ளிக்கிழமையன்று பி.ப.2.00 மணியளவில் மேல் மாகாண முதலமைச்சரின் பணிப்பின் பேரில் சிராவஸ்தியில் அமைந்துள்ள மேல்மாகாண சபையில் அதன் செயலாளர்களில் ஒருவரான சில்வா என்பவர் தமிழ்ப்பாடசாலை அதிபரையும் ஆசிரியர் ஒருவரையும் சிங்களப் பாடசாலை ஆசிரியர்கள் இருவரையும் அழைத்து அவர்களின் வாக்கு மூலங்களைப் பதிவு செய்துள்ளார். தமிழ்ப்பாடசாலை அதிபரதும் ஆசிரியரதும் வாக்கு மூலங்கள் மொழிபெயர்ப்பாளர் ஒருவரால் சிங்களத்தில் மொழிபெயர்க்கபட்டு வாக்குமூலம் சிங்களத்தில் எழுதப்பட்ட பின் அதன் கீழ் கையொப்பங்கள் பெறப்பட்டன. அதில் என்ன எழுதப்பட்டிருந்தது என்பது அவர்கள் இருவருக்கும் முழுமையாக புரிந்ததாக கொள்ள முடியாது என்கின்றார்கள் ஆசிரியர்கள். (இங்குள்ள பொலிஸ் நிலையங்களிலும் இதே நடைமுறையே நிலவுவது தெரிந்ததே)

எது எப்படியிருப்பினும் இதுவரை ஆக்க பூர்வமான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை.

இச்சம்பவம் குறித்து பொதுசனத் தொடர்பு ஊடகங்கள் பல இருந்தும் வீரகேசரி, தினக்குரல் பத்திரிகைகள் தவிர்ந்த வேறு எந்த தினசரிகளோ, ஏனைய தொடர்புசாதன ஊடகங்களோ எத்தகைய செய்தியையும் வெளியிட வில்லை. சிங்களப் பத்திரிகை ஒன்றுக்கு செய்தி தெரிவித்த போதும் அதுவும் இதுவரை எதுவித அக்கறையையும் காட்டவில்லை என்று வருத்தத்துடன் தெரிவிக்கின்றார் ஆசிரியர் ஒருவர்.

இனவாதம் பௌத்த மடங்களிலும் அரசியல்வாதிகளின் வாய்களிலும் இருந்து மட்டுமல்ல, இப்போது பாடசாலையில் இருந்தும் புறப்படத் தொடங்கியுள்ளதோ என்று அச்சம் தெரிவிக்கிறார் தமிழ்ப்பாடசாலையின் இன்னொரு ஆசிரியர்.

சி.எச.ராஜா



## பொலிஸ் காட்டு மிராண்டித்தனத்தை விசாரி !

ஒக்டோபர் 7ம்திகதி கொழும்பு லிப்டன் சந்தியில் வடக்கு கிழக்கு யுத்தத்திற்கு எதிராகவும், கொழும்பு முகத்துவாரம் யூரோ ஏசியன் ஆடைத் தொழிற்சாலை நிர்வாகத்தினால் பொலிஸ் அடக்குமுறையினால் வெளியேற்றப்பட்ட 250 ஆடைத் தொழிற்சாலை ஊழியர்களுக்கு நீதி கோரியும், மறியல் போராட்டம் ஒன்று நடாத்தப்பட்டது.

வலயத்தில் நாம், நவசமசமாஜக் கட்சி, லேக்ஹவுஸ் ஊழியர் சங்கம் சோஷலிச தொழிலாளர் சங்கம், ஐக்கிய தொழிலாளர் சம்மேளனம், இலங்கை மின்சார சபை ஊழியர்கள் சங்கம், மார்க்சிய தொழிலாளர் போக்கு, புதிய ஜனநாயகக் கட்சி, மாவோவாத இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, சோஷலிச மக்கள் கட்சி, முஸ்லிம் ஐக்கிய முன்னணி உட்பட பல தொழிற் சங்கங்களும் அரசியல் கட்சிகளிலும் இதில் கலந்து கொண்டன.

வடக்கு கிழக்கு யுத்தத்தை நிறுத்து, யுத்தம் எமக்கு வேண்டாம், யூரோ ஏசியன் ஆடைத் தொழிற்சாலை ஊழியர்கள் மீதான பொலிஸ் காட்டு மிராண்டித்தனத்தை விசாரி, ஆடைத் தொழிற்சாலை ஊழியர்களுக்கு நீதி வழங்கு என்ற கோஷங்கள் எழுப்பப் பட்டன.

முகத்துவாரம் ஆடைத்தொழிற் சாலையை அதன் நிர்வாகம் வேறு இடத்துக்கு மாற்றுவதற்கு முயற்சி செய்வதாகவும், தங்களுக்கு ஒகஸ்ட் மாத சம்பளம் கூட இன்னும் வழங்கப் படவில்லையென்றும், கலந்து கொண்ட ஆடைத்தொழிற்சாலை ஊழியர்கள் எம்மிடம் தெரிவித்தனர்

இதைவிட பொலிசாரால் தாக்கப்பட்ட ஆடைத்தொழிற்சாலை பெண் ஊழியர்கள் பற்றிய, ஜனாதிபதியின் விசேட உத்தரவின் மீதான வெறும் விசாரணை முடிவடைந்தும் நடவடிக்கை ஏதும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லையென்றும் அவர்கள் கவலைப்பட்டனர்.

தங்களுக்கு நீதி வழங்கக்கோரியும், நிர்வாகத்தினால் செலுத்தப்படாமல் இருக்கும் ஊழியர்கள் சேமலாபநிதி பற்றியும் தொழில் அமைச்சுக்கு பல தடவை அறிவித்தும் கூட அவர்கள் மௌனம் சாதிப்பதாகவே தெரிகிறது எனவும் அவர்கள் கவலையுடன் குறிப்பிட்டனர்.

இறுதியில் நவசமசமாஜக் கட்சித் செயலாளர் விக்கிரமபாகு கருணாரத்ன தலைமையில் யூரோ ஏசியன் ஆடைத்தொழிற்சாலை ஊழியர்களும் தொழிற்சங்கப் பிரதிநிதிகளும் நாரஹேன்பிட்டியிலுள்ள தொழில் அமைச்சு காரியாலயத்தை நோக்கி ஊர்வலமாகச் சென்றனர்.

எம்.பிரவிணா

**வடக்கு முஸ்லிம்களின் வெளியேற்றத்தின் ஏழு ஆண்டுகள் பூர்த்தியை முன்னிட்டு வடக்கு முஸ்லிம்களின் உரிமைக்கான அமைப்பு நடாத்தும் போட்டிகள்.**

**கட்டுரை:**
'வட மாகாண தமிழ் முஸ்லிம் மக்களின் இன ஐக்கியமும், ஒருமைப்பாடும்'

**கவிதை: (மரபு-புதுக்கவிதை, ஆறு பக்கங்கள்)**
'சமாதானமே விரைந்து வா'

**பேச்சு: (15 நிமிடங்கள்)**
வட மாகாண முஸ்லிம்கள் எப்போது தாயகம் திரும்புவது?

**ஓவியம்: (பிரிஸ்டல் போட் அளவு)**
'வெளியேற்றப்பட்டபோது ஏற்பட்ட மனோநிலையும் ஏழாண்டு அகதி வாழ்வின் அவலமும் எதிர்பார்ப்பும்'

**முடிவுத் திகதி**
கட்டுரை, கவிதை, ஓவியம் - ஒக்டோபர் 17
பேச்சுப் போட்டி - ஒக்டோபர் 10
விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி
செயலாளர்
வடக்கு முஸ்லிம்களின் உரிமைக்கான அமைப்பு
16-ஏ, ரோஹினி வீதி,
கொழும்பு-06
என்.எம்.ஆர். ஓ.கிளை அலுவலகம்
79/1, குருநாகல் வீதி
புத்தளம்.

**இலங்கையின் தேர்தல் முறையும் அரசியல் கலாசாரமும்**

கருத்தாடல்-2

விரிவுரையாளர்கள்:
1. என்.செல்வகுமார்
(சிரேஷ்ட விரிவுரையாளர், சட்டபீடம், கொழும்பு பல்கலைக்கழகம்)
2. எ.சர்வேஸ்வரன்
(விரிவுரையாளர், வரலாறு, அரசியல் பீடம், கொழும்பு பல்கலைக்கழகம்.)

**1997 ஒக்டோபர் 9 வியாழன் மாலை 4.30க்கு**

**இடம்: இலங்கை மன்றக் கல்லூரி மண்டபம்**

ஏற்பாடு
இலங்கை மன்றம் (SLF)
இனங்களுக்கிடையே நீதிக்கும் சமாதானத்துக்குமான இயக்கம் (MIRJE)

வெளியிடுபவர் :சபாலகிருஷ்ணன் 18/2, அலோ சாலை, கொழும்பு -03 அச்சுப்பதிப்பு : பிறஸ் இன் 7, கெகத்திய பிளேஸ், சிறிமல் உயன, இரத்மலான 1997.10.07

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்